


# காதல் வரி

■ பாலகுமாரன் ■

## 1

ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்தைந்து.'

'ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்தாறு.'

'ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்தேழு, இல்லை. ஐம்பத்தெட்டு, இல்லை. ஐம்பத்தொன்பது, இல்லை. அறுபது, இருக்கிறது.''

''இருக்கிறதா... இருக்கிறதா. மறுபடி பார்.''

''ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று அறுபது.''

''கடவுளே. எனக்கு வேலை கிடைத்து விட்டது. நல்ல வேளையாக எனக்கு வேலை கிடைத்து விட்டது.''

எந்த ரெக்கமண்டேஷனும் இல்லாமல் ஒற்றை ரூபாய் லஞ்சம் கூட கொடுக்காமல் கெஞ்சாமல், கதறாமல் பரீட்சை எழுதி தேர்வு பெற்றாகிவிட்டது. மத்தியசர்க்கார் உத்தியோகம். கணக்காயர் அலுவலகம். மத்திய அரசு மாநில அரசுக்கு உதவித் தொகையும் நிவாரணங்களும் பல்வேறு விஷயங்களுக்கு வழங்கி வருகிறது. மாநில அரசு செலவழித்த விதத்தை மத்திய அரசுக்கு கணக்கு காட்ட வேண்டும். அந்த கணக்குக

ளின் பேரிலேயே அடுத்த சலுகைகள் மாநில அரசுக்கு தர டும்.

அந்த தனிக்கை அலுவலகத்தில் புவனேஸ்வரிக்கு வேலை கிடைத்து விட்டது. பெண்கள் வேலைக்குப் போவதற்கு அற்புதமான இடம். எடுத்தவுடனே நாலாயிரம் ரூபாய் சம்பளம். நகரத்தின் மத்தியில் அலுவலகம். நாலு விதமான பஸ்கள் ஓடுகின்றன. ஒன்பது மணிக்கு டெர்மினலில் ஏ உட்கார்ந்தால் ஒன்பதரைக்கு ஆபீஸ் போய் விடலாம். வை கிள் இருந்தால் இருபது நிமிடத்தில் போய்விடலாம்.

''வேலை இருக்கும். வேலை இல்லாமல் சம்பளம் த வானா. நிதானமா செய்யலாம். ஒரு நாளைக்கு ஒரு நூத்து பது பில் டோட்டல் பார்த்து செக் பண்ணமாட்டியா... சி சமயம் சில வேலைகள் தடதடன்னு முடிக்க வேண்டியிரு கும். பார்லிமெண்ட்ல கேள்வி கேப்பா. ஸ்டேட்மெண்ட் த வேண்டியிருக்கும். அப்போ ராப்பகலா வேலை இருக்கும் இது எப்பவாவது தான். அடிக்கடி நடக்காது.''

அங்கே வேலை செய்கிற தொலை தூரத்து உறவின ஒருவர் இருபத்தேழு வருடம் அனுபவம் உள்ளவர் விவரி துச் சொன்னார். தம்பியின் வகுப்பில் படிக்கிற ஒரு பைய னின் அம்மா தனிக்கை அலுவலகத்தில் முதன்மை கணக் ராய் இருக்கிறார். அவன் வீட்டுக்கு போனபோது அவளு அந்த அலுவலகம் பற்றி விவரித்தாள்.

''லேடீஸ்க்கு இதுமாதிரி சௌகரியமான ஆபீஸ் வே எதுவுமே இல்லை. அநேகமா என் டிபார்ட்மெண்ட்டுக்கு தான் வருவே. டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் என்கிட தான் வருது. அந்த விஷயங்கள் கொஞ்சம் கத்துக்க வேண் யிருக்கும். ஒன்பது நாப்பத்தஞ்சுக்கு உள்ள இருந்தா போதும். அஞ்சுமணிக்கு மூஞ்சி அலம்பிக்கலாம். அஞ் ரைக்கு வெளியே கிளம்பிடலாம். அஞ்சு முப்பத்தஞ்சுக் பஸ் பிடிச்சுட்டா ஆறுமணிக்கு மாம்பலம் போயிடலாம்.

நம்ம ஆபீஸ் வாசல்லேர்ந்து பஸ் கிளம்பறது. அது ஏறிட்டா உட்காரக்கூட இடம் கிடைக்கும். டெர்மின லேர்ந்து உங்க வீடு பத்து நிமிஷம்.

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை லீவு. நீ பே கொண்டு படிக்கலாம், எம்.காம். எழுதலாம். ஆபீஸ் செக் டரி கோர்ஸ் பண்ணலாம். டிபார்ட் எக்ஸாமே நாலு இருக் அஞ்சு வருஷத்துல நாலையும் பாஸ் பண்ணிட்டா கிட ன நேரத்துல நல்ல சம்பளம் வாங்கலாம்.



இந்த காலத்துல வேலை கிடைக்கறது ரொம்ப கஷ்டம்.''

ஆனால் அவள் வீடு இதை இரண்டு விதமாய் எதிர்கொண்டது.

''வேலை கிடைச்சது சந்தோஷம்தான். ஆனா அதைவிட சந்தோஷம் உனக்குக் கல்யாணம் ஆறது. நீ வேலைக்குப் போறதை ஒத்துக்கற பையனா பார்க்கணும். உன்காசை நான் எடுத்துக்கிடாத கட்டுப்பாடா உன் கல்யாணத்துக்கு செலவு பண்ணணும்.''

''மணி ஆறாச்சன்னா புவனா வரலையே ... புவனா வரலையேன்னு மனசு கேட்க ஆரம்பிச்சிடும். ராத்திரி ஒம்பது மணிக்கு வந்தயானா எங்கே போயிட்டு வர்றேன்னு கேட்கத் தோணும். கேட்க பயமாவும் இருக்கும்.''

''இனிமே இந்த வீட்ல உன்னை வச்சு சின்னச் சின்னதா சண்டை நடந்தா ஆச்சரியப்படறதுக்கில்லை.''

அப்பா கவலையோடு பேசினார்:

''ஏன்... ஏன் சண்டை போடணுங்கறேன். பஸ் கிடைக்கலேன்னா ஆறு மணிங்கறது ஏழு மணியாகும். வெற்றி ஊர்வலம், சவ ஊர்வலம்னு பாதை மாத்தினா வீட்டுக்கு வர்றதுக்கு மணி எட்டாகும். ரோடுல ஜாதிச்சண்டை, மதச்சண்டை, பஸ் எரிப்பு, ரெண்டு பேர் கொலை அப்படின்னா வீட்டுக்கு வர்றதுக்கு ஒன்பது பத்தாகும். நீங்க என்ன தலைகீழா நின்னாலும் இதை மாத்த முடியாது.''

''ஊர்ல இவ மட்டுமா வேலைக்குப் போறா, இவ மாதிரி லட்சோப லட்சம் பெண்கள் தினம் வேலைக்கு போயிண்டு வந்துண்டு தான் இருக்கா. என்ன லேட்டுன்னு கேட்கக்கூடாது. கேட்கறவா பொண்ணை வேலைக்கு அனுப்பக் கூடாது.''

அம்மா கத்தினாள்.

''ரொம்ப ஒட்டாதடி. ஒருமணி நேரம் பர்மிஷன் போட்டுட்டு யாரோடயாவது சினிமாவுக்குப் போற பொம்மனாட்டியும் இருக்கா. போறும்படியா அவ வீடு வச்சிருக்கு. அவ வந்தாளா, போனாளா, சாப்பிட்டாளா, தூங்கினாளா அப்பன்னு தெரியாத அக்கறைப்படாத ஒரு வீட்டுலேர்ந்து வந்த பொண்ணு, யார் அவளைப் பத்தி அக்கறைப் படறானோ அவன் கூட போகத்தான் போவா. அது சினிமாவாகவும் இருக்கும். ஓட்டலாகவும் இருக்கும்.

பொன் குழந்தையை வீட்டுக்குள்ள கட்டிக் கொடு... லைன்னா வெளிய எவனாவது கட்டிக் கொடுக்கவான். அ... னால அம்மாவோ, அப்பாவோ அண்ணாவோ, த... கையோ வீட்ல இருக்கற பொன் குழந்தைய அதுவு... வேலைக்குப் போற பொன் குழந்தைய கொஞ்சி சீராட்... ணும். அவ தலையைத் தடவி உனக்கு என்னம்ம... வேணும்னு கேட்கணும். என்னவா இருந்தாலும் என்கிட்... சொல்லுன்னு உற்சாகப் படுத்தணும்.''

''இப்படி கொஞ்சிற போது பொன் குழந்தைகள் எத்... றிப் போக வாய்ப்பு இருக்கு. நாம எது பண்ணாலும் நம்... வீட்ல கேட்கமாட்டா அப்படீன்னு தப்பா கணக்கு போட்... துக்கு சான்ஸ் இருக்கு.''

''வளர்ந்துட்ட பொன் குழந்தைகளைப் புடிச்சும் புடிக்... காதயும், பார்த்தும், பார்க்காதயும் நடத்தணும். நம்ம பு... னேஸ்வரி அப்படியெல்லாம் இல்லை. இப்படி ஒரு... கணக்கே தேவையில்லை.''

வீடு விதம் விதமாகப் பேசியது.

புவனேஸ்வரியின் அப்பாவுக்கு கல்கத்தா டயர் கம்... பெனி சென்னைப் பிரிவில் வேலை. நல்ல சம்பளம். மாசத்... துக்கு ஆயிரம் ரூபா ஓவர் டைம். அந்த டயர் கம்பெனியில்... தினம் பத்துப் பதினைந்து காஷுவல் லேபர்கள் வேலை... செய்ய வேண்டும்.

அவர்களைத் தேர்ந்தெடுப்பது அவருடைய வேலை... அந்த காஷுவல் வேலைக்கு கடும் போட்டி. சனி, ஞாயிறு... இரண்டு நாள் கம்பெனிக்கு விடுமுறை. அன்று ஒட்டடை... அடிக்கவும், வீடு துடைக்கவும், தோட்டம் பராமரிக்கவும்,... பாத்திரம் கழுவவும், பரண் அடுக்கவும் நாலைந்து பே... வந்து விடுவார்கள்.

வரும் பொழுது ஐயருக்குப் பிடிக்கும் என்று காய்... றியோ, வெங்காயம், உள்ளிப் பூண்டோ பழங்களோ... வாங்கி வருவார்கள்.

ஒரு கேஷுவல் லேபருக்கு ஒரு நாளைக்கு நூற்... இருபத்தைந்து ரூபாய் சம்பளம். அப்பா லஞ்சம் வாங்... மாட்டார். இப்படி சௌகர்யங்களை அவர்கள் மூலம் ஏற்... டுத்திக் கொள்வார்.

அவள் வீடு எப்போதும் சுத்தமாக இருந்தது. அவள்... இட்ட பணியைச் செய்ய வீட்டில் எடுபிடி ஆட்கள் எளித...



கக் கிடைத்தார்கள்.

''அப்பா காலேஜ்ல கல்ச்சரல் ப்ராக்டிஸ்ப்பா. வரத்துக்கு எட்டாகும். யாரையாவது அனுப்பேன்.''

''பொன்னுசாமி, சாயந்தரம் குழந்தை காலேஜ் போயிட்டு வரியா.''

ஒரு ஐம்பது வயது ஆளை அனுப்புவார். அந்தக் கிழவன் கல்லூரி வாசலில் காத்திருப்பான். அவளைப் பார்த்ததும் கை குவிப்பான்.

அவள் பின் சீட்டில் மூன்று தோழிகளுடன் பிதுங்கி அமர்ந்து கொள்ள பொன்னுசாமி முன் சீட்டில் டிரைவருக்கருகில் அமர்ந்திருப்பான்.

அவரவரை வீட்டு வாசலில் இறக்கி விட்டு வீடு வர ஒன்பதாகி விடும். ஆனால் பொன்னுசாமி போயிருக்கிறான் என்பதால் எந்த பயமும் வராது. பொன்னுசாமிக்கு டயர் கம்பெனியில் இரண்டு மணி நேர ஓவர் டைம் எப்படியாவது கொடுக்கப்பட்டு விடும்.

''என்ன பொன்னுசாமி, நம்ம குழந்தை எப்படி இருக்கா'' ஓவர் டைமில் ஐயர் பரிவோடு அழுத்திக் கேட்பார்.

''ப்ளாஸ்க்கிலிருந்து அவனுக்கும் ஊற்றிக் கொடுப்பார்.

''என்ன கேக்கறீங்க சாமி.'' பொன்னுசாமி அருகே உள்ள டயர் மீது சாய்ந்து கொள்வார்.

''பொன் குழந்தைடா, வம்புதும்புக்கு போகாம இருக்காளா.''

''அதெல்லாம் ஒரு தப்பும் கிடையாது. குழந்தை செட்டுல, ரெண்டு ரவுசு பார்ட்டி உண்டு. அதுங்க கொஞ்சம் இங்கிலீஷ் வண்டையா பேசும்.''

''போவ்... இங்கிலீஷ்ல வண்டையாப் பேசினா உனக்கு என்னாப்பா தெரியும். உனக்கு தமிழே தகராறு.''

''நீங்க ஒரு வார்த்தை சொல்லி நான் ஐயோன்னு வாயைப் பொத்திக்கினா, அடுத்தாளுக்கு அது கெட்ட வார்த்தைன்னு தெரியாதா.''

''அப்படி சொல்றியா. சுமார் எத்தனை கெட்ட வார்த்தை சொல்லிருப்பாங்க.''

''சாமி, வுடு சாமி''

"டேய் நீ உன் பொண்ணைக் கட்டிக் கொடுத்துட்ட, நான் இன்னும் வரனே தேடலை. என் பயம் உனக்குப் புரியலையா."

"நம்ம குழந்தைகளைப் பத்தி பயப்படாதீங்க சாமி. அப்படி பயந்தீங்கன்னா நீங்க என்னவோ தப்பு."

அவன் அவரை இடித்துரைத்தாலும் அவருக்கு அவன் சொல் வயிற்றில் பாலாய் இறங்கியது. வாயில் பழமாய் இனித்தது.

"நிச்சயமா சொல்றயா."

"தப்பா நடக்கறதுக்குன்னு சில முகம் இருக்கு. நம்ம பாப்பாக்கு அந்த முகம் இல்லை; அந்தக் குணம் இல்லை. அப்படி ஒரு நோக்கமே அந்த புத்தில இல்லை."

"இன்னும் கொஞ்சம் டீ சாப்பிடறயா"

"வேணாம்."

"அங்க இருக்கற எல்லோருக்கும் கொடு." ஃப்ளாஸ்கை தூக்கி அவனிடம் கொடுத்து விடுவார். அந்த ஓவர் டைமில் சந்தோஷமாகக் கணக்கு வழக்கு பார்ப்பார், எல்லாம் முடித்து ஒரு நிறைவோடு ஆபீஸ் பூட்டிக் கொண்டு வருவார்.

வீட்டுக்கு வரும்போது ஒரு புத்துணர்வோடு நுழைவார். குழந்தை எங்கே என்றுதான் தேடுவார். குழந்தை கட்டிலில் முத்திலுமாய் போர்த்திக் கொண்டு தலைகாணியைக் கட்டிக் கொண்டு தூங்கிக் கொண்டிருக்கும்.

அவளுக்கு அடுத்ததாய் இரண்டு பையன்கள். அவர்களும் படிப்பில் திறமைசாலிகளாய் இருந்தார்கள். பெரிய படிப்பு படிக்க வைப்பார் என்று நம்பினார்கள்.

சம்பளம், நல்ல சம்பளம் என்றாலும் மூன்று குழந்தைகளும் கல்லூரியில் படிக்க கை காசு பிய்த்துக் கொண்டு போயிற்று.

"மிஸ்டர், ஜான் சந்த் சோர்தியா, ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா, உங்க ஜெயின் கம்யூனிடி சேர்ந்து ஒரு நன்னாப் படிக்கற பையனுக்கு உதவி வாங்கித் தர முடியுமா. சம்பளம், புஸ்தகம் மட்டும் கொடுத்தாப் போறும். டொனேஷன் நான் பார்த்துக்கறேன்."

ஒரு டயர் டீலரிடம் போய் நின்று தன் மகனின் மார்க்குகளைக் காட்டி அவன் வாங்கிய பரிசுகளைக் காட்டி உதவி



கேட்டார்.

"பதினாலாயிரத்து ஐநூற்றி ஐம்பது ரூபாய் சம்பளம். இருபத்தேழு பர்செண்ட் போனஸ். ஏகப்பட்ட ஓவர் டைம். இந்தாளை எப்படி ஏழைன்னு சொல்றீங்க. இவரைவிட ஏழையெல்லாம் இருக்காங்களே."

ஜெயின் சபை ஜான் சந்த் சோர்தியாவைக் கேள்வி கேட்டது.

"ஒரு பெண், இரண்டு பையன்கள் கல்லூரியில் படிக்க பதினாலாயிரம் ரூபாய் போதும். ஆனால் சாப்பாட்டிற்கு காசு இருக்காது. அவர் மூன்று குழந்தைகளுக்கும் கேட்கவில்லை. ஒரே ஒரு பையனுக்குக் கேட்கிறார். நீங்கள் மறுத்தால் அந்தப் பொறுப்பை அதாவது அந்தச் செலவை நான் ஏற்பதாக இருக்கிறேன். ஏனெனில் கல்கத்தா டயர் கம்பெனியின் தயவு எனக்கு முக்கியமானது. இவர் பெரிய அதிகாரி இல்லையெனினும் கோடவுன் நிர்வாகி.

என்ன டயர் உள்ளே வந்திருக்கிறது என்று உடனுக்குடன் தகவல் சொல்லும் அபிமானி. எனக்கு வேண்டிய டயர்கள் தமிழ்நாட்டில் எந்த மூலையில் யாரிடம் இருக்கிறது என்று இவர் தகவல் தர முடியும்.

அதுமட்டுமில்லை. எனக்குப் போட்டியாளன் என் சிற்றப்பா மகன், என்ன டயர் வைத்திருக்கிறான் என்பதை இவரை விட்டு விசாரிக்கச் சொல்லி அறிந்து கொள்வேன். டயர் விலை ஏறப் போவதை முன்கூட்டித் தெரிந்து கொள்வேன்.

இந்தப் பையன் கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படிக்கிறான். மிதமிஞ்சிப் போனால் வருடத்திற்கு முப்பதாயிரம் செலவாகும். எனக்கு அது பீடா காசு. நான் கொடுத்தால் என் நடத்தை, அவர் நடத்தை இரண்டும் சந்தேகத்துக்கு ஆளாகும். இன்னும் நாலு பேர் தானம் கேட்க முடியாது போகும்.

மார்ச் பத்தாயிரம், ஜூன் பத்தாயிரம், நவம்பர் பத்தாயிரம் என்று மூன்று காசோலைகள் ஜெயின் அறக்கட்டளை தரட்டும். நான் இப்போதே முப்பதாயிரம் காசாகக் கொடுத்து விடுகிறேன்."

சபை ஒத்துக் கொண்டது. முதல் பத்தாயிரம் தொகையைத் தேதியிடாமல் பெரிய கடிதத்தோடு ஜான் சந்த் சோர்தியாவிடம் கொடுத்தது.

அந்த ஜான்சந்த் மிக மிக நல்ல மனிதன். கடவுள் அவனை யாரிடமும் கையேந்த விடவில்லை. நல்ல குடும்பமும், நிறைய சொத்துக்களும் அவனுக்கு இருந்தன.

எனவே தகுதியானவருக்கு உதவி செய்ய அந்த மனிதன் தயாராக இருந்தான். அதே சமயம் தான் ஏமாற்றப்படக் கூடாது என்று விரும்பினான்.

'ஜெயின் அறக்கட்டளை சபை உங்கள் மகன் படிப்புக்கு முதல் உதவிப் பணமாக ரூபாய் பத்தாயிரத்துக்கான காசோலை இத்துடன் இணைத்திருக்கிறது. பலத்த வாக்கு வாதங்களுக்குப் பிறகு சபை உங்கள் மகனுக்கு உதவ முடிவு செய்திருக்கிறது.

' சபையின் இந்த உதவியை மதிக்கும் வண்ணமாய் உங்கள் மகனுடைய ஒவ்வொரு மாதாந்திர தேர்வு, மதிப்பெண் குறிப்பேடு எங்கள் சபையின் அங்கத்தினரான ஜான் சந்த் சோர்தியாவிடம் அளிக்கப்பட வேண்டும்.

மதிப்பெண்கள் குறைந்தாலோ, நடத்தைகளில் குறையிருந்தாலோ இந்த உதவி முன்னெச்சரிக்கையின்றி நிறுத்தப்படும். உங்கள் மகன் இந்த உதவியை நன்கு பயன்படுத்திக் கொள்வான் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

எங்கள் நெஞ்சில் குடிகொண்டிருக்கும் தீர்த்த ரங்கர்கள் உங்களையும், உங்கள் மகனையும் ஆசீர்வதிக்கட்டும்;

''ஜான் சந்த் நீ வயசல சின்னவன்ப்பா. நான் உன்னை நமஸ்காரம் பண்ண முடியாது. அம்பி, நமஸ்காரம் பண்ணு. அபிவாதயே சொல்லிப் பண்ணு. ஜான் சந்த் மகாவிஷ்ணு அம்சம். சிவ சொரூபம். அவனுக்காக தினம் ஒரு விளக்கு நம்மாத்துல ஏத்துவோம். அவனுக்கு மனக்கிலேசமே வரக் கூடாதுன்னு நூத்தெட்டு காயத்ரி தினம் பண்றேன். உன்னால முடிஞ்சா நீயும் தினம் காயத்ரி ஜபம் சொல்லு. ஜபம் முடிஞ்சதும் உள்ளங்கைல ஜலம் எடுத்து இந்தப் பலன் மொத்தமும் ஜான் சந்த் சோர்தியாவுக்கு போகட்டும்னு தத்தம் பண்ணு.''

''அவன் நல்லவன்டா. ரொம்ப ரொம்ப நல்லவன். இந்தக் காசுகூட ஜெயின் சபை கொடுத்திருக்காது. இவன் தான் கொடுத்துருப்பான். தான் உதவி செய்யறது தெரிய கூடாதுங்கிறதுக்காக ஜெயின் சபை மூலமா தரான்.

எப்போ அவன் கூப்பிட்டாலும் நீ போகணும். பெருக்க சொன்னாப் பெருக்கணும். துடைக்க சொன்னா



துடைக்கணும்.''

ஆனா ஜான் சந்த் சோர்தியா அம்மாதிரி உத்தரவுகள் எதும் பிறப்பிக்க வில்லை. அவன் வள்ளல் ஜாதி. வழங்கி விட்டு மறந்து போகும் ஜாதி.

''அப்பா என் படிப்புக்கு முப்பதாயிரம் செலவாகா தேப்பா. புஸ்தகத்தோட சேர்த்தா பதினைஞ்சு பதினாறு தானே ஆகும்.

''நான் உனக்கு மட்டுமா வாங்கினேன். உங்கண்ணாக்கு, உங்கக்காவுக்கு சேர்த்துதானே. ஆனால் இத்தோடு தன் கையேந்துதலை புவனேஸ்வரியின் அப்பா நிறுத்தி விடுவதில்லை.

கெட்டிக்கார மாணவர்களுக்கு எங்கேயோ தேர்வு நடக்கிறது என்று கேள்விப்பட்டு அங்கு பையனை விரட்டி அழைத்துப்போய் தேர்வு எழுத வைத்து ஐந்தாயிரம் உதவித் தொகை, ஐந்தாயிரம் வட்டியில்லாக் கடன் என்று வாங்கிக் கொண்டார். பையன் இன்ஜினியரிங் முடித்த தினத்திலிருந்து பத்து வருடத்திற்குள்ளாக, அந்த இருபத்தைந்தாயிரம் ரூபாய் கடனை அடைத்துவிட வேண்டும் என்பதை ஒத்துக் கொண்டார்.

குழந்தைகள் கொண்டாட்டமாய் படித்தார்கள். சிக்கனமாய் வாழ்ந்தார்கள்.

வருடத்துக்குப் பத்து நாள் கட்டாய விடுமுறையும், பயணச் செலவும் கம்பெனி கொடுக்கும். தக்க ரசீதுகளைக் காட்ட வேண்டும்.

அப்படிக் கிடைக்கும் சலுகையை முதல் வகுப்பு ரயில் ஏறி தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு என்று குடும்பத்தோடு சுற்றினார். கோயில் கோயிலாகப் போய் நமஸ்கரித்தார்.

கடவுள் அருளால் குழந்தைகள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இருந்தார்கள்.

படிப்பு, உத்தியோகம்கூட தகப்பன் முயற்சியால் மேலோங்கி விடும். திருமணம் என்பது முயற்சியால் விளைவது அல்ல. அது பூர்வ வினை, தலையெழுத்து. காசு கொடுத்து நல்ல மாப்பிள்ளைகள் எவராலும் வாங்க முடியாது. காசால் திருமணம் நடக்காது. காசில்லாமல் திருமணம் நிற்காது.

''எனக்கு இந்த வேலை கிடைச்சது அவ்வளவு பிடித்த

யில்லை. ஏற்கனவே இவ உடம்பு வணங்கி ஒரு வேலை செய்ய மாட்டா. இப்ப சம்பாதிக்க வேற போயிட்டா... எந்நேரமும் தூங்கி வழிஞ்சுண்டுதான் இருப்போ."

"டக்குன்னு அப்படிச் சொல்லாதே, கற்பகம்" புவனேஸ்வரியின் அப்பா கிருஷ்ணமூர்த்தி லேசாய் கோபப் பட்டார்.

"நாலாயிரம் ரூபா சம்பளம் தெரியுமா. இவ சம்பாதிச்சு என்ன ஆகப் போறதுங்கறே. அப்பாடியும் இப்படியுமா வீட்ல அறுபது சவரன் இருக்கு. நீ கொண்டு வந்த வெள்ளி பாத்திரம் இருக்கு. நிதானமா வரன் பார்க்க ஆரம்பிச்சா ஒரு வருஷத்துல ரொம்ப அழகா கல்யாணம் பண்ணிடலாம்."

"நீங்க ரிடையராகறபோது பசங்க ரெண்டும் தலை தூக்கும். வேலைக்குப் போயிடும். அதுக்கப்புறம் ஏதாவது செய்ய வேண்டியிருந்தாலும் பசங்க சம்பாத்தியத்தில செய்துக்கலாம். இவ வேலைக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. கடனைக் கழிக்கறதை விட்டுட்டு வளர்த்துப்பாளா."

நாளைக்குக் கல்யாணம் ஆச்சுன்னா வேலைக்குப் போறது அவளுக்குத்தானே சிரமம். இடுப்புல ஒரு குழந்தையும், வயத்துல ஒரு குழந்தையுமா வேகல் வேலைக்குப் போறது பாக்கறேனே... எவ்வளவு சிரமம் இருக்கு. ஆம்பளை சரியில்லைன்னாதான் வேலைக்குப் போகணும். நல்ல ஆம்பளையா கிடைச்சுட்டா ஒரு பொம்மனாட்டிக்கு வீட்டுல எவ்வளவு வேலை இருக்கு. இது எதுக்கு வேலைக்குப் போகணும் சொல்லுங்கோ."

உலகத்தில் மிக நியாயமான கேள்விகளுக்கு சாதாரண மானவர்களால் பதில் சொல்ல முடியாது. அந்த சாதாரணமானவர்களுக்குக் கொஞ்சம் பேராசை இருந்து விட்டால் நியாயம் எடுபடாது.

"செண்ட்ரல் கவர்மெண்ட் வேலை தானா வந்து வீட்டுக் கதவைத் தட்டறது. வேண்டாம்னு சொன்னா நாம பைத்தியக்காரங்களாதான் இருக்கணும். ரொம்ப நல்ல உத்தியோகம். அதிகம் வருத்திக்க வேண்டாம். தனியார் கம்பெனி மாதிரி விரட்ட மாட்டா. நம்ம வேலைய முடிச்சா, கைய அலம்பிண்டு வந்துண்டே இருக்கலாம். கிட்டத்தட்ட வருஷத்துக்கு அம்பதாயிரம் வருமானம். அப்படியே பத்துப் பவுன் நகை வாங்கு. மிச்சத்துக்கு பட்டோ, வெள்ளியோ வாங்கு."



"என்ன வயது இப்ப அவளுக்கு... இருபத்திரண்டு வயசு. கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வயசு போகட்டும். அந்த ரெண்டு வருஷம் வீட்டுலேர்ந்து குண்டாகறது தவிர வேறென்ன செய்யப் போறா. வேலைக்குப் போகட்டுமே."

"இப்ப ரொம்ப ஒல்லியாக்கும். வேலைக்குப் போனா குண்டாக மாட்டாளாக்கும்," அம்மா முணுமுணுத்தாள்.

வீடு அவள் வேலைக்குப் போக என்ன உதவி செய்ய வேண்டுமோ... என்னவெல்லாம் வாங்க வேண்டுமோ அதைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியது.

தோள்பை, டிபன் பாக்ஸ், கல்தோடுகள், நெற்றிப் பொட்டுக்கள், புடவைகள், ரவிக்கைகள், பெட்டிக் கோட்டுகள், செருப்புகள், சாயங்கள், நறுமணங்கள். ஒரு நல்ல நாளில் புவனேஸ்வரி மத்திய சர்க்கார் கணக்கு தணிக்கை அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தாள்.

"இதுதான் உன் செக்ஷன். இவர்தான் உன் மேலதிகாரி. இவர்கிட்டதான் நீ லீவு கேட்கணும். கையெழுத்து போட்டு சம்பளம் வாங்கணும். இவர்தான் உன்னுடைய சீனியர். இவர்தான் உனக்கு வேலை கத்துக் கொடுக்கணும்."

சீனியர் காதில் செவிட்டு மெஷின் மாதிரி ஏதோ வைத்திருந்தார். கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு ஏதோ சிந்தனையில் இருந்தார்.

"சார்... எம் பேர் புவனேஸ்வரி" அவள் சற்று உரக்கப் பேசி அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஏன் கத்தறே... நான் என்ன செவிடா" என்று கத்தினார்.

"காதில் மெஷின் வச்சிண்டிருக்கேளே சார்..., அதனால உரக்கப் பேசினேன்."

"இது செவிட்டு மெஷினா. செவிட்டு மெஷின் எப்படி இருக்கும்னு தெரியாதா உனக்கு. நீ யாராயிருந்தாலும் அது பத்தி எனக்கு அக்கறையில்லை. அண்ணண்டை போ."

அவள் தகர்ந்து முகம் வாடி ஒரு மூலையில் போய் நின்று கொண்டாள். அலுவலகம் முழுவதும் அதை வேடிக்கை பார்த்தது.

"போச்சு... எந்த வேளைல நீ உள்ள நுழைஞ்சியோ...

கவாஸ்கர் போயிட்டான். இன்னிக்கு மொத்தமும் ஸ்ரீகாந்தின் டாப்பலதான். நீ உள்ள நுழையும் போதே நினைச்சேன், ரெட்டைப் பின்னலும் கருப்புக் கயிறுமா உள்ள ஒருத்தி வராளேன்னு. நீ வந்தவுடனே அவன் போயிட்டான். மிடில் ஸ்டம்ப். ஒன் ஃபார்ட்டி ஃபோர் ஃபார் த்ரீ. ஆஸ்திரேலியா டூ எய்ட்டி நைன் ஃபார் த்ரீ இருந்தா. இனி எல்லாம் பொத்து பொத்துன்னு விழும். இதுக்கப்பறம் கேட்டும் ஒன்னுதான், கேட்காததும் ஒன்னுதான்.''

அவர் காது மடலிலிருந்து கருவியைக் கழட்டி மேஜையில் போட்டார்.

''இங்க வா. உன் பேரென்ன.''

''புவனேஸ்வரி சார்.''

''கொஞ்சம் இரு. அடுத்தது யாரை இறக்கியிருக்கான்னு பார்த்துட்டு வரேன்.''

யாரோ நெருங்கி வர ''ஒன் ஃபார்ட்டி ஃபோர் ஃபார் த்ரீ'' மறுபடி அவர் கத்தினார். ''காமன்ட்டேட்டர் ரெண்டு பேரும் கவாஸ்கர் போறது பத்தியே புலம்பறான். இர்ரிட்டேரபின்னாங்கறான். இங்க வா. எதிரே உட்கார். ஸ்டூல் இழுத்து போட்டுக்கோ. எம்பேர் விஸ்வநாதன். ஊர் லால்குடி. இங்க ஒன்னும் பெரிய வேலை இல்லை. அப்படியே வேலை வந்தாலும் ரெண்டு நாள்ல பண்ணி தூக்கிப் போட்டுரலாம். தொடர்ந்து கிரிக்கெட் சீஸன் இருக்கு. அதனால எனக்கு உதவியா உன்னைப் போட்டிருக்கா. இந்த மொத்த சர்க்கார் பில்டிங்கும் என்கிட்டதான் கிரிக்கெட் ஸ்கோர் கேட்கும்.

இன்னிக்கு நடக்கிற மேட்ச் மட்டுமில்லை. பன்னெண்டு வருஷம் முன்னாடி நடந்த மேட்ச்சினுடைய ஸ்கோர் கூட சொல்வேன். அவாரைத் தெரியுமா. விஜய் மன்காட் தெரியுமா. மொத்த ஹிஸ்ட்ரியும் என்கிட்ட இருக்கு. நான் சொன்னா இந்த சென்ட்ரல் கவர்மென்ட் ஆபீஸ் முழுக்க சரின்னு ஏத்துப்பா.

உனக்கு கிரிக்கெட் பத்தி தெரியுமா.''

''தெரியும் சார். இந்த கட்டை வச்சுண்டு ஆடுவானே... அதானே...''

''அது கட்டை இல்லேடி. பேட்.''

''மிஸ்டர் விஸ்வநாதன், பார்டர் லைன் தெரியாத பந்து போடாதீங்க. 'நாக்கை அடக்கிப்' பேசுங்க.''



பக்கத்து சீட்டிலிருந்து ஒரு வாலிபன் எழுந்து வந்தான். அதட்டினான்.

''சென்ட்ரல் கவர்மென்ட்ல கை நிறைய சம்பளம் கொடுத்து மேலோட்டமா ஏதோ ஒரு வேலை தரா. உட்கார்ந்து ஒழுங்கா ஏதாவது செய்துட்டு போகக் கூடாது... பெரிய கிரிக்கெட் ஸ்கோரர். உன் வேலையைப் பாருய்யா. இவருக்கே இங்க வேலை கிடையாது. தண்டச் சம்பளம். இவருக்கு ஒரு அசிஸ்டென்ட்.''

அங்கே அவருக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் ஆட்கள் இருப்பதை அவளால் உணர முடிந்தது.

மத்தியானம் உணவு வேளை. கேண்டீனுக்குப் போய் டிபன் பாக்ஸ் திறக்கும்போது நாலைந்து பெண்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

''என்ன... உன்னை அந்தக் குரங்கு விஸ்வநாதன் முதனே வாடி போடின்னு பேசினானாமே... செருப்பெடுத்துக் காட்ட வேண்டியதுதானே. யாரைப் போய் யார் வாடி போடிங்கறது. அந்தக் குரங்கா நமக்கு சம்பளம் கொடுக்கறது. எச்சக்கலை நாயே... என் காதுபட பேசிருந்தான், கண்டமேனிக்குக் கத்திருப்பேன்.''

அந்தப் பெண்மணி அப்போதே கத்தினாள். எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

''இப்ப திட்டினாங்களே, இவங்க பேர் சுசீலா. எம்பேர் கண்மணி. இவங்க பேர் இந்திரக்குமாரி. நாங்க ரெண்டு பேரும் லீகல் டிபார்ட்மென்ட்ல ஒர்க் பண்றோம். சுசீலா உன் செக்ஷன்ல இத்தனை நாள் இருந்துட்டு இப்ப வடசென்னை சுருஷலம் ஆடிட் பண்றாங்க. இந்தக் கட்டிடத்துல பெண்கள் பாதுகாப்புக்குன்னு தனியா ஒரு யூனியன் இருக்கு. வேலை செய்யற நேரத்துல ஆண்கள் அத்துமீறினால் நாம அழுதுட்டு நிக்க வேணாம். தட்டிக்கேட்கலாம்.

எழுத்து மூலமா ஒரு ரிப்போர்ட் கொடு. விஸ்வநாதனைத் தொலைச்சுடறேன். அப்படின்னு சொன்னா நீ பயப்படுவே. இன்னொரு தடவை சொன்னா அவனைச் செருப்பால அடிச்சுட்டு எங்கிட்ட வந்துரு. மொத்த ஆபீஸையும் நடுங்க வைக்கறேன்''

அவள் மருண்ட மான் போல் எல்லோரையும் மாறி மாறிப் பார்த்தாள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது அவளுக்குப்புரிந்தது.

தயிர் சாதம் புரைக்கேறியது. அம்மா நினைத்துக் கொள்கிறாள் என்று தோன்றியது. அப்படி நினைத்துக் கொள்ளும் அம்மா மீது கோபம் வந்தது.

நானே திக்கு திசை தெரியாம முழிச்சிண்டிருக்கேன். இப்ப ஏன் நீ வேற நினைச்சுண்டு உயிரை வாங்கறே. மனசுக்குள்ளே கடிந்து கொண்டாள். தயிர் சாதம் சாப்பிட்டு கை கழுவி இரண்டாவது மாடிக்குப் படியேறினாள்.

"பாப்பமலைவர் கத்தி சாமியாடிங்கள்ளாம் உட்கார்ந்திருந்தாளுங்களே... என்ன சமாச்சாரம்?"

மாடிப்படி ஏறும்போது பின்னே யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"கிரிக்கெட் விஸ்வநாதன் கிள்ளிட்டானாம்."

"யாரு குரங்கு விசுவா. இப்படி எத்தினி பேரைக் கிள்ளுவான். அவனுக்குன்னு பார்த்து அப்பாவிப் பொண்ணுங்களா போடறாங்க பார்."

அவளுக்குத் திரும்பிப் பார்க்க பயமாக இருந்தது.

முதலைகளும், காட்டெருமைகளும், மதயானைகளும், மலைப் பாம்புகளும் உள்ள வனாந்தரத்தில் தன்னுடைய உத்தியோக வாழ்க்கைத் துவங்கியிருப்பதாக நினைத்துக் கொண்டாள்.

தூங்குகிறதா அல்லது தியானமா, அல்லது வெறுமே உட்கார்ந்திருக்கிறதா... எதுவும் தெரியவில்லை. விஸ்வநாதன் இரண்டு காதிலும் ஹியர் போன் மாட்டிக் கொண்டு அசையாமல் உட்கார்ந்திருந்தார். மூக்கு நோண்டி உற்றுப் பார்த்துவிட்டு கீழே போட்டுக் கொண்டிருந்தார். தூரத்திலிருந்து வேடிக்கை பார்க்கிறபோது ஒரு பெரிய மனிதக் குரங்கு உட்கார்ந்திருப்பது போல் தான் தோன்றியது.

நிஜமாகவே இவர் எழுந்து ஒரு குரங்குபோல் கத்தினால் எப்படி இருக்கும் என்று எண்ணினாள். சிரிப்பு வந்தது.

விஸ்வநாதன் நகம் கடித்துத் துப்பினார். தலையிலடித்துக் கொண்டார்.

"பாவி... பாவி... சண்டாளா, பார்த்துப் போடுடா-" என்று கத்தினார்.

ஜன்னல் வழியே தெரியும் மவுண்ட்ரோடை அவள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



"ஜெயிச்சுட்டோம்... ஜெயிச்சுட்டோம். இண்டியா வோன்" என்று பெருங்கூச்சல் கேட்டது. "எயிட்டி செவன் ரன் வீடிங்ல ஜெயிச்சுட்டோம்"

விஸ்வநாதன் எழுந்து நின்று கத்தினார். லேசாய் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள்.

"குரங்கு விஸ்வநாதா. உன்னைக் குத்திக் கொலை பண்ணப் போறேம் பாரு நான்" என்று யாரோ கத்தினார்கள்.

"இந்தப் பைத்தியத்தை எங்கனா மாத்திப் போடுங்க ஜோன் சார். மொத்த ஆபிஸையும் சீரழிக்கிறானே இவன்"

வேறு யாரோ அலுத்துக் கொண்டார்கள்.

ஆனால் நிறையப் பேர் விஸ்வநாதனைச் சூழ்ந்து கொண்டார்கள். படியேறும் இடத்தில் 'இண்டியா வோன்' என்று எழுதி வைத்து விலாவாரியான ஸ்கோர் போர்டும் மாட்டி வைத்தார். அவரிடம் நிறைய பேர் கைகுலுக்கினார்கள். அவர் நிறைய பேரிடம் கை குலுக்கினார்.

ஐந்தேகால் வரை எங்கெங்கோ முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டவுடன் கிரிக்கெட் பற்றிப் பேசினார்கள். அவரும் வேறு எதுபற்றியும் அக்கறையின்றி இருந்தார். ஐந்தரைக்கு நாலடுக்கு டிபன் பாக்ஸைத் தேய்த்து அலம்பினார். எல்லாவற்றையும் துணியால் துடைத்தார். சட்டைப் பேண்ட்டை உதறிக் கொண்டார்.

"நீ வீட்டுக்கு போய்க்கோம்மா. இன்னிக்கு நான் அவ்வளவு நன்னா இல்லை. நாளைக்கு அற்புதமான முகூர்த்தம். கவர்ன்மெண்ட் லெட்டர் அடிச்சு நீ ஜாயின் பண்ணுன்னு சொல்லிருக்கும். நீ ஜாயின் பண்ணிருப்பே. நான் அந்த மாதிரி பண்ண முடியுமா. முத முத வேலைக்குன்னு உள்ளே நுழைச்சிருக்கே. நீ இங்கே வந்து பேனா தொட்ட நேரம் பெரிய ஆபிஸராக வேண்டாமா. பத்தாயிரம் பன்னெண்டாயிரம் சம்பளம் வாங்க வேண்டாமா. காரில போக வேண்டாமா. டெல்லில கூப்பிடறான்னு ஏரோப்ளேன்ல பறக்க வேண்டாமா. அதனாலதான் இன்னிக்கு உன்னை விட்டுட்டேன். எனக்கும் மேட்ச் இருந்தது.

அம்மாடி... நான் என்னமோ உன்னை டீன்னு சொல்லிட்டேனாம். நார்மலா அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன். வாய் தப்பி வந்துடுத்து. எனக்கும் ரெண்டு பொண்

குழந்தைகள் இருக்கா. நான் யாரையும் அவமரியாதையா நடத்த மாட்டேம்மா. என் காதுபட என்னைக் குரங்கு விடு தொதான்னு கூப்பிடுவா. நான் போய் என்னப்பா வேணும்னு நிப்பேன். எல்லாரும் தான் குரங்கு. நான் எதுக்கு கோச்சுக்கணும். கொஞ்சம் கிரிகெட்னா உணர்ச்சிவ சப்படுவேன். மத்தபடி என்கிட்ட பயப்படறதுக்கு எதுவு மில்லை தாயே... நான் உனக்கு அப்பா மாதிரி'' அவர் தாழ்குரலில் பேச புவனேஸ்வரி உருகி நின்றாள்.

''அப்பான்னு சொன்னானா... அந்தக்கிழவனா... உனக்கு உச்சி குளிர்ந்துருக்குமே. ரொம்ப கொஞ்சினேன்னு வச்சுக்கோ, சம்பளத்தன்னிக்கு காலைல ஒரு ட்டு ஹன்ட்ரட் ருபீஸ் கடனா கொடும்மான்னு கண்ணுல ஜலம் விட்டுக் கேட்கும். ரெண்டே நாளில திருப்பித் தருவேன்னுவான். ரெண்டு வருஷமானாலும் வாங்க முடியாது.

ஒன்னு புரிஞ்சுக்கோ புவனேஸ்வரி, இந்த ஆபீஸ்ல நல்லவாளும் இருக்கா. கெட்டவாளும் இருக்கா. கண்டுபி டிக்கறது கஷ்டம். நல்ல ஃப்ரண்ட்ஸ் கிடைச்சடுத்துன்னா, ரிடையராகற வரைக்கும் அவாளோட நட்பா வாழ்ந்துட லாம். அப்படி வாழ்ந்தவா இருக்கா.

நட்பா வாழறது என்ன... உறவாவே ஆயிடலாம். சிநேகிதி சிநேகிதின்னு இழைஞ்சு, சிநேகிதிக்கு தன் அண் ணாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து, அவ பிள்ளை பெக்கறபோது ஓடியாடி உதவி பண்ணி, மன்னி அதாவது சிநேகிதி கை காட்டறவனையே கல்யாணம் பண்ணிண்டு மன்னி பிள்ளைக்கு தன் பொண்ணைப் பண்ணிண்டு அம் பத்தெட்டு வயசாகி, ஒருத்தி ரிடையராக. அவ இல்லாம ஆபீஸ் வரமுடியலைன்னு இன்னொருத்தியும் ரிடையராக ரெண்டு பேரும் இன்னிக்கும் ஃபிரண்ட்ஸ். முப்பத்தெட்டு வருஷமா ஃப்ரெண்ட்ஸ். மறந்துபோய் கூட சண்டை போட் டுக்க மாட்டா. இன்னொருத்தர் முன்னால அவமரியா தையா நடத்தமாட்டா.

அவாளைப் பிரிக்கறதுக்கு யார் யாரோ ட்ரை பண் ணிப் பார்த்தா... முடியலையே. நாங்க ரெண்டு பேரும் ஒன்னா சாகணும். ஒரே கட்டைல வேகணும்னு சொல்லின் டிருக்காளாம்.

அப்படி ஃப்ரெண்ட்ஸ் அமையறது ரொம்ப கஷ்டம். கடைசி வரைக்கும் யார் கூடயும் ஸ்நேகமா இல்லாம தன் னைப் பத்தி தெரிவிக்காத, பிறரைப் பத்தி தெரிஞ்சுக்காத



வாழ்ந்துட்டு போனவாளும் உண்டு.

சென்ட்ரல் கவர்ன்மென்ட் கடல். இந்தியா முழுக்க லட்சோப லட்சம் பேர் வேலை செய்யறான். இந்த ஒரு டிபார்ட்மெண்ட்டை தூக்கி அடிக்க மாட்டான். மத்தபடி ராணுவமோ சங்கமோ கடைசி பட்சமா கல்வெட்டுத் துறையோ ஜாயின் பண்ணிட்டிருந்தே... நீ காலி. கோரக்பூர், கோண்டல்பூர்னு உன் சர்வீஸ்ல ஏதோ ஒரு அஞ்சு வருஷம் தூக்கிப் போட்டுருவான். பைத்தியம் புடிச்ச மாதிரி மெட் ராஸ் வருவே.

இங்கே. அந்த தொந்தரவெல்லாம் இல்லை.''

அவள் பஸ் பிடித்து வீட்டுக்கு வருவதற்குள் அவள் சின்ன மூளைக்குள் ஏகப்பட்ட விஷயங்கள் திணிக்கப்பட் டன. அவள் மிகுந்த அயர்ச்சியோடு வீட்டுக்குள் நுழைந்து கட்டிலில் விழுந்தாள். வீடு அவளைச் சுற்றிக் கொண்டது. அப்பா அவளை விசாரிப்பதற்காகவே அலுவலம் விட்டு சீக்கிரம் வந்தார்.

''சொல்லு... சொல்லு... எப்படி இருந்தது சொல்லு''

இரண்டு தம்பிகளும், தாய் தந்தையும் சூழ்ந்து கொண் டார்கள். அவள் விவரிக்க வாய் பிளந்து கேட்டுக் கொண் டார்கள்.

''நான் வேணா அந்த விஸ்வநாதனைப் பார்த்துப் பேசட்டுமா?'' அப்பா கவலையோடு கேட்டார்.

''வேண்டாம்பா.'' முதல் தம்பி வேகமாக மறுத்தான்.

''அவள் பிராப்ளத்தை அவள் சால்வ் பண்ணிக்கட் டும். நீ போய் கெஞ்சாதே. உடனே எல்லாம் தெரிஞ்சுடாது. அவனால தீர்க்க முடியாதுன்னா நம்ம போவோம். இனி மையா பேசறவனை விட எரிஞ்சு விழறவன் நல்லவன். இது என் அனுபவம்.''

இப்படி தினம் அலுவலகம் பற்றிப் பேசுவதும் வீடு உட்கார்ந்து கேட்பதும் வழக்கமாயிற்று. முதல் சம்பளத்தில் ஒரு பைசா கூட எடுக்காமல் அப்படியே குல தெய்வத்துக் குக் காணிக்கையாக்கினாள். என் பர்ஸ்ல எந்த நாளும் காசு இருந்துண்டே இருக்கணும். கடவுளே நான் காசு இல்லாம கஷ்டப்படக் கூடாது.

காசு இருந்தாலும் கஷ்டங்கள் வரும் என்று அந்த குழந்தைக்குத் தெரியவில்லை.

# 2

கிரிக்கெட் விஸ்வநாதன் அடிப்படையில் மிகவும் நல்ல மனிதர் என்று ஒரு வாரத்தில் தெரிந்து போயிற்று. பூபாலன்களுக்கு அஞ்சக்கூடிய பிறவி என்பதும் விளங்கி விட்டது.

எப்போதாவது ஒருமுறை அர்த்தமற்ற அசட்டுக் கோபம் வரும். அவர் தவறை மிருதுவாகச் சுட்டிக் காண்பித்தால் உடனே புரிந்து கொள்வார்.

அவர் காசு கடன் கேட்கிற ஜாதி இல்லை. ஆனால் தின்னிப் பண்டாரம்.

"கேண்டீனில் போண்டா போடறானாம். வரியா ஒரு செட் சாப்பிட்டு வரலாம்." நாலு போண்டா ரெண்டு காபி என்று மொத்தமும் அவரே சாப்பிட புவனேஸ்வரிக்கு மலைப்பாய் இருக்கும். "வயசுப் பொண்ணு நன்னா சாப்பிடணும். கச்சேரி ரோடு, ராயர் ஓட்டல்ல ஒரு ஊத்தப்பம் போடுவான். கட்டை விரல் தடிமனுக்கு இருக்கும். கொத்து கொதன்னு வெங்காயத்தைப் போட்டு வேசா வெறிட்டபின்னே போட்டு பொறிச்ச மாதிரி கொடுப்பான். புதினா சட்னி, வெங்காயச் சட்னி, சாம்பார். உங்கிட்ட உண்மையைச் சொல்றேனே. ஒரு ஒரமா உக்காந்து நாலு சாப்பிடுவேன்.

எனக்கு அஜீரணம் வர்றதேயில்லை புவனேஸ்வரி. என் குடலுக்கு என்ன தின்னாலும் ஜீரணிக்கிற சக்தி இருக்கு. சின்ன வயசுல பௌலிங் போட்டு, பௌலிங் போட்டு உடம்பு திடமாயிடுச்சு."

அந்தப் பிரிவு ஒரு அதிர்ஷ்டகரமான பிரிவு. அங்கு வேலை அதிகமாக இல்லை. ஆனால் சில நாட்கள் வேலை குவியும்.

"சண்டாளப்பாவி, வெள்ளிக்கிழமை சாயங்காலம் கொண்டாந்து வைக்கறயேடா. இத்தனை ஃபைலை உடனே எப்ப பார்த்து முடிக்கிறது. எப்ப வேணுமாம்."

"திங்கட் கிழமை காலைல எட்டு மணிக்கு ரெடியா இருக்கணும். டெல்லிலேர்ந்து கேள்வி கேட்டா மேலதிகாரி பதில் சொல்லணும். மத்த நாள் ரேடியோ கேட்கறேல்ல...



உன்னை எதாவது கேள்வி கேட்டாங்களா. சனிக்கிழமை, ஞாயித்துக்கிழமை வந்து வேலை செய்."

மிக அதிசயமாய் புவனேஸ்வரி சனிக்கிழமை வேலைக்குப் போனாள். அப்பா தானும் வருகிறேன் என்று வாசல் வரை கொண்டுவந்து விட்டார்.

"ராத்திரி நேரமாகும்னா போன் பண்ணும்மா. நான் வந்து கூட்டிண்டு போறேன்."

'புவனேஸ்வரி அப்பாவுக்கு சந்தேகம். பொண்ணு வேலைக்குத்தான் போறாளா... இல்லை வேற எங்கயாவது போறாளான்னு...'

எவனோ சிரித்து கண் சிமிட்டினாள்.

"ச்சீ... ச்சீ.. அப்படி யெல்லாம் இல்லை"

"அப்ப ஏன் உங்கப்பா வரார்? வரவேண்டிய அவசியம் என்ன?"

"சும்மா துணைக்கு."

"ட... நானும் உன்னை மாதிரி அண்ணா தம்பியோட பிறந்தவதாண்டி. ஒரு ஸ்டேஜ் வரைக்கும் இவா நம்மளைக் கண்ணுக்கொத்திப் பாம்பாதான் கவனிச்சிண்டிருப்பா. நாம என்ன சொன்னாலும் கேட்க மாட்டா. அவாளா அலுத்துப் போய்தான் விடுவா. உங்கப்பாக்கிட்ட இதெல்லாம் வேண்டாம்னு சொல்லிடு. எனக்கு அவமானம்ப்பான்னு சொல்லிடு. கொண்டு விட்டா தினம் கொண்டு விடணும். சனிக்கிழமை ஆபீஸ் போகணும்ங்கறபோது அன்னிக்கு நானும் வரேன்னா என்ன அர்த்தம்? உன்னை நம்பலேன்னுதானே அர்த்தம். எங்கப்பாவும் இதே மாதிரி வயித்தெரிச்சலைக் கொட்டிண்டவர்தான். அந்தக் கோபத்துல சொல்றேன்."

அப்பா சந்தேகப்பட்டு வந்தது போலவே தோன்றவில்லை. தன் மீது அப்பாவுக்கு சந்தேகப்படத் தோன்றுமா என்ன.

ஒரு பெண் மீது அப்பாவுக்கு என்ன சந்தேகம் வரும். யாருடனாவது ஓடிப் போய் விடுவாள் என்றா இவ்வளவு நல்ல அப்பாவை விட்டு எங்கு ஓட முடியும். ஏன் ஓட வேண்டும்.

குளிப்பதற்கு வென்னீர் எடுத்து வைக்கும் தம்பிகள், புடவையை, சுடிதாரை சலவைக்குப் போட்டுக் கொண்டுவரும் சகோதரர்கள், வெறுமே காய் நறுக்க உதவி செய்தாலும்

வேண்டாம் என மறுக்கும் தாய்...

காலைத் தூக்கம் ஆறு மணி வரை என்பது நீடித்து ஆறரை ஆறே முக்கால் ஏழு என்பது வரை வளர்ந்து சில சமயம் ஏழேகால் மணி வரை நீடித்து விடுகிறது.

ஒன்பது மணிக்கு அப்பாவுக்கும் பெண்ணுக்கும் அம்மா தோசை வார்த்துப் போடுவாள். இட்லி பரிமாறுவாள். ஒரு மாறுதலுக்காக முழுச்சாப்பாடும் தட்டில் இறக்குவாள்.

மத்தியானத்திற்கு அடை அவியல், அல்லது பூரி வெங்காய மசாலா. இல்லை கெட்டித்தயிர் சாதம். நெல்லிக்காய் ஊறுகாய். நேற்று தோசை மாவில் தடித்த தோசையாக இரண்டு என்று டிபன் பாக்ஸில் அடைத்துக் கொடுப்பாள்.

விஸ்வநாதன் ஹிண்டு பேப்பர் படித்து முடிக்கும் வரை ஒன்றும் வேலை இருக்காது. புவனேஸ்வரி மேஜையில் ஃபைல் விரித்து உட்கார்ந்தபடியே தூங்கப் பழகிக் கொண்டாள்.

பதினோரு மணியிலிருந்து ஒரு மணி வரை இந்த ஃபைலைத் தூக்கி அங்கு வைப்பதும், அந்த ஃபைலைத் தூக்கி இங்கு வைப்பதுமாக ஏதோ வேலை செய்வார்கள்.

"அந்த ஃபைலை மறுபடி எடுக்கச் சொன்னேனே கேட்டியா" விஸ்வநாதன் உரத்த குரலில் கேட்டார்.

"போவ், விஸ்வநாதா, சுத்தாதப்யா, நாங்கள்ளாம் வேலை செய்யறோம்", அடுத்த செக்ஷன் குறைபட்டுக் கொள்ளும்.

அந்தத் தனிக்கை ஆபீஸில் மனிதரைத் தள்ளாட வைக்கும் வேலை இருந்தது. சில செக்ஷனில் சில பிரிவுகளில் வேலை பொறி பறந்தது. சில செக்ஷன்களில் நீரோட்டம் போல் இடைவிடாது வேலை இருந்தது. வேலை தேங்கினால் அவர்கள்தான் முடிக்க வேண்டியிருந்தது.

மிக அபூர்வமாய் புவனேஸ்வரி செக்ஷனில் வேலை இல்லை.

"ரொம்ப அதிர்ஷ்டசாலிடி நீ" ஒரு பெண் அவளைப் பாராட்டினாள்.

அதற்கு புவனேஸ்வரியும் கர்வம் பொங்கச் சிரித்தாள்.

"தயவு செய்து அப்படிச் சிரிக்காதே. மூணு வருஷம் சோம்பேறியா வளர்ந்துட்டு நாலாவது வருஷம் பிஸியா



செக்ஷன்ல போட்டா நீ செத்துருவ. ஒரு வேலையும் செய்யத் தெரியாம நீ பிசாசா முழிப்பே. நீ நிஜமாலுமே கெட்டிக்காரியா இருந்தா ஒரு வேலை பண்ணு."

"என்ன...?"

"இந்த மூணு வருஷத்துல ரெண்டு டிபார்ட்மெண்டல் எக்ஸாம் பாஸ் பண்ணிடு."

"தாங்க்யூ சரஸ்வதி" சொன்னவளுக்கு புவனேஸ்வரி நன்றி கூறினாள்.

"நான் ஒரு டிப்ஸ் தரேன். எனக்கும் ஒரு தாங்க்ஸ் சொல்லு" கஸ்தூரி என்பவள் புவனேஸ்வரியின் தாடையைத் திருப்பினாள்.

"எக்ஸாம் எழுதறதா விஸ்வநாதன்கிட்ட சொல்லாதே. அது உனக்கு ஏகப்பட்ட தொந்தரவு கொடுக்கும். அது மூணு தடவை எக்ஸாம் எழுதி மூணு தடவையும் ஃபெயில். ஒரு எக்ஸாமும் பாஸ் பண்ணாத ஒரே சீனியர் அதுமட்டும்தான். எக்ஸாம்ஸுக்கு ஒரு வாரம் முன்னாடி லேகஸ் ட்ரபிள்னு லீவ் வாங்கிக்க. நாலு பேப்பர் ஈஸியா பாஸ் பண்ணலாம்."

"அடுத்த மாசமே இன்னொரு எக்ஸாம் வைப்பா. அது சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ரூல்ஸ், ஷேர் மார்க்கெட் அண்ட் ரிஸர்வ் பாங்க் ஆடிட். கொஞ்சம் கஷ்டம். மாடில ரங்கநாத ராவ்னு ஒருத்தர் இருக்கார். அவர்கிட்ட ஆயிரம் ரூபா கொடுத்து ஒரு மாசம் டியூஷன் போனேன்னு வச்சுக்க அதையும் பாஸ் பண்ணிடலாம். அவர் மாடல் பேப்பர் நிறைய தருவார். இந்த ரெண்டு எக்ஸாம் போதும். உனக்கு நல்ல இன்க்ரிமெண்ட் வந்துடும். மூணாவது நாலாவது பின்னாடி பாத்துக்கலாம்."

"அதையும் கல்யாணத்துக்கு முன்னாடி பாஸ் பண்ணிடு. புது துடைப்பம் ஒட்டப் பெருக்குங்கற மாதிரி நான் வேலைக்கு வந்த புதுசுல ரெண்டு எக்ஸாமினேஷனும் அப்படி பாஸ் பண்ணினேன். இப்போ கல்யாணம் ஆச்சு. புஸ்தகத்தை எடுத்தா தூக்கம்தான் வர்றது."

"உங்க வீட்டுக்காரர் உங்களைத் தூங்க விடறதில்லை. அதுக்காக எல்லாரும் அப்படியா. கல்யாணி, அமலவேணி, லிடியா தாமஸ் எல்லாரும் கல்யாணத்துக்கப்புறம் தானே பாஸ் பண்ணினாங்க."

"ஆமா, என் புருஷன் தூங்க விடறதில்லை. இவ பக்கத்

துல உட்கார்ந்து பார்த்தா, அவன் விடறதையும், விடாததையும்.''

''ஏய்... என்ன அசிங்கமா பேசறே?''

''நான் சாதாரணமா சொன்னேன்டி.. ஏதோ தப்பா வந்துடுத்து'' அவள் நாணிச் சொல்ல,

எல்லோரும் அங்கு இரண்டு நிமிடங்கள் முகம் சிவக்க வெட்கப்பட்டார்கள்.

ஒன்றும் புரியாமல் புவனேஸ்வரி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்திடீர்னு எல்லாம் சைலண்டாயிட்டீங்க?'' அப்பாவியாய் கேட்டாள்.

''அதுவா நம்ம சரஸ்வதி என்ன சொன்னான்னா...''

கடவுளே, எல்லாப் பெண்களும் கூச்சலிட்டு எழுந்தார்கள். மடமடவென்று அந்த இடத்தை விட்டு அகன்றார்கள்.

''என்ன கஸ்தூரி ஏன் இப்படி எல்லாரும் ஓடறாங்க...''

''விடறது... விடாததுன்னு ரெண்டு மேட்டர் பேசினாளோன்னோ... அதான் ஓடறாங்க...''

''அப்படீன்னா என்ன?'' புவனேஸ்வரி வியப்போடு கேட்டாள்.

''விஸ்வநாதன்கிட்ட கேளு. சொல்லித் தருவார்.''

''கஸ்தூரி... மக்கு சனியனே. அவ கேட்டுத் தொலைக்கப் போறாடி. ஏய்... எழுந்து போ. பெரிய பொம்மனாட்டிகள் பேசற இடத்துல உனக்கு என்ன வேலை...?''

''என்ன கஸ்தூரி எல்லாம் எம்மேலே பாயறாங்க. நான் ஒரு தப்பும் பண்ணலையே..'' புவனேஸ்வரியின் கண்களில் நீர் கோர்த்தது.

''அடச்சீ வா... இதுக்கெல்லாம் போய் அழறே''

''என்ன நடந்ததுன்னு சொல்லு.''

''நாலு மணிக்கு என் சீட்டுக்கு வா. சொல்றேன்.''

புவனேஸ்வரி நாலு மணிக்கு ஆவலாய் கஸ்தூரியைத் தேடிக் கொண்டு ஓடினாள்.

பள்ளியில் லேசாய் கற்ற விஷயத்தைக் கல்லூரியில் ரொம்பத் தெளிவாய் தெரியும் என்கிற விஷயத்தை கஸ்தூரி



பச்சை மாமிசமாய் புட்டுக் காட்டினாள்.

புவனாவின் முன்பு புருஷன் என்கிற பிரகிருதியின் ஆளுமை கொண்ட உலகம் பெரிதாய் விரிந்தது. வெப்ப மூச்சோடு கலந்த வாழ்க்கை தெரிந்தது. அவள் மனதின் ஒரு மூலையில் தழல் பற்றி எரிந்தது. இந்தச் செய்தியிலிருந்து எந்தப் பெண்ணும் தப்பித்துக் கொள்ள முடியாது. யார் மூலமாவது இது தெரிவிக்கப்படும். ஏதோ ஒரு விதமாய் சொல்லித்தரப்படும்.

'கற்றலின் கேட்டல் நன்று' என்கிற வாசகம் இங்கு மிகச் சரியாய் பொருந்தும். இதை நேரடியாய் கற்பதற்கு முன்பு இதுபற்றி ஒரு பெண் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது. உடல் பற்றி ஆனந்தமோ, அருவருப்போ எதுவாயினும் அதனை முன்கூட்டித் தெரிந்து கொள்வது ஒரு பெண்ணுக்கு நல்லது. அதை நிதானமாய் அணுகுகின்ற புத்திக்கு இந்தக் கேள்வி ஞானம் அவசியம்.

பெண்ணாய் நுழைந்த புவனேஸ்வரியை அவள் அலுவலகம் மனுஷியாக்கிறது. அவள் ஆண்களை கவனிக்கத் துவங்கினாள். அங்கே விகாரமுள்ளவர்களையும், விவேகமுள்ளவர்களையும் இனம் பிரித்தாள்.

ஆண்களில் ஏகப்பட்ட பொய்யர்கள் இருப்பதை உணர்ந்து கொண்டாள். பெண்கள் தங்களை அழகிகளாகக் காட்ட அலட்டுவது போலவே ஆண்கள் தங்களை வீரர்களாகக் காட்டும் அறிவீனத்தைப் புரிந்து கொண்டாள்.

''எத்தப்பத்தி வேணா கேளுப்பா. நான் சொல்றேன்'' சில தொங்கு மீசை இண்டலக்சுவல்கள் அலட்டினார்கள். செய்குவாரா என்றார்கள். சித்தாந்தம் என்றார்கள். பொருள் முதல் வாதம் என்று பிதற்றினார்கள். எங்கேயோ கேட்டதைத் தான் முற்றிலும் அறிந்ததாய் அலுவலகத்தில் அரற்றினார்கள்.

தொங்கு மீசையை வளைந்த மீசை தலைவரே என்றது. வளைந்த மீசையைத் தொங்கு மீசை தோழரே என்றது.

''ரெண்டு பேரும் ஒரே ஜாதிக்காரங்கப்பா... பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்கற திட்டத்துல இருக்கானுங்க. இதெல்லாம் பேசுவானேகண்டி அரை சவரன் குறைச்சுக்க மாட்டான். அதுவேற இதுவேறன்னுவான்.''

பெண்களைப் பற்றி மோகமாகச் சித்தரிக்கிற படங்கள் என்கிற தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. பலபேர் இடி

முழக்கமாய் திரைப்படத்தை எதிர்த்து கூவினார்கள்.

பட்டிமன்ற நடுவர் கெட்டிக்காரர். வெளியே இருந்து வந்தவர்.

''நண்பர்கள் சொல்றதைப் பார்த்தா தமிழ் நாட்டுல ஒரு திரைப்படம் கூட பார்க்கறதுக்கு லாயக்கில்லை. இவங்கக் கூற்றுப்படி படமே போகக்கூடாது. ஆனால் பேசின தோழர்கள் எல்லாரும் எல்லாப் படத்தையும் ஒரு தடவைக்கு மூணு தடவை பார்க்கறவங்க போல இருக்கே...''

கூட்டம் பேசியவர்களை எள்ளி நகையாடியது. பட்டிமன்றம் தவிர அலுவலகத்தில் நாடகங்கள் நடந்தன. இங்கிருந்து நாடக நடிகர்களை வளர்த்த சிலர், சினிமாவில் கொடிகட்டிப் பறக்கிறார்கள் என்று அவளுக்குச் சொல்லப்பட்டது.

''இந்த சீட்டுதான். இந்தக் கார்னர்தான். டைரக்டர் சார் உட்கார்ந்து ஆடிட் பார்த்தது. வேலை நேரத்தில் வேலை. டிராமா நேரத்துல டிராமா. மேன் ஆஃப் பிரின்ஸிபிள்.'' அந்த அலுவலகத்தில் ஒரு பெரிய கூட்டம் இன்னமும் அவரைக் கொண்டாடிக் கொண்டிருந்தது.

''நீ சினிமால நடிக்கிறயா சொல்லு. நான் சேர்த்துவிடறேன். அவரு என்னைவிட ஒரு வருஷம் சீனியர். டிராமா ரிஹர்சல் முடிய நைட் ரெண்டாயிடும். கார்த்தால லேட்டா எழுந்து அரக்க பரக்க ஆபீஸ் வந்து. டேய் விஸ்வநாதா, லஞ்ச் கொண்டு வரலைடா: எனக்குக் கொஞ்சம் கொடுடா என்று பரிதாபமாகக் கேட்பார். மொத்த டிபன்பாக்ஸையும் அவர் கைல நான் கொடுத்துருவேன். ஒரு சபா டிராமால அவர், என்னை மேடைக்குக் கூப்பிட்டு விஸ்வநாதன் இல்லேன்னா நான் செத்துப் போயிருப்பேன். விஸ்வநாதன் போட்ட சாப்பாடுதான் என்னை உயிர்வாழ வச்சிருக்குன்னு சொல்லி எனக்கு வாட்ச் ப்ரஸண்ட் பண்ணினார்.''

''அவருக்கு அப்புறம் இந்த ஆபீஸ்ல சரியா டிராமா போடறதுக்கு யாரும் வரலை.''

''ஆமாம். வரவில்லை. ஏனெனில் நாடகங்களின் காலம் முடிந்துவிட்டது. இது வெள்ளித்திரையின் காலம். சின்னத்திரையின் காலம்'' ஒரு இளைஞன் சாப்பாட்டு நேரத்தில் அவளுக்கு பதில் சொன்னான்.

''ஆனால் எந்தத் திரை இருந்தாலும் கூத்து வடிவத்தை விட எழுத்து வடிவம் உயர்வானது.''

''ஆமாம்டா. ரெண்டு கதை அட்டையில்லா புஸ்தகத்



வந்தவுடனே ஜெயகாந்தன்னு நினைப்பு.''

''நீ மனுஷக் குரங்குப்பா. உன்கிட்ட பேசவந்தேன் று.''

''யாரைப் பார்த்து குரங்குங்கறே'' அவர் சீறி எழுந்து த அவரைச் சமாதானம் செய்வது பெரும்பாடாய்ப் போய் ட்டது.

''இந்த ஆபீஸ்ல வேலை செய்துட்டே நாற்பது டிராமா டாக்ட் பண்ணிருக்கார். அவரு கால் தூசுக்கு ஈடாவியா ''

''அவர் முப்பத்திரண்டு வயசுக்கு தான் முதல் டிராமா போட்டார். கார்த்திகேயன் இருபத்தஞ்சு வயசுல மூணு த எழுதிட்டான். ஒரு நாவல் முடிச்சுட்டான்.''

சரஸ்வதி அந்த இளைஞனுக்கு வக்காலத்து வாங்கி னாள்.

''ஸோ வாட்... அவர் எங்கே... இந்த அல்டாம் எங்கே'' ஸ்வநாதன் கத்தினார்.

இன்னும் இரண்டு மூன்று பேர் அந்த டைரக்டருக்கு ந்து வந்தார்கள். அவன் பதில் சொல்ல எழுந்தான். சரஸ் தி தொலைவிலிருந்து உட்கார் என்று சொன்னதும் உட் ர்ந்து விட்டான்.

அந்த விஷயம்தான் புவனேஸ்வரிக்கு ஆச்சரியமாக ருந்தது. நாற்பத்து மூன்று வயசு சரஸ்வதி இருபத்தைந்து யது கார்த்திகேயனை உட்கார்ந்த இடத்திலிருந்து ஆட்டி வைப்பது அதிசயமாக இருந்தது.

''அவா ரெண்டுபேரும் ஃப்ரெண்ட்லா கஸ்தூரி.

''ஃப்ரெண்ட்லாவும் இருக்கலாம். மாமியார் மாப்பிள் ளையாவும் இருக்கலாம்.''

''என்ன சொல்றே.''

''பத்தொம்பது வயசுல அச்சா அவளைமாதிரியே ஸ்வதி ஒரு பொண்ணு வச்சிண்டிருக்காளே. ரகஸ்யமா தகம் கேட்டா. இவனும் கொடுத்தான். பொருத்திருக் ன்னு சொன்னாலும் நூல் சுத்தறா.''

''நூல் சுத்தறான்னா...''

''வலை...''

''மாப்பிள்ளையாக்கிக்கறத்துக்கா''

''முதல்ல மாப்பிள்ளையா வரட்டும். மிச்சத்தை அப்ப நாம் பார்த்துக்கலாம்.''

''த்தூத்தெறிக்க... என்ன பேசறே நீ.''

''இந்த உலகத்துல எவளும் ஒழுங்கில்லடி. இங்க எவ சொன்னாலும் மழை பெய்யாது. என்னையும் சேர்த்துதான் சொல்றேன்.''

''ஏன்.''

''நீயும் கார்த்திகேயனை மாப்பிள்ளையாக்கிக்க ணும்னு ட்ரை பண்றயா.''

''ஏய்... எனக்கு முப்பத்திரண்டு வயசு தான் ஆகிறது அவனை எப்படி நான் மாப்பிள்ளையாக்கிக்க முடியும். கொஞ்ச நாள் டாவடிச்சுட்டு வுட்ருவேன்.''

''ஐயோ இனிமே நான் உன்கூடப் பேசப்போறதே யில்லை கஸ்தூரி.''

''இப்படிப் பேசறவங்கதான் என்கிட்ட வந்து நான் கெட்டவார்த்தை சொல்ல மாட்டேனான்னு ஏங்கறாங்க.''

''சரி... டாவுன்னா என்ன.''

''அது ஒரு மாதிரி லவ்.''

''என்ன மாதிரி லவ்.''

''என் புருஷன் என்னை லவ் பண்றான் என்னை பிரியமா வச்சுக்கறான் ஆனாலும் எனக்குப் போறலை. இன் னும் யாராவது ஒருத்தர் என்னைக் கொஞ்சணும்னு தோன றது. யார் தோள்லயாவது சாஞ்சுக்கணும்னு தோன்றது இறுக்கிக் கட்டிக்கிட்டு என்னைக் கொஞ்சமாட்டானான்னு ஆசை வருது.''

''இதை உன் வீட்டுக்காரர்கிட்ட சொல்லிட்டயா''

''சொன்னேனே. இது இயல்புதான்னு சொல்லிட்டாரு.''

''இதையே அவரு சொன்னா ஒத்துக்குவியா.''

''ஒத்துக்காத என்ன செய்யறது. கட்டபொண்ணி லையா போட்டுட்டு வரமுடியும். அந்தாளும் எங்கயாவது ன்னு இளிச்சுக்கிட்டுதான் இருப்பான்;''

''கடவுளே... ரொம்பக் கேவலமான பொம்பளைடி கஸ்தூரி.''

''நான் மட்டும் தானா. நீயில்லையா.''



''ச்சே... ச்சே... இந்த மாதிரியெல்லாம் நன் யோசனை ண்ண மாட்டேன்.''

''இன்னும் நீ கனியலை. ரெண்டு வருஷம் போகட்டும். தெளிவா... மோசமா நீ யோசனை பண்ணுவே.''

''உலகத்துல நல்லவளே இல்லையா, கஸ்தூரி.''

''இப்படி யோசனை பண்றவா கெட்டவா இல்லைங்க ன். செக்ஸ் பத்திப் பேசினா அது அசிங்கம் இல்லை, ளாம உள்ள பூட்டி வச்சுக்கறது அசிங்கம். ரொம்பப் புனி னு பொய் சொல்றது தான் அசிங்கம்.''

''என்னைக் குழப்பறே கஸ்தூரி.''

''மக்கா ஒன்னுமே யோசிக்காம இருக்கறதைவிட யோசிச்சுக் குழம்பறது நல்லது. குழம்பினா தெளியும்.''

ஒரு அலுவலகத்தில் கஸ்தூரி போல வேகமாய், விரி ய் வெளிப்படையாய் பேசுகிற பெண்கள் சிலபேர் இருப் ர்கள். அவர்களுக்கு புவனேஸ்வரி அதிசயிப்பவர்களும் டப்பார்கள்.

யாரோ யாரையோ எதற்கோ தொடர்ந்து பின்பற்ற லகம் உருண்டு கொண்டிருக்கும். யாரும் யாரையும் பின் ற வேண்டிய தேவை இல்லை என்பது பிற்பாடுதான் யும்.

# 3

படிக்கும் போது படிப்பு அதிகம் என்று வீட்டு லை செய்யவில்லை. வேலைக்குப் போகும் போது லை அதிகம் என்று வீட்டு வேலை செய்யவில்லை. ளிலும் அதிகம் நகர்வதில்லை.

ஆனால் நீளி அதிகமாகிவிட்டது. கையில் காசு புழங்கி எண்ணெய் போண்டா, மிளகாய் பஜ்ஜி, வெங்காயப் கோடா, மிளகு தூக்கலான காராச்சேவு என்று தொறுக் நீனிக்கு நாக்கு பறந்தது.

''இன்னிக்கு சாரதா அவியல் பண்ணிக் கொண்டாந்தி காடி. அவ பொசரட்டுன்னு ஒன்னு பண்ணிக் கொண்டா ா. பத்துப்பன்னென்டு எடுத்துண்டு வருவா. டிபார்ட்

மெண்ட் மொத்தமும் சாப்பிடுவோம்.

இங்க யாருக்காவது பார்த்டேன்னா சாக்லேட் தரக்கூடாது. நெய் சர்க்கரைப் பொங்கல்தான். பண்ணி எடுத்துண்டு வரமுடியலைன்னா கேண்டீன் கோபால்கிட்ட சொல்லிட்டா அவன் செய்து எடுத்துண்டு வந்துருவான். வந்தபடத்துல எல்லாருக்கும் உள்ளங்கை நிறைய கொடுத்துருவான்.''

அந்த மத்திய சர்க்கார் அலுவலகத்தில் நீளிப் பண்டாரங்களாய் ஒரு கும்பல் சேர ஆண்களும் பெண்களும் உருளைத் திரளையாய் ஆனார்கள்.

வளரும் பருவத்திலுள்ள புவனேஸ்வரியும் குண்டானாள். இடுப்பு அகன்று போயிற்று. மார்புகள் பொங்கித் ததும்பின கன்னங்கள் சிகப்பேறி மினுமினுத்தன. உதடு ரசம் ததும்பி சிவந்திருந்தன. நடக்கையில் தேகத்தின் எல்லாப் பகுதியும் குலுங்கிற்று. பிராவின் சைஸ் கூடிக் கொண்டே போயிற்று.

''கொஞ்சம் சோத்தைக் குறைடீ'' அம்மா ஒரு நாள் கத்தினாள்.

புவனேஸ்வரிக்குக் கடும் கோபம் வந்தது. பதிலுக்கு அவளும் கத்தினாள்.

''வண்ணமா நீ திங்கலை... அப்பாவுக்குப் பிடிக்கும் அம்பிக்குப் பிடிக்கும்னு தினுசு தினுசா பண்ணி நீ திங்கலை... இன்னிக்கு ஏன் கத்திரிக்கா ரசவாங்கி பண்ணினே. யாருக்குப் பண்ணினே. நீ கொட்டிக்கறத்துக்காகப் பண்ணினே.''

அதிகம் படிப்பறிவில்லாத தாயை அதிகம் படித்த பெண் ஆரவாரமாய் கோபித்துக் கொண்டாள்.

அம்மாவை மன்னிப்பு கேட்க வைத்தாள்.

''இப்படி பேசினது உன் தப்பு. அவ நம்ம குழந்தை. அவ குண்டா இருக்கறதை நாமே கேலி பண்ணலாமா. அதைப் பக்குவமா சொல்ல வேண்டாமா. நாட்டுப்புறம் மாதிரி சோத்தைக் குறைன்னு சொல்றியே. உனக்கு மேல வளர்ந்துட்டா. அவ பொண் குழந்தையா இருந்தா என்ன. அதட்டிப் பேசாதே.

மறுபடி கத்தினேன்னு தெரிஞ்சுது... நீ தான் என்கிட்ட அறை வாங்குவே.''



மூன்றிலும் பத்தினியாக இருந்த அந்தப் பெண்மணி மூன்று குழந்தைகள் பெற்ற அந்தத்தாய் இந்தக் கண்டிப்புக்கு குறுகிப் போனாள். இனி யார் என்ன செய்தாலும் எதுவும் கேட்பதில்லை என்று சபதம் கொண்டாள். யார் என்ன வெற்றி பெற்றாலும் தான் அதைக் கொண்டாடுவதில்லை என்று தீர்மானம் செய்தாள்.

கண்டிக்காத, கொண்டாடாத உறவுகள் மிக ஆபத்தானவை. அநேகமாய் எல்லாக் குடும்பங்களிலும் எதிலும் தலையிடாத உறவுகளே அதிகம் இருக்கின்றன.

இளைஞர்களுக்கு வீடு கண்டிக்காதது ஆரம்பத்தில் சந்தோஷமாய்த்தான் இருக்கும். சோதனைகள் வரும்போது தான் கண்டிப்பின் அவசியம் புரியும்.

தனிமையில் தவிக்கும் போதுதான் கொண்டாடுவதின் அவசியம் தெரியும்.

புவனேஸ்வரி ஒரு காட்டுமான் போல எந்தக் கட்டுப்பாடுமின்றி வளர்ந்தாள். அலுவலகத்தில் சேர்ந்து இரண்டு வருடங்களாயின. இரண்டு பரிட்சையும் எளிதில் பாஸ் செய்ய முன்னூறு ரூபாய் அதிகம் கிடைத்தது. பதவி உயர்வு வேறு வந்தது.

கல்லூரி நாட்களை விட ஆங்கிலம் சரளமாக பேசமுடிந்தது.

ஐயோ... அவன் என்னையே பார்க்கறான்டி என்கிற ஆண் பயங்கள் அகன்றன.

''ஒரு தடவை இடிச்சே... ரெண்டு தடவை இடிச்சே... மூணாம் தடவையும் மேல வந்து விழறியே திமிறாடா உனக்கு.''

''ரெண்டு தடவை இடிக்கிற போது ஏம்மா சும்மா இருந்தே.'' பக்கத்தில் ஒரு கிழவர் கேட்டார்.

''உன் பொண்ணு புடவை கட்டறபோது ரெண்டு தடவை தெரியாத போயிட்ட... அவங்க அப்பாதானேன்னு அமைதியா இருந்தாங்க... ரெண்டு தடவையும் ஒன்னும் சொல்லலைங்கறதுக்காக மூணாம் தடவை போய் மக புடவையை அவுப்பியா.''

''சபாஷ்'' பஸ்கூட்டம் கை தட்டியது. ஆரவாரமாகப் பேசிய கிழவர் முகத்தில் ஒரு கூடைக்காரி எழுந்து 'தூ' என்று துப்பினாள்.

"இந்த மாதிரி நாலுபேர் வண்ணமா கேட்டா தான் இந்த பாடு பசங்க அடங்குவாங்க."

அவளை இடித்த ஆணின் முகத்தில் பையால் ஒரு பெண் ஓங்கி அடித்தாள்.

ஓடும் வண்டியிலிருந்து அவன் கீழிறங்க, தடுமாறி அவன் கீழே விழுந்தான். பின்னே வந்த சைக்கிள்கள் அவன் மீது மூட்டி விழுந்தன. அதைக் கடவுள் தண்டனை என்று எல்லோரும் கொண்டாடினார்கள். உதவிக்கு வந்த கிழவனை எல்லோரும் சபித்தார்கள்.

"உன் நாக்குல புத்துநோய் வரணும். நீ ஐயோ ஐயோன்னு சாவணும். அனாதைப் பிணமா போகணும். ஒரு சின்னப் பொண்ணைப் பார்த்து அப்படி கேட்டேல்ல. இன்னிலேர்ந்து உன்னைப் பீடை பிடிச்சது."

பல்வேறு விதமாகச் சபித்தார்கள். அவன் முகம் வெளிற இறங்கினான்.

அவள் அலுவலகத்தில், வீட்டில் இதைச் சொல்லி அலட்டினாள். அதிகம் வேகம் உள்ள பெண்ணாக ஆண்களை எதிர்க்கும் திறன் உள்ளவளாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள்.

"எதுக்குக் கல்யாணம். என்ன கல்யாணம்..." நான்கு பெண்களோடு உட்கார்ந்து அலட்டிக் கொண்டாள்.

அவள் பேசுவதைக் கேட்டு மூதிய பெண்கள் கண்சிமிட்டிக் சிரித்தார்கள்.

"ஏன் சிரிக்கிறீங்க." அவள் சீறினாள்.

"எதுக்குக் கல்யாணம்னு எப்ப கேக்கறயோ அப்பவே உனக்குக் கல்யாணத்துமேல ஆசை அப்பட்டன்னு அர்த்தம். கல்யாணத்துக்கு ஏங்கறேன்னு அர்த்தம். கல்யாணம் இல்லாம ஒரு பெண் இருக்க முடியாது. இருக்கக் கூடாது."

"இது பத்தாம் பசலித்தனம்" அவள் கூச்சலிட்டாள். கல்யாணமாகாத பெண்கள் அவளோடு சேர்ந்து கொண்டார்கள்.

"மிளகா பஜ்ஜிக்கு ஆசைப்பட்டு மூஞ்சூறு பொறியில மாட்டிடுத்தாம். அந்த மாதிரி ஆம்பளைக்கு ஆசைப்பட்டு கல்யாணத்துல மாட்டிண்டேள்."

அவள் சற்று அதிகப்படியாய் பேச கல்யாணமாகாத இரண்டு மூன்று பெண்கள் சட்டென்று வெளியேறினார்கள்.



"உனக்கு வாழ்க்கை தெரியலை. பேசத் தெரியலை. நல்ல புருஷன் கிடைக்கவேண்ணா நீ சொல்றதெல்லாம் சரி. நல்ல புருஷன் கிடைச்சுட்டான்னா நீ சொல்றதெல்லாம் தப்பு. நல்ல புருஷன் கிடைக்கறதும் கிடைக்காததும் அம்பது அம்பது சதவீதம். வாழ்க்கைல எல்லாமே அம்பது அம்பது சதவீதம். நீ உயிரோட இருக்கறதும் செத்துப் போறதும் அம்பது அம்பது சதவீதம். தயவுசெய்து எல்லாம் தெரிஞ்சது பேசாதே. என்ன பேசறோம்னு தெரியாத பேசாதே."

"என் புருஷன் நல்லவன். எனக்குக் கால் புடிச்சு விடறவன். என்னைக் கொண்டாடறவன். எங்கப்பா அம்மாக்கிட்ட இருந்ததை விட நான் இங்கே சந்தோஷமா இருக்கேன்."

"இதுக்குமேல இதைப் பத்தி உன்கிட்ட பேசமுடியாது. தயவு செய்து பேச்சைக் குறை. உடம்பைக் குறை. கல்யாணத்துக்கு ஆசைப்படு. உன் கூட உனக்கு ஆதரவா பேசற பெண்கள் உன்னை எவ்வளவு கேலி பண்றாங்கன்னு உனக்குத் தெரியுமா.

புவனா ஜீன்னு உன்னைக் கூப்பிடறாளேன்னு சந்தோஷப்படறியா. புவனா ஜீன்னா புவனா குண்டுன்னு அர்த்தம். ஜீன்னா குண்டு.

முதல்ல அடக்கமா இரு. அப்பதான் வாழ்க்கை புரியும். தயவு செய்து அமைதியா இரு. அப்பதான் எதிர்ல இருக்கறவா பேசறது புரியும்.

உங்கம்மாவை விதான்ல பார்த்தேன். சாப்பாடு தட்டைத் தூக்கியடிக்கிறியாமே. நான் உங்கம்மாவா இருந்தா உன் கையை ஒடிப்பேன். வெளியே போடின்னு விரட்டியடிச்சிருப்பேன்.

இருபத்தி நாலு வயசாச்சே. ஒரு சொம்பு ரசம் வைக்கத் தெரியுமா உனக்கு. பீன்ஸ் நறுக்கத் தெரியுமா... ஒரு கிலோ வெங்காயம் என்ன விலை. துவரம் பருப்புக்கும், கடலைப் பருப்புக்கும் வித்தியாசம் தெரியாத தத்தி. நீ எப்படி, தட்டு தூக்கி அம்மா மூஞ்சில அடிப்பே.

நான் இன்னிக்கு சொல்றேன். நீ எவகிட்டயோ செருப்படிபடப்போறே. உன் ஆட்டமெல்லாம் அடங்கி எலும்பு தெரிய நிக்கப் போறே. இப்படி உரிமைக்கு கத்தறதெல்லாம் வேரங்கெட்ட பொண்ணுங்க குணம். விடுங்கறது விட்டுக் கொடுக்கற இடம். நாம ஒன்னு விட்டுக் கொடுத்தா புருஷன்

ஒன்னு விட்டுக் கொடுப்பான். விட்டுக் கொடுக்கற புருஷன் வரணும்னு வேண்டிக்கோ. ஏதோ சில இடங்கள்ல அபோ… யனா புருஷன் கிடைச்சிருக்கலாம். அதுக்காக எல்லாரை யும் சொல்றது சரியில்லை.

வாழ்க்கை ரொம்பப் பெரிசு. நம்ம எடைக்கு அது கிடைக்கறதேயில்லை. இது சரி இது தப்புன்னு சொல்ல முடியறதேயில்லை. கேள்வியோட வாழ்ந்துட்டு கேள்வியோட சாகறது தான் நல்லது.

இது தான் சரின்னு சொல்றவனும் முட்டாள். தப்புன்னு எதிர்க்கறவனும் முட்டாள். தயவு செய்து அலட்டாத வாழ்க்கையை உற்றுப்பார். ஏதோ புரியும். புரிஞ்சுடுத்துன்னு சைலண்டாயிடுவே. யார் கத்தறாங்களோ அவங்களுக்குப் புரியலைன்னு அர்த்தம். தயவு செய்து கத்தாதே போ. வீட்டுக்குப் போ.

வீட்டுக்குப் போய் அம்மாக்கிட்ட அமைதியாப் பேசு. ஸாரின்னு சொல்லு. நீ சமையல் கத்துக்கறது தப்பே இல்லை. அது அசிங்கமேயில்லை. நீ சமைக்கறது உன் புருஷனுக்கு மட்டுமேயில்லை, குழந்தைகளுக்கு. உன் குழந்தைகளுக்கு உன்னால தான் நன்னா சமைக்க முடியும். ஆயாவால சமைக்க முடியாது. ஏன்னா அவங்களுக்கு எந்த அக்கறையும் இருக்காது. யாருக்கு அக்கறையிருக்கும்.''

''ஏனெனில்...'' அந்தப் பெண் பத்மா அவளைக் கூர்ந்து பார்த்தாள். ''ஒருமுகப்பட்ட அன்பும், அக்கறையும் இணைபிரியாதவை. அன்புதான் அக்கறை. அக்கறைதான் அன்பு.

நான் உனக்கு மறுபடியும் இதைச் சொல்ல முடியாது. ஏன்னா உனக்கு இதைச் சொல்ல எனக்கு நேரங்கிடைக்காது. அக்கறையுமில்லை. நீ எக்கேடுகெட்டா எனக்கென்ன.

இப்பச் சொல்றேன் கேட்டுக்கோ. நான் சொன்னதை யோசனை பண்ணிப்பார். விட்டுட்டே மறுபடியும் உனக்கு கேட்கக் கிடைக்காது.''

புவனேஸ்வரி அவளெதிரே திகைப்போடு உட்கார்ந்திருந்தாள்.

இரண்டு நாட்கள் யாரோடும் பேசாமல் அவள் சொன்னதையே யோசித்துக் கொண்டிருந்தாள். தான் எதிலாவது அக்கறையோடு இருக்கிறோமா என்று யோசித்துப் பார்த்



தாள். யார் மீதாவது முழு அன்போடு இருக்கிறோமா என்று உற்றுப் பார்த்தாள். கவனிக்க கவனிக்க பயமாக இருந்தது. யார் மீதும் அக்கறையில்லை என்று தோன்றியது.

ஏன் என்று யோசிக்க ஆரம்பித்தாள். எல்லாரிடமும் அலட்டிக் கொள்கிறோம். எப்போதும் அலட்டிக் கொள்கிறோம். பிறர் பேசும் முன்பே பேசிவிடுகிறோம். நான் சொல்வதைக்கேள் என்று உரத்துக் கத்துகிறோம். எதைப் பற்றியும் தீர்மானமான முடிவு வைத்திருக்கிறோம். எந்த ஆதாரமும் இல்லாமல் தீர்மானம், முடிவு பண்ணியிருக்கிறோம்.

''என்ன... ரெண்டு நாளா டல்லா இருக்கே.'' வேறு டிபார்ட்மெண்டிலிருந்து யாரோ கேட்டார்கள்.

புவனேஸ்வரி விஷயம் சொன்னாள்.

''அவ பேச்சக்கா உட்கார்ந்துட்ட. அவ சொந்த மாமா பையனை தன்னை விட பத்துநாள் பெரியவனைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கா. ஆம்பளை வயசும் பொம்பளை வயசும் ஒன்னா. இருபத்தஞ்சு வயசு ஆம்பளைய விட இருபத்தஞ்சு வயசு பொம்பளை அஞ்சு வருஷம் மூத்தவ இல்லையா. அவன் வயசுல சின்னவன். இவ அப்பா அம்மா வளர்த்தவன். இவ காலேஜ் படிக்கும் போது இவ ஷூம்மியை, சாக்ஸை, தோச்சு காயப்போட்ட பையன். எல்லாருக்கும் இப்படி புருஷன் கிடைப்பானா. போறத்துக்கென்ன... யார் வேணா பேசலாம். எதிராளி வாழ்க்கையைப் புரிஞ்சுண்டுல பேசணும். என் பக்கத்து சீட்காரி மாசம் பத்தாயிரம் ரூபா சம்பாதிக்கறா? தினம் அஞ்சு ரூபாதான் ஆம்படையான் கொடுத்தனுப்பறான். ஒன்னரை ஒன்னரை பஸ்ஸுக்கு போயிடுத்துன்னா மீதி ரெண்டு ரூபா. கார்த்தால காபி சாப்பிட்டா சாயங்காலம் சாப்பிட முடியாது. பர்த்டே சக்கரைப் பொங்கல் வாங்கறதுக்கு முதல்ல ஓடி வருவா. அவ கொடுத்ததேயில்லை.

யாரோ அதைக் கேலி பண்ண அவ ஒன்னு அழுதா. நான் செத்துப் போயிட்டா நம்ம ஆபீஸ்ல இருக்கறவங்க மாலையோட வந்து பார்க்க வேண்டாம். எங்கயாவது ஒரு கோயில் வாசல்ல சக்கரைப் பொங்கல் ஏழைகளுக்கு போடுங்கோ. என் ஆவி குளிரும்னு பேசினா.

இந்த ஆபீஸ்லயே மாமியார்க் கொடுமைல செத்துப் போனவ, மச்சினிக் கொடுமைல செத்துப் போனவல்லாம் உண்டு. உனக்கு வாழ்க்கை தெரியாதுன்னாளா... அவளுக்கு வாழ்க்கை தெரியாது. ஏதோ போன ஜென்மத்துப்

புண்ணியம் பொத்திண்டு ஜாக்கிரதையா வச்சுக்கச் சொல்லு. நாலுபேர்கிட்ட பேசி வயித்தெரிச்சலைக் கொட்டிக்க வேண்டாம்.

உம்மேல யாரு அன்பு வைக்கறா. அப்பந்தானடி நீ வைக்க முடியும். நீ வேணும்னு உன் அம்மா உன்னைப் பெத்துக்கலை. புருஷன் இழுத்தான்னு போய் படுத்துக்கிட்டா. நீ வேணும்னு உங்கப்பா உன்னைக் கொஞ்சலை. புள்ளை வேணும்னு ஆசைப்பட்டார். பொண்ணா பொறந்து தொலைஞ்சுடுத்து. தான் மலடு இல்லைன்னு நிரூபிக்க அவருக்கு நீ வேண்டியிருந்தே.

குழந்தைகள் இல்லைன்னா ஒரு குடும்பத் தலைவனுக்கு மரியாதையே இல்லை. அவன் காசை எல்லாரும் பங்கு போடுவா.

ஏதோ ஒரு ராணி, ரொட்டி இல்லேன்னா என்ன... கேக் சாப்பிடுங்கோ அப்படீன்னாளாம். அந்த மாதிரி இருக்கு அவ பேசறது. உபதேசம் என்ன... யார் வேணா பண்ணலாம். வாழ்க்கை வேற.

கல்யாணம் அவசியமா இல்லையாங்கறது உன் முடிவு, உன் சூழ்நிலை, உலகத்துலயே உசத்தியான விஷயம் கல்யாணம்தான்னு சொல்றதை நான் ஒத்துக்க மாட்டேன். கல்யாணம் பண்ணி வாழ்ந்தவ பத்துபேர்னா வதைபட்டவ நூறுபேர். தயவு செய்து அவ பேசறதைப் பெரிசா எடுத்துண்டு இடிஞ்சு போயிடாதே.

அடுத்த தடவை அவ பேசினா எனக்கு மீசை முளைக்காத மாமா பையன் யாரும் இல்லைன்னு சொல்லு. அப்புறம் அவ மூஞ்சிபோற போக்கைப் பாரு.''

புவனேஸ்வரி என்கிற அந்த இருபத்தி நாலு வயதுப் பெண்ணுக்கு உலகம் நாலு விதமாகவும் கற்றுக் கொடுத்தது. நாலு விதமாகவும் யோசிக்க வைத்தது. எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்று தெரியாமல் அவள் திகைத்தாள்.

வாழ்க்கையின் சோதனையே இந்தத் தேர்வு செய்வது தான். எதைத் தேர்வு செய்வோம் என்று தீர்மானித்து விட்டால் வாழ்க்கை சிக்கலில்லாத விஷயமாகப் போய்விடும்.

அன்று பிற்பகல் அவளுக்கு அப்பாவிடமிருந்து போன் வந்தது.

''கொஞ்சம் உடனே வர்றியாம்மா. அஞ்சு மணிக்கு உன்னைப் பெண் பார்க்கறத்துக்கு வர்றா.''



அவளுக்குள் சுட்டென்று ஒரு சந்தோஷம் வந்தது.

கடவுளே... என்ன புடவை இருக்கு. என்ன ரவிக்கை இருக்கு... தெரியலையே.

''சார்... ஆஃப் எ டே லீவ் வேணும். வீட்லேர்ந்து போன் வந்தது. நான் சீக்கிரம் வீட்டுக்குப் போகணும் சார்.''

''என்ன அவசரம் சொல்லு.''

''சொல்ல முடியாது சார்.''

''அப்ப லீவு தர முடியாது.''

விஸ்வநாதன் அச்சாணியமாய்ப் பேசினார்.

''என்னைப் பெண் பார்க்க வர்றா சார்.''

''வெரிகுட் கங்கிராஜுலேஷன்ஸ். அதிசீக்கிர விவாக பிராப்திரஸ்து...'' உரக்கக் கத்தினார்.

டிபார்ட்மெண்ட் முழுக்க திரும்பிப் பார்த்தது.

சில விஷயங்களை காதும் காதும் வைத்தாற்போல் செய்யவேண்டும் என்பது உண்மை. அவளை பெண் பார்க்க வரும் விஷயம் அலுவலகமெங்கும் இறைபட்டது. ஆயிரம் பேருக்குத் தெரிந்தது.

யாரோ ஒருத்தி பின்னாலேயே ஓடி வந்து கங்கிராஜுலேஷன்ஸ் என்றாள்.

பெண் பார்த்தவர்கள் அரை மணி நேரத்தில் கிளம்பினார்கள். அப்பா இறங்கி தெரு வரைக்கும் போனார்.

''பொண்ணு ரொம்ப குண்டா இருக்காளே. பழைய போட்டோ அனுப்பிச்சேளா. இப்பவே இவ்வளவு குண்டா இருந்தா கல்யாணத்துக்கப்புறம் பீப்பாயன்னா மாறிடுவா. தப்பா நினைச்சுக்காதீங்கோ. ஹார்மோன் டெஸ்ட் பண்ணிடுங்கோ.''

''எல்லாம் சரியா இருக்கு. உருவம்தான் பையனுக்குப் பிடிக்கலை. யார் யாருக்கு எங்கே எழுதிவச்சிருக்கோ அங்கே தானே நடக்கும்.''

வீடு கலவரத்தோடு அமைதியாயிற்று.

''சோத்தைக் குறைடி, சோத்தைக் குறைடின்னு அப்பவே சொன்னேன்.''

அம்மா கத்தினாள். அம்மாவை அப்பா கத்தினார்.

''எல்லாம் சரியா இருக்கு. நீதான் சரியா இல்லை.''

என்று அவளிடம் முடித்தார்கள்.

மறுநாள் ஆபீஸ் விசாரித்தது. மிக உண்மையான தோழி என்பவளிடம் ரகசியமாகச் சொல்ல, அவள் இந்தத் தோல்வியை எல்லோரிடமும் சொன்னாள்.

"சரி. நீ என்ன புடவை கட்டிண்ட அப்போ."

"ஏன்... காஞ்சிபுரம் பட்டு."

"அறிவிருக்கா, ஆபீஸுக்கு ஒரு நீலச்சுடிதார் போட்டுண்டு வருவியே அதைப் போட்டுக்கறத்துக்கு என்ன."

"பொண் பார்க்க சுடிதாரா."

புவனேஸ்வரி திகைத்தாள்.

"ஏன் போட்டுண்டா என்ன. நம்ம சாந்தி பொண்பார்க்கும் போது சுடிதார் தான் போட்டுண்டா... மாரும் இடுப்பும் தெரிய புடவை எதுக்கு."

"சாந்தி சௌராஷ்டிரா. தஞ்சாவூர் தமிழ் பேசினாலும் ஜாதிவேற. அவ சுடிதார்ல வரலாம். நீ சுடிதார்ல பொண் பார்க்க நிக்க முடியுமா. நீ என்ன புடவை கட்டினாலும் குண்டாதான் தெரிவே. உனக்கு இருபத்தி நாலு வயசா. பார்த்தா முப்பது மாதிரி தெரியறது."

"உன்னை எந்த ஆம்படையானாவது தூக்கி மடில வச்சக்க முடியுமா. செத்துப் போயிடுவான். மடிலயே உட்கார முடியலைன்னா, நீ வேற என்ன பண்ண முடியும். நீ ஹார்மோன் டெஸ்ட் பண்ணியே ஆகணும். ஹார்மோன் பிரச்சனை ஒன்னும் இல்லைன்னா, சோத்தைக் குறைச்சு இளைச்சாகணும்."

பசிச்சா தண்ணி குடி. ரொம்பப் பசிச்சா ஒரு பிஸ்கட் சாப்பிடு. அம்பது கிராம் சாதம், ஒரு சப்பாத்தி. கார்த்தால தானியக் கஞ்சி, ராத்திரி உப்புமா, பூரி இல்லை சப்பாத்தி. அரை ஆப்பிள் ஒரு கொய்யா. மாக்சிமம் மூனு காபி தான் குடிக்கணும். இதைத் தவிர வேற எதுவும் சாப்பிடவே கூடாது.

என்ன பண்றது. உன் உடம்புவாகு அப்படி. மேல இந்திராணின்னு ஒருத்தி இருக்கா. அரைப்படி புளியோதரை சாப்பிடுவா. ஆனா நரம்பா இருப்பா. அவ உடம்புவாகு அப்படி. கார்த்தால எழுந்து நட. தைட் ஸ்கிப்பிங் பண்ணு. அவள் தீவிரமாகத் தீனி அடக்க ஆரம்பித்தாள். காலையில் வேர்க்க விறுவிறுக்க நடந்தாள். உடற் பயிற்சி



கள் செய்தாள். மெலிந்தாள்.

மறுபடியும் வேறு உள்ளாடைகள் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

"கெட்டிக்காரிடி நீ புவனேஸ்வரி. பளிச்சுன்னு உடம்பு குறைச்சுட்டியே. எப்படி முடிஞ்சது. இதுக்கு மேல குறைக்காதே. சீக்காளியா போயிடுவே. இப்பத்தான் எல்லாம் எடுப்பா இருக்கு.

கொஞ்சம் உணவு நியதியைத் தளர விட்டாள். மறுபடியும் உடம்பு ஏறியது.

மீண்டும் யாரோ பெண் பார்க்க வந்தார்கள்.

"கொஞ்ச பருமனா இருக்காளே" என்று கவலைப்பட்டார்கள்.'

"போன மாசம் இளைச்சிருந்தா..."

"அடடா. நாங்க போன மாசமே பார்க்க வந்திருக்கணும். தப்பு பண்ணிட்டோம்." அவர்கள் கேலி செய்துவிட்டு போனார்கள்.

அவள் கடும்பட்டினி இருந்தாள். ஒருமுறை பஸ் நெரிசலில் மயங்கி விழுந்தாள்.

'ஐயோ பாவம் கர்ப்பிணி போல..." யாரோ இரக்கப்பட்டார்கள்.

அவள் விறுக்கென்று எழுந்து ஆட்டோ பிடித்து ஆபீஸ் போனாள்.

வாழ்க்கை ஏனோ மிக குழப்பமாக இருந்தது.

அவள் இருபத்தைந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடினாள். மனசின் மூலையில் ஏனோ வயசுபற்றி ஒரு கலவரம் ஏற்பட்டது.

அந்த ஜனவரி மாதம் அவள் கூடவே வேலை செய்த மூன்றுபேர் கல்யாணப் பத்திரிகை கொடுத்தார்கள். அதில் மிக வறுமையான குடும்பம் என்கிற வாத்தியாரின் மகளும் அடக்கம்.

"எங்கப்பாக்கிட்ட ட்யூஷன் படிச்சவரோட அண்ணா எந்த சீரும் கேக்கலை. அவங்களா பதினைஞ்சு பவுன் போடறாங்க. ஆறுபட்டுப்புடவை எடுத்துத் தராங்க. எங்கப்பா கணக்கு தவிர தமிழிலக்கியமும் நல்லா தெரிஞ்சவரு. நல்ல குடும்பமா வேணும்னு ஆசைப்பட்டு எங்களைப் பத்தி கேள்

விட்டாட்டு தானா முன்வந்து கல்யாணம் பண்ணிக்கிறாங்க. நான் தினம் கபாலிகோவிலில் போவேன். கற்பகாம்பாளைப் பன்னெண்டு தடவை சுத்துவேன். நான் போக முடியாத நாட்கள்ல எனக்காக எங்கப்பாவோ எங்கண்ணாவோ, என் தம்பியோ போவாங்க. கற்பகாம்பாள் கண்கண்ட தெய்வம். நீயும் வேண்டிக்கோ புவனேஸ்வரி.''

காலை ஏழு மணிக்குக் கல்யாணம். எட்டு மணிக்கு டிபன். பத்துமணிக்கு சத்திரம் காலி செய்து விட்டார்கள். ஆபீஸ் ஆட்கள் ஒரு ஐம்பதுபேர். உறவினர்கள் ஒரு ஐம்பது பேர் என்று அடக்கமான கூட்டம் தான் வந்தது.

அந்த மாப்பிள்ளை மிக அழகாக இருந்தான். திருக்குறளை சாட்சியாக வைத்து திருமணம் செய்து கொண்டான்.

புவனேஸ்வரி சோகத்தில் ஆழ்ந்தாள்.

தன் புருஷன் யார் என்று மனதுக்குள் தேடத்துவங்கினாள்.

**வே**று என்ன செய்வதென்று தெரியாமல் அடுத்த பரீட்சைக்குத் தயாரானாள். திருமணம் செய்து கொண்ட தோழிகளில் இரண்டு பேர் சூலுற்றார்கள். சுமக்கமுடியாமல் சுமந்து கொண்டு பெருமூச்சோடு அலுவலகத்திற்கு வந்து அமருவார்கள்.

அலுவலகம் அவர்களை பிரியமுடன் கவனித்துக் கொண்டது.

''முடிஞ்சா இதை டோட்டல் பண்ணு. முடியலைன்னா அப்படியே வச்சுடு. நாளைக்கு நான் பண்ணிக்கிறேன்.

நீ உன் டிபன்பாக்ஸை அலம்பி வைக்க வேண்டாம். நான் அலம்பி வைக்கிறேன்.

அந்த இருபதுக்கு ஒரு பஸ் இருக்கு. அது காலியாக இருக்கும். அதுல கிளம்பி உட்கார்ந்து போயிடு.

அட்டென்டன்ஸ் எடுத்தாச்சேம்மா. பரவாயில்லை. மத்தியானம் என் கைக்கு வரும். அப்ப கையெழுத்துப் போடு.''



சில சமயம் சிலர் வாந்தியெடுத்தும் ரகளை செய்வார்கள். அவர்களை இன்னும் பரிவாக அலுவலகம் கவனித்துக் கொண்டது.

ஒரு தலையணையை வயிற்றில் வைத்து துண்டால் இடுப்பில் கட்டி தான் கர்ப்பிணியாய் இருந்தால் தான் எப்படி இருப்போம் என்று அழகு பார்த்தாள்.

அவள் பார்ப்பதை அவள் அம்மா பார்த்தாள்.

''ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயர் கோயிலுக்கு வேண்டுண்டா கல்யாணம் ஆறதாமே.''

அம்மா சொன்னது அவளுக்கு கொஞ்சம் எரிச்சலாக இருந்தது. ஏன் எரிச்சலாக இருக்கிறது என்று தெரியாமலேயே எரிச்சல்பட்டாள்.

''ஸோ வாட்... இதை ஏன் என்கிட்ட வந்து சொல்றே. உண்மையான அக்கறை இருந்தா என் கிட்ட ஏன் சொல்ற நீ வேண்டிக்கோ.''

''நீ தானடி வேண்டிக்கணும்.''

வயிற்றில் தலையணையை கட்டிக் கொண்டதை அம்மா பார்த்துவிட்டாள் என்கிற கோபம் அவளைத் தொடர்ந்து சீற வைத்தது.

''நோ... நத்திங் டூயிங்.'' மறுத்து விட்டாள்.

''உன் கிட்ட வந்து சொன்னேம் பாரு அது என் தப்பு. கல்யாணம் பண்ணிக்கணும்னு நீ ஆசைப்படணும். நீ ஏங்கணும். நீ பிரார்த்தனை பண்ணணும்.

இதைப் பத்தி ரொம்ப மரியாதையா ஒரு பொம்மனாட்டி பேசணும், நோ நத்திங் டூயிங்கறது அலட்டல், அகம்பாவம், அகம்பாவமா இருக்கிறவாளுக்கு நல்லது நடக்காது. நடந்தாலும் நிக்காது.

உன் ஜாதகத்தை யார்கிட்ட கொடுத்தாலும் மென்னு முழுங்கறா. உன் கல்யாணத்தைப் பார்க்காமலே செத்துப் போயிடுவேனோன்னு ஒரு பயம் மனசுக்குள்ள இருக்கு.''

அம்மா பேசிக் கொண்டே கண்ணீர் விட்டாள்.

''சரி. நான் இப்ப என்ன பண்ணணுங்கறே. நீங்க நாலு இடம் ஏறி இறங்கி வரன் பார்க்காத என்னைக் குறை சொன்னா என்ன அர்த்தம். எத்தனை புஸ்தகத்துல இலவசமா போடறான், மணமகள், மணமகன் தேவைன்னு; எதுக்காவது போட்டிருக்கேளா, எங்கயாவது பதிஞ்சு வச்சிருக்

கேளா. நீங்க என்னவிட்டா பிராகநாரா... தானா கல்யாணம் ஆகறத்துக்கு இல்லை... எட்டு திசையிலயும் உறவு வச்சிண்டிருக்கேளா. யாரும் வீட்டுக்கு வந்தா ஆகாது. இன்னொருத்தர் வீட்டுக்குப் போகப்பிடிக்காது.

உங்கக்கிட்ட ஏகப்பட்ட குறைவச்சிண்டு என்னைப் பார்த்து இளக்காரமா பேசறேளே. எந்த ஆஞ்சநேயரும் உங்களைக் காப்பாத்தமாட்டாரு.''

அவள் கத்திவிட்டு அலுவலகம் போனாள்.

அலுவலகத்தில் இருக்கப் பிடிக்காமல் இரண்டு சிநேகிதகளோடு சினிமாவுக்குப் போனாள்.

படம் கடலிலுள்ள சுறாவைப் பற்றிய படம். ஆனாலும் ஆணும் பெண்ணும் ஜட்டியோடு வந்தார்கள். கட்டிப் புரண்டார்கள். பார்க்கிறவர்களை சூடேற்றினார்கள். அந்த காட்சிகள் புவனேஸ்வரிக்குப் பிடித்துப் போயின.

''இதென்ன சீன்.... ஹெரால் ராபின்ஸ் படிச்சிருக்கியா. ராத்திரி நேரத்துல படிச்சே, ஒரு மாதிரி பைத்தியமாக்கிடுவான்.''

சினிமாவுக்கு வந்த தோழி அவளுக்குப் புத்தகக் கடையைக் காட்டிக் கொடுத்தாள்.

நடுத்தெருவில் புடவையை உருவி சதக்கென்று வயிற்றில் கத்தியால் குத்தின திகைப்பு, நாவல் படித்ததும் ஏற்பட்டது. உறவுகளில் ஆண், பெண்கள் இறங்கித் தவிப்பது மிக வெளிச்சமாய் எழுதப்பட்டிருந்தது. வார்த்தைகள் நாய் போல் மூளையைக் கவ்விக் கொண்டன. எந்த வேலை செய்தாலும் தொடர்ந்து வந்தது. எத்தனை உலுக்கி விலக்கினாலும் இறுக்கப் பிடித்துக் கொண்டிருந்தது.

காமம் கொடிது. தீர்த்துக் கொள்ள முடியாத காமம் மிக மிகக் கொடிது. அது மனிதர்களின் மனதையும் உடம்பையும் உருக்கி விடுகிறது. இந்த தேசத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் தூண்டப்பட்ட காமத்தினால் அவதியுறுகிறார்கள்.

விஷம் உண்டுவிட்டு தடுத்து நிறுத்த பார்வதியில்லாமல் இளைஞர்கள் நீலம் பாய்ந்து கிடக்கிறார்கள். சீறிவரும் கங்கையைப் போன்ற உணர்ச்சிப் பெருக்கு பூமாதேவி போன்ற பெண்களைத் தாக்க, அவர்கள் நிலைகுலைந்து போகிறார்கள். கங்கையின் வேகத்தைக் கட்டுப்படுத்த கற்றைச்சடை சிவன் அவர்களுக்கு இல்லை.



ஆங்கில நாவல்கள் நெஞ்சில் குத்தின. சினிமாப் படங்கள் பாட்டி எடுத்தன. சினிமாப் பாடல்கள் மயக்கம் கவிழ்த்தன.

புருஷன் என்று மனதுக்குள் ஒருவனை உருவகித்துக் கொண்டு அவள் அவனோடு கொஞ்சினாள். கற்பனையில் ...கினாள். நிஜத்தை விட கற்பனை சுகம்.

ஆனால் கற்பனையில் மூழ்குகிறவர்கள் வலுவில்லாமல் போய் விடுகிறார்கள். பலவீனர்களாய் மாறிவிடுகிறார்கள். அவர்களால் வாழ்க்கையின் சிறிய தாக்குதலுக்குக் கூட ஈடுகொடுக்க முடிவதில்லை.

எல்லா நெஞ்சங்களும் கலவரம் கவிழ்ப்பனவாகவே அமைந்து விடுகின்றன. மாசிமாதம் இன்னும் நான்கு பேர் கல்யாணப் பத்திரிகை நீட்டினார்கள்.

இவளுக்குக் கல்யாணம், அவளுக்குக் கல்யாணம், ...ளுக்கு சீமந்தம், அவளுக்கு வளைகாப்பு, எல்லோருக்கும் வாழ்க்கை வளமாக ஓட புவனேஸ்வரிக்கு மட்டும் ...ங்கின குட்டையாய் இருந்தது.

''பையன் பிரைவேட் கம்பெனில மெக்கானிக்கா இருக்கான். டே ட்யூட்டி, நைட் ட்யூட்டி வரும்... பிட்டருக்கு படிச்சிருக்கான்.'' என்றார்கள்.

அவள் மறுத்துவிட்டாள்.

பையன் டாக்டர், பாங்காங்ல இருக்கான். இருபதாயிரம் சம்பளம் என்றார்கள். பையன் அவளைப் பல்வேறு கோணங்களில் வீடியோ எடுத்து அனுப்பச் சொன்னான். அவள் மறுத்துவிட்டாள்.

அவன் தன்னை வீடியோ எடுத்து அனுப்பியிருந்தான். அதையும் பார்க்காமல் திருப்பி அனுப்பிவிட்டாள்.

நடுவே தஞ்சாவூரில் எல்.ஐ.சி. குமாஸ்தா என்று ஒரு பையன் வந்தான். சிறிது கூடலஜ்ஜையில்லாமல் பெண் பார்ப்பதற்கு முன்பே நூறுபவுன் நகை போடறதா இருந்தா பெண் பார்க்கிறோம் என்றார்கள்.

''உங்கள் பிள்ளை இன்ஜினியரிங் படிச்சிருந்தா என்ன கேட்பீங்க'' அப்பா ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கேட்டார்.

''மெட்ராஸ்ல பதினெட்டு லட்ச ரூபாய்க்கு ஃப்ளாட் கேட்போம்.''

"எனக்கு அவ்வளவு வசதியில்லை, நீங்க வேற இடம் பாருங்க" அப்பா கை உதறி எழுந்து விட்டார்.

"இப்பெல்லாம் நூறு பவுன் ஒரு சீரே இல்லை. ஏதோ நீங்கதான் அலுத்துக்கறீங்க. முப்பத்திரண்டு வருஷமா வேலை செய்யறீங்க. வருஷத்துக்கு நாலு பவுன் வாங்கியிருந்தீங்கன்னாக்கூட தாண்டியிருப்பீங்களே. வருஷத்துக்கு நாலு பவுன் கூட வாங்கலைன்னா அது வீடா." அவர்கள் போவதற்குள் அதிகம் பேசினார்கள்.

அப்பா கோபத்தை அடக்கிக் கொண்டார் சோர்வ னார்.

"இந்த ஜனவரில நல்ல வரன் வரும் பாருங்க. அவளுக்கு குரு பலன் வந்தாச்சு."

ரெண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு ஒரு ஜோசியர் சத்தியம் செய்தார்.

மிகச் சரியாய் அவர் குறிப்பிட்ட காலத்தில் ஒரு வரன் வந்தது.

பையன் விஞ்ஞானியாக இருந்தான். மருந்துக் கம்பெனியில் ஆன்ட்டிபயாட்டிக் ஆராய்ச்சி செய்தான். பெண் பார்க்க வந்து எல்லோரிடமும் கலகலவென்று பேசினான்.

"இது எங்க ப்ராடக்ட் தான்" ஒரு மாத்திரையைக் கையிலெடுத்துப் பார்த்துப் பேசினான். "கெமிஸ்ட்ரி பத்தி ஏதாவது தெரியுமா புவனேஸ்வரி" சகஜமாய் விசாரித்தான்.

"உங்களால என்ன முடியுமோ அது பண்ணுங்கோ. கல்யாணம் கொஞ்சம் கிராண்டா பண்ணுங்கோ. உனக்குப் பிடிச்சிருக்கா டா புவனேஸ்வரியை."

"பிடிச்சிருக்கும்மா. இவங்க வீடு நல்லா இருக்கு. எல்லார் மேலயும் எல்லாரும் பிரியமா இருக்காங்க. புவனா நல்லா இங்கிலீஷ் பேசறாங்க."

"பாம்பேல ரெண்டு மூணு பெண் பார்த்தான். அவனுக்குப் பிடிக்கலை. மாடர்னாவும் இருக்கணும். அமைதியாவும் இருக்கணும். அப்படின்னு ஆசைப்படறான்."

புவனேஸ்வரி வெறுமே தலைப்போடு உட்கார்ந்திருந்தாள். அவனிடம் எவ்வளவு தூரம் கலகலப்பாகப் பேசுவது என்று தெரியாமல் விழித்தாள்.

"நிச்சயதார்த்தம் எப்போ வச்சுக்கலாம்."

"எங்க சொந்தக்காராக்கிட்ட கலந்து பேசி நாங்க



ல்லி அனுப்பறோமே சார். நீ எந்த ஆபீஸ் எந்த செக்..." ஆளுக்கு ஆள் கேள்வி கேட்டு தெரிந்து கொண்டு னார்கள்.

டு மகிழ்ச்சியில் மூழ்கியது.

சத்திரம் புக் பண்ணிடலாமா என்று பரபரத்தது.

"என்ன தேதிக்குன்னு பண்றுவேள்... ஒரு வாரம் க அவாளைப் பாருங்கோ."

ஆனால் அதற்கு முன்பே அவர்கள் வீட்டிலிருந்து ன் வந்தது.

நாங்க வேற இடம் பார்க்கிறோம்.

"ஏன்... என்ன..." புவனேஸ்வரியின் அப்பா பதறி."

"நாடி ஜோஸ்யம் கேட்டோம். சரியாவரலை."

"உண்மையைச் சொல்லுங்கோ சார்"

அங்கே எதிர்பக்கம் தயங்கினார்கள்.

"சரி சொல்றோம். தப்பா நினைச்சுக்காதீங்கோ. உங்க ள் ரொம்ப குண்டாயிருந்தாளாமே. புஷ்டியாமே. ளா குண்டாமே."

"ஆமா என்ன இப்போ. இப்ப இளைச்சுட்டாளே."

"ஹார்மோன் ப்ராப்ளம் இருக்காமே."

"யார் சார் சொன்னா."

"அது கேட்கப்படாது. நாங்களும் சொல்லப்படாது. யூ ஆல் த பெஸ்ட் சார்." போனைத் துண்டித்து டார்கள்.

அப்பா இடிந்து போனார்.

வீட்டிற்கு வந்து விஷயம் சொல்லும்போது கண்ணில் ம் விட்டு அழுதார்.

"யார் இப்படி சொல்லிருப்பா. இவா ஆபீஸ்ல தான் ல்லிருப்பா. கேடு கெட்ட ஜென்மங்களெல்லாம் அந்த பீஸ்ல தானே வேலை செய்யறதுகள். கவர்மெண்ட்ல ளம் வாங்கிண்டு இவளைப் பத்திப் பேசறதும் அவ ளைப் பத்திப் பேசறதும். அங்க இருக்கற எந்த சண்டாளியா சந்தோஷமா இருக்காளா. அவா யாராவது விளங்கு வா." அம்மா வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதாள்.

யார் சொன்னது என்று தெரியவே இல்லை.

ஆனால் நான்கு மாதம் பொறுத்து அவரைக்காய் மண்டையும் அசட்டுப் பேச்சுமாய் இருந்த ஒரு பெண்மணியின் மகளுக்கு அந்தவிஞ்ஞானி தாலிகட்டினான் என்று செய்தி வந்தது.

# 5

"உன்னைப் பத்தி விசாரிக்க வந்தாடி. பொண்ணு எப்படி.... நல்லவளான்னு கேட்டா. உன்னைப் பண்ணிக்கணும்ற எண்ணத்துல தான் இருந்தா.

பையன் புளியங்கொம்புன்னு புரிஞ்ச பிறகு, நல்ல இடம்னு புரிஞ்சபிறகு அந்த டிபார்ட்மெண்ட்ல இருக்கற அத்தனைப் பொம்மனாட்டியும் ஒன்னா சேர்ந்து உன்னைப் பத்தி தாறுமாறா சொல்லி உன் கல்யாணத்தை நிறுத்தினா. அதை விட நல்ல பெண்ணா ஏற்பாடு பண்றோம்னு, அந்த அவரைக்கா மண்டைப் பொண்ணுக்கு பேசி முடிச்சுட்டா. அறுபது சவரன் நகை. ஆறு கிலோ வெள்ளி. மாருதி கார் எல்லாம் தராளாம்.

அந்த அவரைக்கா மண்டக்காரிதான் நீ ஹார்மோன் செக்கப்புக்கு போறேன்னு லீவ் லெட்டர் எழுதியிருந்ததை ஜெராக்ஸ் எடுத்துப் போய் காமிச்சாளாம்."

மனசைப் பிழிந்து யாரோ வெளியே வீசினார்கள், அழக்கூட முடியாமல் திகைத்து நின்றாள்.

"உனக்கு எப்படி தெரியும்."

"அந்த டிபார்ட்மெண்ட்ல வரதராஜன்னு ஒருத்தர் இருக்கார். மூணு தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டு இன்னும் அந்தக் கடன் அடைச்சிண்டிருக்கார். அவர் கண்ணுல ஜலம் விட்டு இதை என்கிட்ட சொன்னார். புவனேஸ்வரியை ஜாஸ்தி பேசச் சொல்லாதீங்கோன்னு சொன்னார். புவனேஸ்வரியை பேசவிட்டுட்டு பின்னால கேலி பண்ணி சிரிக்கறான்னு சொன்னார்."

"எனக்கு அந்த வரதராஜனோட பேசணும்."

புவனேஸ்வரி கேட்டாள்.



"பேசலாம்னு சொன்னார். ஆனா இங்க வேண்டாம். எலியட்ஸ் பீச் பக்கம் வந்துடச் சொன்னார்."

அவள் அந்த வரதராஜனை எலியட்ஸ் பீச் பக்கம் போய் சந்தித்தாள்.

பெரிய மூக்கு. முகம் முழுவதும் அம்மைத் தழும்பு. உயரம். உயரத்தால் ஒரு கூனல். நடுவகிடு எடுத்து குங்கும பொட்டு. பேண்ட் விலை அதிகம் என்று போடுவதே இல்லையாம். வேட்டி பழக்கமாகிவிட்டதாம்.

அவளுக்கு என்ன சொல்லபட்டதோ, அதை அவர் மறுபடி சொன்னார்.

"ஏன் உங்களுக்குக் கல்யாணம் ஆகலை புவனா."

"தெரியலையே. எங்க வீட்ல பார்த்துண்டுதான் இருக்கா. ஒன்னும் தகைய மாட்டேங்கறது."

"நீங்க மனசுல யாரையாவது நினைச்சிண்டிருக்கேளா."

"புரியலையே."

"யாரையாவது லவ் பண்றேளா."

"நோ... நோ... நான் அப்படியெல்லாம் இல்லை."

"நான் பண்றேன். நான் உங்களை லவ் பண்றேன்." வரதராஜன் எட்டி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

அவள் விடுவித்துக் கொண்டாள்.

தடுக்கி குப்புற விழ முதுகில் மரம் முறிந்து விழுந்தது போல் உணர்ந்தாள்.

"என் மனசுல அப்படி ஒரு எண்ணம் வரலை சார்."

"ஏன் நான் அழகா இல்லையா."

"ஆம்பளைக்கு அழகு கம்பீரம் சார்."

"ஏன் நான் கம்பீரமா இல்லையா."

"கம்பீரங்கறது பேச்சுல தெரிஞ்சுடும் சார்."

"நான் என்ன தப்பா பேசினேன்."

"நான் ஏதோ ஒரு வேதனைல உங்கக்கிட்ட வந்திருக்கேன். நீங்க லவ்வூன்னு சொல்றீங்களே"

"ஸாரி. நான் சொன்னதை மறந்துடுங்கோ." அந்த வரதராஜன் எழுந்து விருக் விருக்கென்று செருப்பு தேய

நடந்து போனாள்.

தன் நிலைமையை நினைத்து புவனேஸ்வரி கண்ணீர் விட்டாள்.

ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயர் கோயிலில் இறங்கினாள்.

'நீயெல்லாம் ஒன்றும் காப்பாத்த மாட்டேடா. நீ யெல்லாம் வெறும் வடை, பாயாசம். லஞ்சம் கேட்கற ஆசாமி. ஜனங்க வேதனை தாங்காம உன் கிட்ட வந்து முட்டிக்கறோம். நீ கடவுளே இல்லை.'

தோள் பையை இறுக்கிப் பிடித்து, ஆஞ்சநேயரை வெறித்துப் பார்த்தபடி புலம்பினாள்.

ஒரு மாலை நழுவி ஒரு பக்கமாய் ஊசலாடியது. யாரோ ஆஹா ஆஹா என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். ஆஞ்சநேயர் அவளிடம் ஏதோ பேசியதாக அவளும் நினைத்துக் கொண்டாள். என்னவென்று தெரியாமலே வெளியே வந்தாள். எல்லாம் தெரிந்த நிலை, எதிலும் தெளிந்த நிலை என்பது வெகு சிலருக்கே ஏற்படுகிறது.

அவளுக்கு காபி சாப்பிட வேண்டும் போல் ஒரு தாகம் எழுந்தது. ஒரு ஹோட்டலுக்குள் வாரப் பத்திரிகைப் படித்தபடியே காபி குடித்தாள்.

"ஹலோ, வணக்கம்" யாரோ கைகூப்பினார்கள்.

"நீங்க புவனேஸ்வரிதானே."

அவள் நிமிர ஏதோ ஒரு பரிச்சயமான வாலிபன் எதிரே நின்றிருந்தான்.

"யார்... தெரியலையே"

"நான் சங்கர நாராயணன் சங்கர். நானும் தணிக்கைதான். மூணாவது ஃப்ளோர்ல இருக்கேன். ஒரு உதவி பண்ணணுமே."

"என்ன..."

"இருபத்து மூணு ரூபா, அம்பது பைசா வேணும். ஹோட்டல்ல வந்து டிபன் சாப்பிட்டேன். பர்ஸ் எடுத்துண்டு வரலை. என்னடா பண்றதுன்னு உட்கார்ந்துண்டிருந்தேன். நீங்க வந்தீங்க. வாட்ச், செயின் வச்சுட்டு போலாம். அதை விட உங்ககிட்ட கடன் வாங்கறது பெட்டர். என்னைத் தெரியறதா. இல்லை எதாவது சந்தேகமா."



"சந்தேகம் தான். எதாவது அடையாளம் சொல்லுங்களேன். உங்க முகம் பார்த்த மாதிரியும் இருக்கு. பார்க்காத மாதிரியும் இருக்கு."

"வரதராஜன்னு மூஞ்சில அம்மைத் தழும்பா செக்ஷன் ஆபீஸரா இருக்காரே, அவரு எங்க செக்ஷனுக்கு அடுத்த செக்ஷன். உங்களுக்கு வந்த வரன் உங்களைப்பத்தி எங்க செக்ஷன்ல தான் விசாரிச்சது. எங்க செக்ஷன்ல லேடீஸே இல்லை. நாங்கதான் வரதராஜன் மூலமா அவங்க செக்ஷன் லேடீஸ்கிட்ட மாப்பிள்ளையினுடைய அம்மாவை அனுப்பிச்சோம்."

வரதராஜன் ரொம்ப மரியாதையா நம்ம ஆபீஸ் பொண்ணைப் பத்தி விசாரிக்கறா... நல்லதா சொல்லுங்கன்னு செக்ஷன் லேடீஸை கேண்டீனுக்கு அனுப்பினார். செக்ஷன் லேடீஸ் கவுத்துட்டான்னு கேள்விப்பட்டதும், ரொம்ப வருத்தப்பட்டார். ச்சே... நானா சொல்லிருக்கணும். அவங்ககிட்ட இந்த லேடீஸை அனுப்பிச்சது ரொம்ப தப்புன்னு வருத்தப்பட்டார். உங்கக் கல்யாணத்தை தான் கெடுத்துட்டதற்காகத் தலையில அடிச்சக்கிட்டார்."

அவள் முகம் மாறியது. மறுபடி கண்களில் நீர் கோர்த்தது. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது... ஒரு பயத்தில் உடல் சிலிர்த்தாள். பர்ஸ் பிரித்து சங்கர நாராயணனிடம் ஐம்பது ரூபாய் நீட்டினாள். சங்கர நாராயணன் வாங்கிக் கொண்டான். எதிரே உட்கார்ந்து கொண்டான்.

"ஐயம் ஸாரி. என் இருபத்து மூணு ரூபா அம்பது பைசாவுக்காக உங்க மனசைக் காயப்படுத்திட்டேன். நான் வேற எதாவது சொல்லிருக்கணும். அழறீங்களா. ப்ளீஸ், ஐயாம் ஸாரி."

"ச்சே... ச்சே... அதெல்லாம் ஒன்னுமில்லை." அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். கர்ச்சீப்பில் முகம் புதைத்துக் கொண்டாள். லேசாய் உடம்பு குலுங்கி அழத் துவங்கினாள்.

"ப்ளீஸ், புவனேஸ்வரி எல்லாரும் பார்க்கறாங்க."

அவள் நிமிர்ந்து முகம் துடைத்துக் கொண்டாள்.

அவள் கையிலிருந்த காபி பில்லையும் அவன் உருவிக் கொண்டான். கல்லாவில் காசு கொடுத்துவிட்டு மிச்சத்தைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

"ப்ளீஸ் மிச்ச சில்லறை என்கிட்டயே இருக்கட்டும்.

காச இல்லாது கலவரமா இருக்கு. நாளைக்கு அம்... ரூபாய் கொடுத்துடறேன்.''

''ப்ளீஸ், தர வேண்டாம்.''

''அப்ப காவண்டர் சொன்னது கரெக்டா போச்சு.''

''என்ன சொல்லிச்சு.''

''பணம் வரவு.''

அவள் சிரித்தாள்.

''நீங்க எங்க போகணும்''

''மாம்பலம்.''

''என் கூட வண்டில வாங்க''

''வேண்டாமே.''

''நீங்க உட்கார்ற பாக்கியம் என் வண்டிக்குக் கிடைக்கக் கூடாதா.''

''சரி.''

அவன் ஹோட்டலுக்கு வெளியே வந்து ஒரு மாருதி எஸ்டீம் பக்கத்தில் நின்றான்.

ஐயோ மாருதி எஸ்டீமா... அவள் வியப்பில் விழி மலர்த்தாள்.

''நல்ல போங்கா இருக்கே. சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஆபீஸ் உத்தியோகம் பண்றவனுக்கு மாருதி எஸ்டீமா. இது யார் காரோ... சும்மா போய் பக்கத்துல நின்னேன். நம்முது ஸுஸுகி ஸமுராய்.''

அவன் மோட்டார் சைக்கிள் அருகே சாவியோடு நின்றான்.

அவள் ஏமாற்றப்பட்ட விதம் குறித்து வாய் விட்டுச் சிரித்தாள். அவன் கூப்பிட்ட பிறகும் அங்கேயே நின்றாள்.

''நீங்க முதல்ல வண்டி எடுங்க. இந்த மோட்டார் சைக்கிள் என்னுதில்லை, என் வண்டி ட்வெண்டி ஒன் ஜெனு... சொல்லிடுவீங்க. உங்க கைல இருக்கிற சாவி பார்த்தா வீட்டு சாவி மாதிரி இருக்கு.''

அவன் சாவி போட்டு வண்டி திறந்தான். உதைத்து ஸ்டார்ட் செய்தான். அவளருகே வந்தான்.

''நான் அப்படி ஒரு டயலாக் சொல்லலாம்னு தான் நினைச்சேன். நீங்க உஷாராயிட்டீங்க.''

''ஏன் இது உங்க வண்டி இல்லையா.''

''என் வண்டி தான். இல்லாத வண்டியை என் வண்டி மாதிரி நடிச்சது போல இருக்கற வண்டியை என்னுது இல்லைங்கற மாதிரி நடிக்க நினைச்சேன் கவுத்துட்டீங்க.''

''ஏன் தடாபுடான்னு இருக்கீங்க.'' அவள் ஆவலோடு கேட்டாள்.

''போரடிக்குதுங்க. பத்துமணி ஆபீஸ். ஆறு மணிக்கு விடு. நாலு மணி நேரம் வேலை. ஒன்பது மணி நேரத்துக்கும் ஒன்றுமே சாதிக்காம செத்துருவோம்னு பயமா இருக்கு. ஒடும் சோம்பேறியாயிடுவோம்னு பயமா இருக்கு. வேலைய விட்டுரலாம்னு பார்த்தா எங்க வீட்ல லபோ திபோன்னு கத்தறாங்க.''

''வீடுன்னா யாரு... மனைவியா.''

''இந்த முசுரக்கட்டைக்குக் கல்யாணம் ஒன்னுதான் கேடு. நாலாயிரத்து நானூறு ரூபாதாங்க சம்பளம். கைல மூவாயிரத்து நானூறு ரூபாதான் வர்றது. இது வச்சுக்கிட்டு என்ன கல்யாணம் பண்ண முடியும். என்ன குடித்தனம் செய்ய முடியும். ஒரு முழம் மல்லிப்பூ அஞ்சு ரூபா. சுமாரான புடவை மூன்னூறு ரூபா. எனக்கு கல்யாணம் பண்ணிக்க பயமா இருக்குங்க.''

''கல்யாணம் பண்ணிக்கணும்னா எவ்வளவு ரூபா சம்பாதிக்கணுங்க.''

''இப்ப இந்த தொண்ணூத் தேழாம் வருஷத்துல பத்தாயிரம் ரூபா சம்பாதிச்சாதான் ஆம்பளை. பன்னெண்டாயிரம் சம்பளம் இருந்தா தான் பத்தாயிரம் கைக்கு வரும். இதுல சொந்தமா ஒரு ஃப்ளாட் இருந்துட்டா இன்னும் சுகம். ஸுஸுகி சமுராய் போறாது. புல்லட் வேணும். அதுலதான் ...த்து வயசுப் பொண்ணு, அஞ்சு வயசுப் பையனைக் கூட்டிண்டு போலாம்.''

''அப்ப தணிக்கை ஆபீஸ்ல கல்யாணம் பண்ணின ஆம்பிளைங்கெல்லாம் தப்பு.''

''இருபது தேதியாச்சுன்னா அஞ்சு ரூபாய்க்கும், பத்து ரூபாய்க்கும் எப்படி அல்லாடறாங்க தெரியுமா.''

''அப்ப என்ன பண்ணப் போறீங்க.''

''கம்பெனி செக்ரெட்டரிஷிப் படிச்சிண்டிருக்கேன்.

பதினாறு பேப்பர் எழுதணும். நாலு நாளா எழுதிட்டிருக்கேன். பாஸாயிட்டேன்னு வச்சுக்கோ. நல்ல கம்பெனியில பி.ஏ.வா உட்காந்துக்கலாம். பி.ஏ.ன்னா ஸ்டெனோ கிராஃபர் இல்லை. மானேஜிங் டைரக்டரோ, பி.ஏ. செக்கரட்டரி டு த கம்பெனி. நானும் உங்களைக் கேட்கணும்னு நினைச்சேன். இந்த மாதிரி படிக்கறதை விட்டுட்டு ஏன் சென்ட்ரல் கவர்ன்மென்ட்ல வந்து மாட்டினீங்க.''

''இந்த மோட்டார் சைக்கிள் ஓடுமா.'' அவள் கண்சிமிட்டி கேட்டாள்.

''ஏன்.''

''ரொம்ப நேரமா இங்கயே நின்னு பேசிண்டிருக்கேனே... ஒரு வேளை ஓடாத வண்டியோ...''

''விக்கிரமா... உன்னைப் பற்றி இழிவாகப் பேசுவதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறாய்.''

''யார் விக்கிரமன்.''

''என் மோட்டார் சைக்கிள். சிலசமயம் செல்லமா விக்கின்னு கூப்பிடுவேன். தயவு செய்து உட்காருங்க. ஒரு நிமிஷம் இருங்க.''

''ஏன்'' அவள் திகைத்தாள்.

''சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்'' அவன் தலையில் குட்டிக் கொண்டான்.

''என்னாச்சு.''

''முதன்முதல்ல என் வண்டில உட்கார்றேள். என் வண்டிக்கு பூஜை பண்ண வேண்டாமா. தொடர்ந்து நீங்க உட்காரணும். இந்த வண்டி வாங்கி முதன் முதல்ல ஒரு லேடி உட்கார்றேள். உங்களை மாதிரி பல லேடீஸ் வந்து இந்த வண்டில உட்காரணும்.''

அவள் நெஞ்சுச் சேலையைப் பிடித்துக் கொண்டுச் சிரித்தாள். அவள் வண்டியில் உட்கார்ந்தாள்.

வண்டி ஹோட்டல் விட்டு வளைந்து நகர்ந்து சாலையில் இறங்கி பல பேருந்துகளைக் கடந்து குதிரை போல ஓடியது. அவள் அந்த வேக பயத்தில் அவன் தோளை இறுகப்பிடித்துக் கொண்டாள். அவன் பிரேக் போட முதுகில் முட்டினாள்.

ஒரு ஆணோடு அத்தனை நெருக்கமாய் அவள் இருப்பது அதுவே முதல் தடவை. அவள் இறங்கியதும் வீட்டுக்



...ள் நடந்ததும் எப்படி நிகழ்ந்ததென்றே தெரியவில்லை.

மனம் புருஷக்கனவுக்கு இறங்கும் போது தடுத்து நிறுத்...னாள்.

அந்தக் கெட்டக் கனவெல்லாம் வேண்டாம். அவன் ...லியான பையன். ஏதோ அரை மணிநேரம் தமாஷா ...பொழுது போச்சு. அத்தோட விடும். கடிந்து கொண்டாள்.

மறுநாள் மாம்பலம் டெர்மினஸ் வந்த போது டெர்மின...ஸுக்குள் அவன் மோட்டார் சைக்கிளோடு உள்ளே நுழைந்...தான்.

''விக்கிரமா ரொம்ப மோசம்'' என்று கத்தினான். ''குட் ...மார்னிங்'' என்று அவளை பார்த்து கூவினான்.

''குட்மார்னிங் என்னாச்சு.''

''இந்த விக்கிரமன் ரொம்ப மோசங்க.''

''ஏன்.''

''படிக்காவெட்டி ராஸ்கல். பொம்பளை வேணும். ...பொம்பளை வேணும்னு அலையறானுங்க. நேத்து உட்...கார்ந்தாங்களே... அந்த லேடி வேணும்னு கேட்கறான். ...என்னை மீறி டெர்மினஸுக்குள்ள நுழைஞ்சுட்டான்.''

''செருப்பு பிஞ்சு போயிடும்னு சொல்லுங்க.''

''சொல்றேங்க. நிச்சயமா சொல்றேன். விக்கிரமா, குடு...ணமிருந்தா ஓடிப்போயிடு. நீ தப்பு பண்ணிட்டு ...என்னை மாட்டி விடாதடா.'' அவன் அழுவது போல் நடித்...தான்.

அவள் ரசித்தாள்.

''ஏங்க... விக்கிரமன் வேற ஒரு மேட்டர் சொல்றான்.''

''என்னவாம்.''

''மவுண்ட் ரோடுல வன்னியர் ஊர்வலமாம். பல்லாவ...றினா பன்னெண்டு ஒன்னு ஆவுமாம் போய் சேர. சில்ட...ட்டப் போறாங்க. நம்ம கூட வந்துரச் சொல்லுங்கறான்.''

அவள் சோழிகள் இறைத்தது போல் சிரித்தாள்.

மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்தாள். வண்டி அவ...ளைச் சுமந்து கொண்டு கிளம்பியது.

சட்டென்று நின்றது.

மிஸ். புவனேஸ்வரி, நீங்க விக்கிரமனுக்குத் தான் சில்

டர். எனக்கு சிஸ்டர் இல்லை. தயவு செய்து என்னை அண்ணன் மாதிரி நினைச்சுடாதீங்க.

அவள் சிரிப்பும் மோட்டார் சைக்கிள் சப்தமும் ஒன்றாய் கலந்தன.

இந்தே நிமிடத்தில் அலுவலகத்தில் இருந்தார்கள். கேண்டீனுக்குப் போய் உட்கார்ந்து கொண்டார்கள். இட்லி, வடை, சாம்பார், காபி சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டபடியே நிறைய பேசினார்கள். பேசுவதற்காகவே சாப்பிட்டார்கள்.

அன்று மாலை அவன் அந்த ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போனான்.

"நான் எதாவது தப்பா பேசிருந்தா மன்னிச்சுக்கோ என்னைத் தொடர்ந்து சந்தோஷமா வாழலை. உனக்கு நன்றியா உனக்குப் பிடிச்ச பேரை தினம் அஞ்சு நிமிஷம் இங்க சொல்றேன்.

ஓம் ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்,

ஓம் ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்."

தொடர்ந்து அவன் மனமுருகி சொல்லத் துவங்கினான். நன்றியில் கண்ணீர் பெருகியது.

ஆனால் உலகத்தில் இன்பமும் துன்பமும் இணைபிரியாதவை.

## 6

"இன்னைக்கு ஆபீஸ்ல என்ன வேலை."

"வழக்கம் போலத்தான்."

"அரைநாள் லீவு போடலாமா" அவன் கேட்டான்.

"போடலாம்" அவள் பதில் சொன்னாள்.

அவன் வண்டியை வேறுபக்கம் திருப்பினான்.

ஒரு வீட்டு வாசலில் இறங்கி உள்ளே அழைத்துப் போனான். குண்டாய் ஒரு மாமி வரவேற்றாள்.

"இவங்க சுசீலா. எனக்கு சொந்தக்காரங்க. வேண்டப்பட்டவங்களுக்கு மட்டும் முகத்துக்கு ஹெர்பல் ட்ரீட்மெண்ட்



தருவாங்க. உன் மூஞ்சில சின்னச் சின்னதா கருப்புப்புள்ளி இருக்கு. புருவம் சரியில்லை. கண்ணுக்குக் கீழ கருவளையம். கல்யாண மார்க்கெட்ல இருக்கே. டல்லா இருந்தா எப்படி? நான் வெளியே போயிட்டு வரேன் இன்னும் ஒன்னரை வர்ல உன் முகத்தை இம்ப்ரூவ் பண்ணிடுவாங்க."

அவனுக்கு அந்த இடத்தில் மிகுந்த மரியாதை இருந்தது. ஆண்களும் பெண்களும் சூழ்ந்து கொண்டு விசாரித்தார்கள்.

அவன் மாமியோடு சமையலறைக்குப் போய் காபி கேட்டு வாங்கி அவளுக்கும் ஒரு டம்ளர் கொடுத்தான்.

"எனக்கு மேக்கப் பண்றது தொழில் இல்லை. என் குழந்தைகளுக்குப் பண்ணுவேன். உறவுக்காரங்களுக்குப் பண்ணுவேன். கொலுவுக்கு கிருஷ்ணர் வேஷம் ராதை வேஷம்னு போட ஆரம்பிச்சு அது இப்படி முடிஞ்சிடுத்து" அந்த அம்மாள் மிருதுவாக பேசினாள்.

"நீ நாலு நாலு பேப்பரா எழுதி என்னைக்கு முடிப்பே. உனக்கு எதுக்கு சென்ட்ரல் கவர்மெண்ட் உத்தியோகம். ஷேர் மார்க்கெட்ல மக்கு மடையன்லாம் காசு அரிச்சுக் கொட்டறான். உன்னால முடியாதா. காசு முக்கியம்டா. மோட்டார் சைக்கிள் போதும்னு தயவு செய்து இருக்காதே" ஒரு அறுபது வயதுக் கிழவர் ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"கார் வாங்கணும் குறைஞ்சபட்சம் சிட்டில மூணு வீடாவது இருக்கணும். மாசம் நாப்பதாயிரம் ரூபா சம்பாதிக்கணும். நான் சொல்றது லக்ஸரி இல்லை. அடிப்படை.... அத்தியாவசியத் தேவை.

உங்க வீட்ல வரன் பார்க்கறாளா. உங்கக்கா சிங்கப்பூர்ல சௌக்யமா இருக்காளா.... ஆஸ்திரேலியால இருக்கற உங்கண்ணன் எப்படி இருக்கான். மயிலாப்பூர் ஒரு மூட்டு சந்துல ரெண்டேகால் லட்ச ரூபாய்க்கு ஒரு ஃப்ளாட் வருது வாங்கிப் போடறியா. சிங்கள் பெட்ரூம். கார் போகாது. சைக்கிள்தான். கதவு திறந்தா கேசவ பெருமாள் கோவில் நானூதம்பது ஸ்கொயர் ஃபீட்."

காசு காசு என்று அவர்கள் பேசிக் கொண்டிருக்க அவனும் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேர மாவு தடவலுக்குப் பிறகு மாமி முகம் கழுவிக் கொள்ளச் சொன்னாள்.

புருவம் வில்லாய் இருந்தது. முகம் நிலவாய் இருந்தது.

மாமி நூறு ரூபாய் கேட்டாள். கொஞ்சம் அதிகம் என்று புவனேஸ்வரிக்குப் பட்டது. மோட்டார் சைக்கிளில் ஏறி அலுவலகம் வந்தார்கள்.

"அடேயம்மா... டக்கரா இருக்கியே" எல்லோரும் வியந்தார்கள்.

யார்கிட்டயும் சொல்லாத என்று சங்கர நாராயணன் சொல்லியிருந்ததால் அவள் சொல்லவில்லை. தானே ஃபேல்பேக் போட்டுக் கொண்டதாய் சொன்னாள். யாரும் அதை நம்பவில்லை.

அவன் தன் செக்ஷனிலிருந்து போன் செய்தான்.

"என்ன சொல்றாங்க டிபார்ட்மெண்ட்ல" என்று கேட்டான்.

"நாளைக்கு மேட்னி போலாமா." தொலைதூரமிருந்த தியேட்டர் சொன்னான்.

"வேணாம்ப்பா. வீண் வம்பு வரும்."

அவள்பயம் காட்ட சரி அப்ப வேண்டாம் என்று போன் வைத்து விட்டான்.

வில்வநாதனிடம் வந்து கிரிக்கெட் பேசினான்.

ஆனால் அவன் வந்தது அவளுக்காகவே என்பது அவளுக்குப் புரிந்தது.

ஒரு துண்டுக் காகிதத்தில் மேட்னி போகலாம் என்று எழுதி ஃபைலில் சொருகி இந்த ரூல் என்ன... என்று கேட்டான்.

"ஐயோ இது ஜாலியான ரூல். தேங்க்யூ" என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

மறுநாள் அவனோடு சினிமா போகப்போகிறோம் என்கிற சந்தோஷம் அவளை அன்றிரவு தூங்கவிடவில்லை. அவள் கனவுக்குள் அவனுக்கு சமைத்துப் போட்டாள். பரிமாறினாள். அவனோடு புடவைக் கடைக்கு அலைந்தாள். நிறைய நகைகள் வாங்கினாள்.

அவன் அவுருடி என்று அதட்ட அவிழ்த்தாள். எண்ணங்களால் செயலும் செயலால் எண்ணங்களும் மாறி மாறி ஏற்படுகின்றன. எல்லா செயல்களுக்கும் எண்ணங்கள்தான் ஆதாரம். மனம் கற்பனையில் மிதக்கும் போதே அதை கட்டுக்குள் வைக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். மனதை மேய விட்டுவிட்டால் அது நிஜத்திற்கும் கற்பனைக்கும் இடையே உள்ள ஒரு மயக்க நிலைக்கு கொண்டு வந்து விடும். அந்த மயக்க நிலை மிக ஆபத்தான விஷயம். என்ன



யோசிக்கிறோம். என்ன செய்கிறோம், என்கிற தெளிவு அறவே இல்லாது போய்விடும். நிஜம் புரியாது போய் விடும்.

காமத்தைக் கவனமாகப் பார்க்க கட்டுக்குள் வைத்திருக்க எல்லோருக்கும் தெரியாது. அது புத்தி வலுவானவர்களையெல்லாம் ஏமாற்றிவிடும்.

எல்லாம் கிடக்க ஏன் காமத்தில் மட்டும் அதிகம் கவனமாக இருக்க வேண்டும்.

ஏனெனில் வேறு எது தோற்றாலும் இந்த ஊர் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. காமத்தில் தோற்று விட்டால் இந்த தேசம் அதிகம் இழிவு செய்கிறது. கெடுகெட்டவள் என்று பெண்ணை அழைக்கிறது. பொம்பளைப் பொறுக்கி என்று ஆணுக்குப் பட்டம் சூட்டுகிறது.

காமத்தில் தோற்ற பெண்ணை... குறிப்பாய் மிகவும் இழிவு படுத்துகிறார்கள். அநியாயத்துக்குப் புறக்கணிக்கிறார்கள்.

ஏனெனில் இன்னமும் கூட இந்த தேசத்துப் பெண்களுக்குக் காமம் அசிங்கம். அது ஒரு கன்றாவி. மனம் முழுக்க காமமும் புத்தி முழுவதும் துவேஷமும் கொண்டு ரெட்டைத் தலை பாம்பாய் நெளிகிறார்கள். இரண்டு பக்கமும் இழுபட்டு சிக்கல் நிரம்பியவர்களாய் இருக்கிறார்கள்.

ஒரு காட்டு மிராண்டியைப் போல் தன் ஜாதியைக் கொண்டாடுகிறவனை, தன் மதம் புகழ்ந்து பிறமதத்தை இகழ்கிறவனை மதித்து பயந்து நடக்கிற மக்கள் காமம் பற்றி யார் சொன்னாலும் ச்சீ... ச்சீ என்று அருவறுக்கிறார்கள்.

மக்கள் பொய்யர்களாக இருந்தால் அரசும் பொய்மை நிரம்பியதாகத்தான் இருக்கும். அதிகாரிகள் திருடர்களாகத்தான் இருப்பார்கள். துறவிகள் சுகவாசிகளாய்த்தான் அலைவார்கள். மக்களை யாரும் திருத்த முடியாது. திருத்தியதாய் சரித்திரமில்லை. மக்களாகத் திருந்திதான் நாடு செழிப்பாகியிருக்கிறது மரணத்தைக் கண் முன்னே கண்டு அனுபவித்த மக்கள் தான் உடனே திருந்தியிருக்கிறார்கள்.

மனிதம் வளர்க்கத்தான் மரபு. மரபை விட மனிதர்கள் முக்கியம் என்பதை மரணத்தின் நிழலில் தான் மனிதனால் புரிந்து கொள்ள முடியும்.

மரணத்தின் நிழலில் சிறிது காலம் இருந்த தேசம் தான் தன்னை மறுபடி உதறி புதுப்பித்துக் கொண்டிருக்கிறது. நாம் யார்... நாம் எவ்விதம் வாழ வேண்டும், இனி என்ன செய்ய

வேண்டும் என்று யோசித்து தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறது.

நம் மரபு நமக்கு வலுவுள்ளது தானா அல்லது வழக்கொழிந்து செத்துப்போன ஒன்றா. இன்றைய விஞ்ஞானமும் நமது மரபும் ஒத்துப் போகின்றனவா அல்லது எதிர் எதிரா என்று ஒரு சமூகம் பார்க்க வேண்டும்.

பொருளாதாரச் சிக்கலும் சமூக மரபுகளும் என்பது பற்றி அறிஞர்களும் மதவாதிகளும் யோசிக்க வேண்டும். வெளிப்படையாய் விவாதிக்க வேண்டும்.

உள்ளே சுய லாபத்தை விவாதித்து வெளியே அறிக்கை விடுகிற அயோக்கியர்கள் தான் இங்கு அதிகம்.

சக உயிர்கள் மீது கருணை உள்ளவர்கள் தான் இங்கு அதிகம். இடைவிடாது பிறரை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் தான் இங்கு அதிகம். இந்த சமூகத்தில் புவனேஸ்வரி சிறிய புல். வெறும் நாற்றங்கால். இந்தச் சமுதாயம் அவளுக்கு உரமூட்டாமல் விஷம் ஊட்டியது. அவளை சந்தோஷமில்லாமல் அடித்தது. புறம் பேசியது.

மனநோய்ப்பட்ட மக்கள் வாழும் இடத்தில் இளைஞர்களும், யுவதிகளும் கருகத்தான் முடியுமே தவிர வளர முடியாது. கருகுதலுக்கு ஆரம்பம் கற்பனையில் வசித்தல். இடையறாது கனவு காணுதல். வாழ்க்கையின் நிஜத்தைப் பார்க்காமல் கண்களை மூடிக் கொள்ளுதல்.

அவள் தன்னை வெகுவாய் அலங்கரித்துக் கொண்டு ஆபீஸுக்குப் போனாள். பிற்பகல் லீவு எழுதிக் கொடுத்தாள்.

"வெரிகுட்... எனக்குப் புரிஞ்சுடுத்து." விஸ்வநாதன் அசட்டு உற்சாகத்தோடு கத்தினார்.

அவளுக்கு திக்கென்றிருந்தது.

"இன்னிக்கு உன்னைப் பொண் பார்க்க வரா. ரைட்டா."

மஞ்சள் பற்களைக் காட்டினார்.

புவனேஸ்வரி சமாதானமானாள். அவனோடு தியேட்டரில் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். அவன் அவள் கைகளைக் கோர்த்துக் கொண்டான். அவளுக்கு அது பிடித்திருந்தது. அவன் மெல்ல கன்னத்தை அவள் தோளில் வைத்தான். அதுவும் பிடித்திருந்தது. அவன் முழங்கைகள் மெல்ல நெஞ்சை உரசின. அவளுக்கு அதுவும் பிடித்திருந்தது. படத்தில் இருட்டு வரும் போது தியேட்டரும் இருட்டாகியது. அவன் அவள் முதுகைச் சுற்றி கைபோட்டு இடுப்பைத்



தடவினான். அவள் அவஸ்தையில் உதடு கடித்தாள்.

விழி சொருகினாள். வேண்டாம் என்று வலுவில்லாமல் தள்ளினாள். அவன் இன்னும் இறுக்கினான். எல்லா இடங்களையும் தொட்டான்.

"சங்கர்."

"என்ன..."

"நீ எனக்கு யாரு." அவள் குழறிக் கேட்டாள்.

"புருஷன்" அவன் திடமாய் பதில் சொன்னான்.

"ஐலவ்யூ... ஐ வாண்ட் டு மேரி யூ."

"சினிமா முடிஞ்சவுடனே இதுபத்தி பேசறோம்" அவன் இன்னும் அருகில் இழுத்தான்.

அவள் தன்னைத் தளரவிட்டாள்.

"நான் அடுத்த வருஷம் சென்ட்ரல் கவர்ன்மென்ட் வேலையை ரிஸைன் பண்ணிடுவேன். தனியா லெதர் ப்ராடக்ட் தயார் பண்ணப்போறேன். மணிபர்ஸ், ஹேண்ட் பேக், ஓவர்கோட், லெதர் பேண்ட், பெல்ட், பவுச், வெய்யில் தொப்பி... இந்த மாதிரி பதினாறு ஐட்டத்துக்கு லைசென்ஸ் அப்ளை பண்ணியிருக்கேன். லைசென்ஸ் கிடைச்சவுடனே ஆர்டர் கேன்வாஸ் பண்ணனும். எல்லாத்திலேயும் குறைஞ்ச பட்சம் ஆயிரம் பீஸ் அனுப்பணும்.

எடுத்தவுடன் பன்னெண்டு லட்ச ரூபா வேணும். அடுத்த மாசமே ஒரு பத்து லட்ச ரூபா வேணும். என் காசு ஆறு ரூபா போடறேன். எங்கப்பா ஆறு ரூபா போடறார். ஆர்டர் பார்த்தா, பாங்க் பத்து லட்ச ரூபா கடன் தரும். முதல் லாட் அப்ரூவ் ஆயிடுத்து... லாகிடா பத்து லட்ச ரூபா லாபம். அடுத்த ஆர்டர் வந்தது... பாங்க் இருபது லட்ச ரூபா கடன் கொடுக்கும். எல்லாம் சரியா ஓடித்துன்னா ஒரு வருஷத்துக்கு இருபதிலேர்ந்து முப்பது லட்ச ரூபா லாபம் கிடைக்கும்.

இது எல்லாம் லைசென்ஸ் கிடைக்கறது பொறுத்து. அதுக்கு ஒரு ஆறு மாசமாகும். அது வரைக்கும் இங்க குப்பை கொட்டிண்டிருக்கணும். முதல் லாட் அனுப்பிச்ச பிறகு கல்யாணம் பண்ணிக்கிறேன். ரெண்டாவது லாட் வித்து காசு வந்த பிறகு நீயும் வேலையை ரிஸைன் பண்ணிடு.

ரெண்டு பேரும் இறங்கினம்னா தடதடன்னு ஒரு ஹைட்டுக்கு வந்துடலாம்." அவன் அடுக்கிக் கொண்டே போனான்.

அவள் அவனையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நாம் பேசிப் பழகறதை வெளிய சொல்லலாமா, வேண்டாமா" திடுமென்று கேட்டாள்.

"அடுத்த வாரம் சொல்றேன். அது வரைக்கும் ரகசியமா வச்சிரு." அவன் உத்திரவிட்டான்.

அவள் சரியென்று தலையசைத்தாள். அவன் சாமர்த்தியத்தை உற்றுப் பார்க்க ஆரம்பித்தாள்.

ஆனால் எது ரகசியம். அதுவும் ஆணும், பெண்ணும் பழகுவது எப்படி ரகசியமாய் இருக்க முடியும். நாலு நாள் சேர்ந்து ஒரு ஆணின் மோட்டார் சைக்கிளில் போனால் ஐந்தாம் நாள் ஊர் விசாரிக்கிறது. பஸ் ஸ்டாண்டில் இது வரை பார்த்தேயறியாத ஒரு கிழவி காவிப் பல் தெரிய விசாரிக்கிறாள்.

"என்னம்மா... உங்காள் வரலையா... கரெக்டா ஒன்பதேகாலுக்கு இங்க வந்து நிப்பாரே. இன்னிக்கு என் ஆளைக் காணோம்."

நாம் மட்டுமே உலகம். நம்மை யார் கவனிக்கப் போகிறார்கள். என்று நினைத்துக் கொண்டிருப்பது பொய் என்று தெரிந்து விடும். ஒரு ஆணையும், பெண்ணையும் கவனிப்பதை விட சுவாரசியமான விஷயம் இந்த உலகத்திற்கு வேறு எதுவுமில்லை.

வெளி உலகமே வியந்து கவனிக்கையில் அலுவலகம் என்கிற உள்உலகம் கவனிக்காமல் போகுமா... கண் சிமிட்டாமல் பேசுமா.

பிடி வந்துவிட்டது. களிறு எங்கே ஜன்னல் வழியே வாசலைப் பார்த்து கிழவர்கள் பேசுவார்கள்.

"ஏறாத மலை தனிலே ரெண்டு ஜோரான கவுதாரி டோய்."

கடக்கும் போது பாடுவார்கள்.

மறுபடியும் இரண்டு பெண்களுக்கு திருமணம் என்கிற பேச்சு அடிபட்டு அவர்களும் பத்திரிகைக் கொடுத்தார்கள்.

"நீ எப்படி தரப் போறே. உனக்கும் வயசாயின்டேயிருக்கு". ஒரு நாள் மடக்கி யாரோ கேட்டார்கள்.

"எல்லா ஏற்பாடும் பண்ணின்டிருக்காம்மா சீக்கிரம் தருவா" இன்னொருவள் சிரித்துக் கொண்டே பதில் தருவாள்.



"நீ சொல்ற தோரணையைப் பார்த்தா கல்யாணத்துக்கு முன்னாடி சீமந்தப் பத்திரிகைல கொடுத்துடுவாப் போலிருக்கு."

எத்தனை ரகசியமாய் பேசினாலும் எல்லாப் பேச்சுமே அவள் காதுக்கு எட்டியது.

அந்தப் பெரிய அலுவலகத்தில் பல நூறு சோகக் கதைகள் இருந்தன.

"விஜயாவோட புருஷன் அவளை டைவோர்ஸ் பண்ணணும்னு அவ மாமியார் அவ வீட்டு வாசப்படியில தகடு பதிச்சு வச்சிருக்கா. சூனியம் வச்சிருக்கா."

பிரேமாவுக்கு இது மூணாவது மிஸ் கேரியேஜ். தப்பு உன் பேர்ல இல்லை. உன் புருஷன் பேரிலதான்னு டாக்டர் சொல்றா. டாக்டர் சொன்ன விஷயத்தைப் புருஷன்கிட்ட சொல்றத்துக்கு இவளுக்கு பயம்."

"பிரூலாவோட தங்கையை அவ புருஷன் ரகசியமா கல்யாணம் பண்ணின்டுட்டானாம். அவளும் பிள்ளையாண்டிருக்கா இவளும் பிள்ளையாண்டிருக்கா. பைல அம்பது தூக்க மாத்திரை கட்டா வச்சிருக்கா. பிடுங்கப் போனா பெரிசா கத்தறா."

"நாலாவது மாடில சொர்ணம்னு ஒரு அம்மா இருக்கா நாப்பத்தாறு வயசு. பொண்ணுக்குக் கல்யாணம் ஆகி பேரனும் பிறந்தாச்சு. சொர்ணத்தம்மா டைவோர்ஸ் அப்ளை பண்ணிருக்கா, சாகறதாவது நிம்மதியா சாகணும்னு சொல்றா. அடுத்த மாசம் கேஸ் வருது. கேஸ்ல ஜெயிக்கணும்னு தினம் நூத்தெட்டு தடவை பிள்ளையாரைச் சுத்தறா. மத்தியானம் சாப்பிடறதில்லை."

வாழ்க்கை பயமுறுத்தியது. ஆனாலும் புவனேஸ்வரி சங்கர நாராயணனை உயிருக்குயிராய் காதலித்தாள்.

அதற்குப் பிறகு இந்தக் காதலை வெளியே சொல்லலாமா இல்லை ரகசியமாய் வைத்துக் கொள்ளலாமா என்பது பற்றி அவன் பேசவேயில்லை.

ஆனால் ஆயிரம் பேர் வேலை செய்கின்ற அந்த அலுவலகத்தில் ஒன்றாய் வந்து இறங்கினார்கள். ஒன்றாய் கிளம்பிப் போனார்கள். ஏழெட்டு சினிமாக்களில் அவளைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டது தவிர இறுக்கி முகர்ந்ததைத் தவிர அவன் பெரிய அத்துமீறல் செய்யவில்லை.

ஆனால் மனைவி என்று அவளை அடிக்கடி உணர வைத்தான். ஒரு புருஷனைப் போல் நடந்து கொண்டான்.

சின்னச் சின்ன அதிகாரங்கள் செய்தான்.

அவள் அவன் மீது முழு நம்பிக்கையோடு இருந்தாள். அவளுடைய சிநேகிதிகள் என்னடி என்ன சொல்றான் என்று விசாரித்த போது திருமணம் செய்ய உத்தரவாதம் அளித்திருப்பதாய் சொன்னாள்.

''மடக்கி போடுடி. கமிட் பண்ண வை'' ஒருத்தி அறிவுறுத்தினாள்.

''ஐயோ... அதெல்லாம் வேண்டாம். பண்ணாதே. கொஞ்சம் விலகியே இரு. ஆபீஸ் காம்பவுண்ட்ல பேசு. ஒருவேளை இவன் சரியா வரலைன்னாலும் ஆபீஸ் சிநேகிதம்னு சாதாரணமா சொல்லிடலாம். வெளியே போனே, படுத்துண்டேன்னு முத்திரை குத்திடுவாங்க.''

அவளுக்கு வந்த வரனைப் பிரித்த அவரைக்காய் மண்டை அவளை வழியில் மடக்கிக் கேட்டாள்.

''என்னம்மா... எப்ப கல்யாணப் பத்திரிகை கொடுக்கப்போறே.'' எல்லாம் மறந்து விட்டது போல் நடித்தாள்.

சுரீரென்று ஒரு கோபம் பற்றிக் கொண்டது.

''உன்னைப் போல துரோகி இருந்தா இந்த ஆபீஸ்ல எவளுக்குக் கல்யாணம் ஆகும். செய்யறதை செஞ்சுட்டு கேள்வி வேறயா.''

''நீ என்ன சொல்றே.''

''செருப்பு பிஞ்சுடும், போடி..''

''ஏய். நாக்கை அடக்கிப் பேசு.''

''எல்லாம் கடவுள் செயல்னு தான் பாரத்தைத் தூக்கி வச்சுட்டு வாயை மூடிண்டிருக்கேன். கேலி பண்றியா. சீண்டிப் பார்க்கறியா. அழிஞ்சு போயிடுவேடி. அன்னிக்கு வயித்தெரியலை. இன்னிக்கு நீ கேட்கறபோது வயிறெரியறது. நீ அழிஞ்சு போவே. உன் பொண்ணு கலைஞ்சு போவா.''

புவனேஸ்வரி பொறுக்க மாட்டாமல் உரக்கக் கத்தினாள். அவளை மற்ற பெண்கள் அடக்கி இழுத்துக் கொண்டு போனார்கள்.

''அரசாங்கக் கேண்டீனில அரசியல் பேசக்கூடாதுன்னு போர்டு போட்டிருக்கீங்கள்ள... அதே மாதிரி கல்யாண விஷயம் பேசக் கூடாதுன்னு போர்டு போடணும். கத்திக்குத்து விழுந்துரும் போலல்ல இருக்கு.''

ஆண்கள் கேலி செய்தார்கள்.

காக்கை உட்கார பனம் பழம் விழுந்த கதையோ அல்



ஒரு கடும் கோபம் தான் சாய்ந்ததோ. அந்த அவரைக்காய் மண்டை பெண்மணியின் கடைசி மகன் ரயில் விபத்தில் சிக்கினான். வலது கால் முறிவு ஏற்பட்டு அவன் போட்டோ பத்திரிகையில் வந்தது. ரத்த சேதாரத்தினால் பேச்சு மூச்சற்றுக் கிடந்தான்.

அலுவலகம் புவனேஸ்வரியின் சாபத்தையும் இந்த விபத்தையும் இணைத்துப் பேசியது.

விஷயம் தெரியாத வருக்கெல்லாம் விஷயம் தெரிய வந்தது.

அந்த வரன் தட்டிப் போய் இரண்டு வருடங்களாகியும் புவனேஸ்வரிக்கு திருமணம் நடக்காதது வெகுவாய் பேசப்பட்டது.

அந்த அவரைக்காய் மண்டை பெண்மணி ஆறுமாத லீவில் பையனுக்கு வைத்தியம் செய்யப் போனாள். அப்படிப் போவதற்கு முன்பு புவனேஸ்வரியைத் தேடி வந்தாள்.

''நான் எதாவது தப்பா நடந்திருந்தா தயவு செய்து மன்னிச்சுக்கோ. நான் எதாவது தப்பாப் பேசிருந்தா அதுக்கும் மன்னிப்பு கேட்டுக்கறேன். மத்தவாளைக் கெடுக்கணும்கற எண்ணம் என் மனசுல இல்லை. தேன் எடுக்கப் போற போது கிளையை முறிக்கற மாதிரி ஏதோ நடந்து போச்சு. கிளையை முறிக்கணும்கற எண்ணம் இல்லை. தேன் பார்க்கற போது கிளை ஞாபகம் வரலை.

எனக்கு உண்டான தண்டனையை பகவான் எனக்குக் கொடுத்துட்டான். உன் வேதனை எனக்குப் புரியுது. மறுபடி சொல்றேன். மன்னிச்சுக்கோ, உனக்கு நல்ல இடத்துல கல்யாணம் ஆகணும்னு நான் வேண்டிக்கறேன்.'' ஒரு நாடகம் போல சொல்லிவிட்டு போய்விட்டாள்.

அலுவலகக் கூட்டம் அவள் பக்கம் அனுதாபத்துடன் திரும்பியது.

ஐயோ பாவம்.... ஐயோ பாவம் என்று அவளைக் கொண்டாடியது.

அவளுக்கு மறுவருடம் அலுவலகத்தில் சேர்ந்த நான்கு பெண்கள் திருமணப் பத்திரிகைக் கொடுத்தார்கள். ஒருத்தி உறவு. ஒருத்தி ஏர்ஃபோர்ஸ், ஒருத்தி மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ். ஒருத்தி ஸ்டேட் கவர்ன்மென்ட் குமாஸ்தா.

''மாநில அரசு குமாஸ்தா தான். ஆனா போலீஸ் டிபார்ட்மென்ட். ஆறு ஆட்டோ ஓடுது. கல்யாணம் திருத்த

னிவ. ஒன்றரை லட்ச ரூபாய்க்கு ஒரு பழைய அம்பாசிடர் வாங்கித் தரச் சொல்றாங்க. ஆட்டோ ரிக்ஷாவோட ப்ரை வேட் டாக்ஸி ஆரம்பிக்கப் போறாரு.

நஷ்டம் வந்து அவஸ்தைப் பட்டா மோர் சோத்துக்கு உன் வேலை. நஷ்டம் வராத மேலமேல போயிட்டோம்... உடம்பெல்லாம் காசுமாலை.''

உண்மையாகவே வருங்கால மனைவிக்கென்று தொப் புள்வரை தொங்குகின்ற ஒரு காசுமாலை செய்து வைத்திருந் தான்.

''வியாபாரிக்கு காசுமாலை தான் லாட்டமான நகை. உருவிப்பாதி வைக்கலாம். மொத்தமா விக்கலாம். சேதாரம் கழிக்க மாட்டான். இந்த மாலை வரும் போகும். அதுக்குத் தான் செய்திருக்கிறது '' கதை சொன்னார்கள்.

''எல்லாருக்கும் கல்யாணம் ஆயிடுச்சுடி உன்னைத் தவிர. ஆறு வருஷம் முன்னாடி வந்தபோது எப்படி இருந்தே தெரியுமா நெகுநெகுன்னு. இப்போ தளைஞ்சு போயிட்டேடி. ப்ளீஸ் எதையாவது பண்ணி சட்டுன்னு கல் யாணம் பண்ணிக்கோ. அப்புறம் இன்னொரு விஷயம் சொல்றேன் கேளு. சங்கர நாராயணன் நல்லவன் தான். ஆனா அவன் அப்பா அம்மால்லாம் பணப் பேய்கள். எல் லாம் லட்சத்துல போறவா. உனக்கு எவ்வளவு தூரம் மரி யாதை இருக்கும்னு எனக்குத் தெரியலைம்மா. நேத்திக்கு அவ அம்மாவைப் பார்த்தேன். சங்கரநாராயணனுக்கு வரன் தேடிண்டிருக்கோம்னா. பஹீரானாயிடுத்து எனக்கு. கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துக்கோடி.''

அவள்சிநேகிதி பேசினாள்.

பயந்து போன புவனேஸ்வரி சங்கர நாராயணனைக் கேட்டாள்.

''ஆமா. இன்னிக்கா வரன் பார்க்கறா. ரெண்டு வரு ஷமா பார்த்துண்டுதானிருக்கா. நான்தான் டபாய்ச்சுண்டு இருக்கேன் வேண்டாம் வேண்டாம்னு. இதுக்குப் போய் ஏன் அழறே. அம்மாவோட வேலை வரன் பார்க்கறது. என் வேலை தட்டிக் கழிக்கறது.''

''என் பேர் சொல்லவேயில்லையா.''

''இப்ப சொன்னா பிரச்சினை வரும். எத்தனை பண் ணுவா, எவ்வளவு செய்வான்னு கேள்வி வரும். இன்னும் ஒரு வருஷம் பொறுத்துக்கோ. அடுத்த வாரம் லைசென்ஸ் வந்து கம்பெனி ஆரம்பிச்சு முதல் லாட் போன பிறகு



வேலையை ரிஸைன் பண்ணிடுவேன். அங்கேர்ந்து பேமெண்ட் வந்தவுடனே கல்யாணம் பண்ணிப்பேன்.''

''எதாவது சந்தேகம் இருக்கா.'' அவன் தெளிவாகப் பேசினான்.

அவள் சந்தேகம் இல்லை என்று சொன்னாள்.

அன்றும் அவர்கள் சினிமாவுக்குப் போனார்கள். முத் தம் கொடுத்துக் கொண்டார்கள்.

வீட்டில் திருமணம் பற்றிப் பேச்சு எடுக்கும் போதெல் லாம் அவள் வேகமாக பல்வேறு விதமாக அதைத் தடுத்து வந்தாள்.

பெண் பார்க்க வருகிறேன் என்று ஒரு வரன் முன் வந்த போது அவள் போன் செய்து அந்தப் பெண்ணுக்கு நீங்கள் பெண்பார்க்க வருவதில் விருப்பமில்லை. எனவே வர வேண்டாம். மீறி வந்தால் வைபவம் நன்றாக இருக்காது என்று எச்சரித்தாள்.

வீடு கேசரியும் பஜ்ஜியுமாய் காத்திருந்தது. அவர்கள் வரவில்லை.

அப்பா விசாரித்தபோது அவர்கள் விவரம் சொன்னார் கள். அப்பாவுக்கு புவனேஸ்வரி மேல் சந்தேகம் வந்தது.

''ஆமா. நான்தான் பண்ணினேன். எனக்கு இப்போ தைக்கு கல்யாணம் வேண்டாம். என்னை கேட்காதீங்க. ரொம்ப தொந்தரவு பண்ணினா நான் லேடீஸ் ஹாஸ்டலுக்கு போயிடுவேன்'' திட்டவட்டமாகப் பேசினாள்.

வீடு பின் வாங்கியது. அமைதியாகியது.

அம்மா பித்துப் பிடித்தவள் போல் தனக்குத்தானே அதிகம் பேசிக் கொண்டிருந்தாள். வேலைக்காரியிடம் பூக் காரியிடம் தன் நிலைமை சொல்லியழுதாள். அதற்காகவும் புவனேஸ்வரியிடம் திட்டு வாங்கினாள்.

''லைசென்ஸ் கிடைச்சிடுத்து... மூணு கோடி ரூபாய்க்கு எக்ஸ்போர்ட் பண்ணலாம். நான் நாளைலேர்ந்து லீவு. பஸ் ஸ்டாண்டுக்கு வரமாட்டேன். என்னைப் பார்க்க ணும்னா திருவான்மியூர் வா. ஆனா அடிக்கடி வராதே. முதல் லாட் நாற்பது லட்ச ரூபா சரக்கு கேட்கறான். அனுப்பி அப்ரூவ் ஆயிடுத்துன்னா இருபது லட்ச ரூபா கிடைக்கும். கம்பெனி ஆரம்பிக்க ஒருமாசம். புரொடக்ஷனுக்கு ரெண்டு மாசம். கைக்கு காசு வர ஒரு மூணுமாசம். இன்னிலேர்ந்து ஆறுமாசத்துல இருபது லட்ச ரூபா சம்பாதிச்சுடுவேன். ஜெயிச்சுட்டு வந்து உன்னைப் பார்க்கறேன்.''

விடை பெற்றுப் போனான்.

அவள் நடை பிணமாய் திரிந்தாள். முதல் லேடீஸ் ஹேண்ட்பேக் செய்து பூஜையில் வைத்த போது அவளைக் கூப்பிட்டான். ஒரு மாதத்தில் அவன் முகமே மாறிப்போயிருந்தது. அதிகம் அலட்டிக் கொண்டான். எல்லோரையும் கடிந்து கொண்டான். ஒரு பழைய மாருதி வேனை மூன்று மாத வாடகைக்கு எடுத்திருந்தான்.

"தயவு செய்து என் அவசரத்தைப் புரிஞ்சுக்கோ. நான் பேசலையேன்னு வருத்தப்படாதே" கையைப் பிடித்து கெஞ்சினான்.

அவள் ஒரு வேதனையுடன் வீடு வந்தாள். வேதனை மறக்க மறுபடி கனவுகளில் மூழ்கினாள்.

அரக்கோணம் என்றார்கள் வாணியம்பாடி என்றார்கள். டெல்லி என்றார்கள். நூல் வாங்கப் போனதாகச் சொன்னார்கள்.

ஒரு முறை போன் செய்தபோது இன்னி தேதிக்கு பத்து லட்ச ரூபா கிடைக்கலை... போட்ட இருபத்திரெண்டு லட்சமும் க்ளோஸ்... நான் உன்னைக் கொடுன்னு கேட்கலை. எனக்காகப் பிரார்த்தனை பண்ணு. அது போதும்.

அடுத்த இரண்டு மாதம் அவனைக் கண்டே பிடிக்க முடியவில்லை. அவன் சரக்கு அமெரிக்காவுக்குப் போயிற்று. யாரோ அழைக்க அவன் கனடா போனான். கனடாவிலிருந்து அமெரிக்கா போனான். போனவன் என்ன ஆனான் என்று தகவலே இல்லை. அலுவலகத்தில் மேலும் சிலருக்குக் கல்யாணமாயிற்று.

"புவனேஸ்வரி நீ பார்க்கறத்துக்கு நன்னாவே இல்லைடி. கன்னம் ஒட்டி மார் தளர்ந்து. தொப்பை விழுந்து என்னமோ மாதிரி ஆயிட்டே... கல்யாணம் ஆகி ரெண்டு பெத்தவ மாதிரி இருக்கு. அவன் வருவானா. சங்கர நாராயணனைப் போய் பாருடி. எனக்கென்னவோ பயமா இருக்கு.

சிநேகிதிகள் தொந்தரவு செய்தார்கள். கடுமையாய் எச்சரித்தார்கள்.

"அவன் வரான், வரலை நீ ஏன் உன்னைப் பாழ் பண்ணிக்கறே. சந்தோஷமா இரேன். கலகலப்பா சிரியேன். எப்பவும் ஏன் கவலையா இருக்கே. ஆம்பிளைகள் மேல் சந்தேகத்தோடயே இருடி."

அவர்கள் சந்தேகத்தோடு பேசினார்கள். அவர்கள் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது.



சங்கர நாராயணன் போன் செய்தான். அவசரமாகப்
வேண்டும் என்றான். அலுவலகத்துக்கு வந்து கூட்டிப்
கிறேன் என்றான். புதிய மாருதியில் வந்து இறங்கி
ன். அமெரிக்கா வாசனை ஆளைத் தூக்கியது. அமெ
க ஆங்கிலம் ஆளை அசத்திற்று. மத்திய சர்க்கார் வேலை
த் தன் வளமான எதிர்காலம் கருதி ராஜினாமா செய்ய
ப் எழுதிக் கொடுத்தாள். கணக்கு முடிக்க வேண்டிக்
ண்டாள். அவனோடு கடற்கரை போய் உட்கார்ந்து
ண்டாள்.

"எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு, புவனேஸ்வ
என்றான்.

அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

"பதினைஞ்சு லட்ச ரூபாய் தேவையாய் இருந்தது.
ன் அண்ணாவோட ஃப்ரெண்ட் நான் தரேன்னாரு. பார்ட்
ரா சேர்த்துக்கங்கன்னு சொன்னேன். பார்ட்னரா என்னைச்
ர்த்துக்காதீங்க. என் தங்கையைச் சேர்த்துக்கங்கன்னாரு.
ன் புரியாம முழிச்சேன். லைஃப் பார்ட்னர்னு சொன்
ரு. கனடால இருக்கா, போய் பாருங்கன்னு டிக்கெட்
ாங்கிக் கொடுத்தாரு. நான் கனடா போய், அந்தப் பெண்
ணோட தான் அமெரிக்காவுக்குப் போனேன். நாலுநாள்
லியா அவகூட தங்கினேன்.

ஒவ்வொரு இடத்திலயும் அவதான் சொல்லிக்
டுத்தா எப்படிப் பேசணும் என்ன செய்யணும்னு. ஆறு
ள் இந்தியாவுலேர்ந்து குட்ஸ் அனுப்பியிருந்தாங்க. நாலு
ள் பாகிஸ்தான்லேர்ந்து அனுப்பியிருந்தாங்க. என்னுது
ன் ஃபர்ஸ்ட் அப்ரூவ்ட், எல்லாத்துலயும் அவள் லேபின்
ட்டச் சொல்லியிருந்தாள். எனக்கு அந்த மோல்ட் கிடைக்
லை.

அவன்கிட்டேயே மோல்ட் வாங்கி ப்ளாஸ்டிக்ல
ண்டு லட்சம் பீஸ் பண்ணச் சொல்லி ஆறாயிரம் பேக்ல
ஒருநாள் உட்கார்ந்து நானே பின் அடிச்சக் கொடுத்தேன்.
வளும் ஹெல்ப் பண்ணினா. நாலாம் நாள் அமெரிக்கன்
ங்க் செக் கொடுத்துட்டான். இருபத்திமூணு லட்சரூபா
பம். கைல ஒரு கோடி ரூபாய்க்கு ஆர்டர்.

நானும் அவளும் ஒரு சந்தோஷத்துல ரொம்ப நெருக்க
யிட்டோம். எனக்கு அவ வேணும். என் வளர்ச்சிக்கு
வ வேணும். கல்யாணம் ரிஜிஸ்டர் மேரேஜ். அடுத்தமா
இருக்கும். ஒரு கோடி ரூபா எக்ஸ்போர்ட் பண்ண
ம்னா அவ இல்லாம முடியாது. அவ உன்னைவிட நல்ல

பார்ட்னர்.

உன்னை நான் வெறுமே தொடத்தான் செய்தேன். அவ ளோட ஒரு வாரம் புருஷன் பொண்டாட்டியா இருந்தாச்சு அடுத்த வாரம் அவ இந்தியா வரா.

ஜோ தயவு செய்து என்னை மறந்துரு. வேற எதாவது கலாட்டா பண்ணினா உனக்குத் தான் கஷ்டம். பதினைஞ்சு லட்ச ரூபா உன்னால தரமுடியாது. அமெரிக்கன் ஆட்ட வாங்கித் தரமுடியாது. அமெரிக்காவுக்கு வந்து அதை சரி செய்ய முடியாது. அவனால முடியும்.

உன்னோட பார்க்கற போது அழகு கம்மிதான். பயங் ரமா கறி திங்கறா. தமிழ் படிக்க வராது. எங்கம்மாவுக்கெல் லாம் கொஞ்சம் கூட சரிப்படமாட்டா. தண்ணி போட்ட சிகரெட் பிடிக்கறா. கல்யாணமான பிறகு எங்கம்மா எதிர்க் சிகரெட் பிடிக்கப் போறேன்னு சொல்லிருக்கா. அதை நினைச்சாலே சிரிப்பு வர்றது.

அவ வேற உலகம். அந்த உலகம் எனக்குப் பிடிச் ருக்கு. எனக்கு மெட்ராஸ் பிடிக்கலை. நியூயார்க்ல எ தனை ஜனங்கள். ஆனா எவ்வளவு நீட்டா இருக்கு தெ யுமா. நயாகரா வழியாதான் கனடாவுக்கு க்ராஸ் பண்ண ணும். அருவின்னா அதான் அருவி. நான் ரொம்ப நாளா ஆசைப்பட்ட வாழ்க்கை எனக்குக் கிடைக்கப் போறது.

இந்த வாழ்க்கைக்காக நான் உன்னை மட்டும் இழக்க போறதில்லை. எங்கம்மாவை இழக்கப் போறேன். எங்க பாவை இழக்கப் போறேன். என் வீட்டு மனுஷா நிறை பேரை இழக்கப் போறேன்.

எங்கம்மா முடியாதுன்னு கத்தறா. தூக்குப் போட் செத்துப் போயிடுவேன்னு கத்தறா. நான் சொல்றவனை தான் கல்யாணம் பண்ணிக்கணும்கறா. அப்போ நான் தூக் போட்டு செத்துப் போயிடுவேன்னு சொன்னேன்.

தினம் வீட்ல சண்டை. அன்னிக்குப் பார்த்தியே ஒ மாமி. அவாள்ளாம் எங்கம்மாவுக்கு சப்போர்ட். நான் இ னும் லாபக் கணக்கு சொல்லலை. அவ வந்த பிறகு சொல்ல போறேன்.

தயவு செய்து என்னை மறந்துடு. நான் வேணும்டாறு பண்ணலை. விதி மாத்திடுத்து. யோசனை பண்ணி கெட்டி காரத்தனமா நடந்துக்கோ.''

அவளைக் கடற்கரையில் விட்டு விட்டு அவன் கா திப் போனான்.



அவள் வீட்டுக்குப் போனாள். அப்பாவையும், அம்மா வையும் கிழக்கு பார்த்து நிற்க வைத்தாள். தமஸ்காரம் செய் தாள். ஓவென்று வாய்விட்டு அழுதாள். யாரோ செத்துப் போனது போல அழுதாள்.

அந்தப் பெற்றோர்கள் பதறினார்கள். அம்மாடி அம் மாடி... என்று அவளை அணைத்துக் கொண்டார்கள். எந் தக் காரணமும் தெரியாமல் அவர்களும் அழுதார்கள். அந்த நல்ல பெற்றோரிடம் தான் ஏமாந்ததை புவனேஸ்வரி சொன் னாள்.

''அவ்வளவுதானே. பிடைவே போச்சு போ. உனக்கு அந்தவிட நல்ல வரன் கிடைக்கும். எப்பாடுபட்டாவது உனக்கு இந்த வருஷத்துக்குள்ள கல்யாணம் பண்ணி வைக் கிறேன்.''

அப்பா குளுரைத்தார்.

அவள் ஒரு வாரம் விடுப்பு எடுத்துக் கொண்டாள்.

அந்த அவரைக்காய் தலைப் பெண்மணியின் மகன் இறந்து போனான் என்று மறுவாரம் அலுவலகம் போகும் போது அவளுக்குச் சொல்லப்பட்டது.

அந்த அலுவலகத்தில் பல பேர் அந்த சாப விசேஷத்தை ச்து சொல்லிவிட்டுப் போனார்கள். அவளை விநோதமா ப் பார்த்தார்கள்.

அவள் காதல் தோல்வி வெளியே தெரியவில்லை. ருக்கும் எந்த சந்தேகமும் வரவில்லை.

ஆனால் அந்த சண்டாளன் எளிமையான புதிவுத் திரு ணம் என்று சொன்னவன் சோழா ஹோட்டலில் திருமண ரவேற்பு என்று எல்லோருக்கும் கூரியர் மூலம் பத்திரிகை னுப்பினான். அவளுக்கு மட்டும் அனுப்பவில்லை.

புவனேஸ்வரிக்கு மிகப் பெரிய அவமானமாகப் பாய் விட்டது. என்னடி என்னடி என்று சிநேகிதிகள் ளைத்தார்கள்.

''நீ ஏன் சும்மா இருக்கே. வா, நாலு வார்த்தை கேட் டு வரலாம்'' கோபப்பட்டார்கள்.

புவனேஸ்வரி தோழிகளிடம் எல்லா விபரமும் சொன் னாள். உடைந்த கண்ணாடியை ஒட்ட வைக்க முடியாது ன்று தத்துவம் பேசினாள். இது விதி. தன் தலையெழுத்து. போகக் கோளாறு என்று நொந்து கொண்டாள்.

தோழிகள் அவனை வாயார சபித்தார்கள்.

''ஐஸ்க்ரீம் மேல குலோப்ஜாமூன் போட்டு சாப்பிடக்

கொடுத்தாம்ப்பா. நம்மளா எடுத்து போட்டுக்க வேண்டிய
துதான். அதுக்கு என்னவோ பேர் சொல்றாங்களே...?''

சங்கரநாராயணன் ரிஸப்ஷனுக்கு தயங்கித் தயங்கி
போய் வந்தவர்கள் சப்பு கொட்டினார்கள்.

''பொண்ணு நல்லா இல்லை. தலை முடியெல்லாம்
வெட்டிட்டு குரங்கு மாதிரி இருக்கு. ஆனா கோடி கணக்குல
துட்டு இருக்காமே. ஆஸ்திரேலியாவுல காடு இருக்காம்
சிங்கப்பூர்ல வீடு இருக்காம். கடைால தோட்டம் இருக்காம்
அமெரிக்கால ஆபீஸ் இருக்காம். ஏகப்பட்ட வெள்ளைக்கா
ரங்க வந்தாங்கப்பா. வரவங்களுக்கெல்லாம் கல்யாண
பொண்ணு கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்தது்ப்பா.''

''யாருக்கு யார் என்னா கொடுத்தா என்ன... சங்க
பேரைச் சொல்லி வண்ணமா தின்னுட்டு வந்துட்டோம். ஒரு
சாப்பாடு இருநூத்தி நாப்பது ரூபாயாம்.''

போய் வந்தவர்கள் பெரிய கதையடித்தார்கள்.

''நம்ம ஆபீஸ்ல ஒரு ஆம்பளை இருக்காண்டி. நம்
ஆபீஸ் வரதராஜன் இல்லை, மூக்கெல்லாம் அம்மை
தழும்பா. உனக்காக அவரைக்கா மண்டைக்கிட்ட சண்
போட்டானே. அவன் ரிஸப்ஷனுக்குப் போய் கை குலு
கிட்டு கேட்டானாம். ஒரு சின்னப் பொண்ணை ஏமாத்தி
இவளைக் கைபிடிச்சுட்டு நிக்கறயே, நீ நன்னா இருப்பியா
காசுக்குத்தானே இவளைக் கல்யாணம் பண்ணிக்கறே.
என்ன சம்பாதிச்சாலும் நிம்மதி இருக்காது. நீ நன்னா இருக்
மாட்டேன்னு சொல்லிட்டு வந்துட்டாராம்.

சங்கர் ஒரு செகண்ட் பயந்தானாம். அப்புறம் சுதாரி
சுண்டு சாப்பிட்டுப் போங்கோ சார்னானாம்.

இங்க சாப்பிடறதுக்கு வேற எதாவது திங்கலாம். நா
சாப்பிடறதுக்கு வரலைன்னு வரதராஜன் திரும்பி வந்துட்ட
னாம்.''

''சரியான ஆம்பளைடி அவன்.''

''உன் மேல ஏன் இவ்வளவு அக்கறை இருக்குன்
தெரியலை.''

''இத்தனைக்கும் உன்கிட்ட அவன் ஜாஸ்தி பேசின
இல்லையே.''

தோழிகள் வெவ்வேறு விதமாய் அதிசயித்தார்கள்.

புவனேஸ்வரி மெல்ல அவன் வந்து தன்னிடம் பே
னதை, தன்னை நேசிப்பதாய் சொன்னதை தோழிகளிட
வெளிப்படுத்தினாள்.



''அடிப்பாவி... விட்டுட்டியேடி.''

''அவன் மூஞ்சி பார்த்து வேணாம்னுட்டியா...''

''ஆம்பளைக்கு மூஞ்சியாடி அழகு. மனக்குதான் ஆம்
பளைக்கு அழகு. அதான் கம்பீரம். உன்னை அந்த வரதரா
ஜன் கண்ணுல வச்சு காப்பாத்தியிருந்திருப்பான்.''

''இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகலை. நான் போய்
கேட்டுட்டு வரேன். எங்க புவனேஸ்வரியைக் கல்யாணம்
பண்ணிக்கறயா... சொல்லுன்னு கேட்டுட்டு வரேன்.''

''நீ கேட்காதே. அவனே கேட்கட்டும்.''

''ஐயோ. நான் கேட்க மாட்டேன். எனக்கு பயமா
இருக்கு'' புவனேஸ்வரி மறுத்தாள்.

''வேணாம்டி. நான் கேட்கறேன்'' எவளோ ஒருத்தி
முன்வந்தாள்.

''வேண்டாம். இது தப்பு. சரியா வந்துடுத்துன்னா இது
நன்னா இருக்கும். சரியா வரலைன்னா நீ மாட்டிக்குவே.
இது அவ கல்யாணம் அவனே பேசட்டும்.''

''அவ கேட்கறது நல்லா இருக்காதுடி.''

''ஏன்''

''கொஞ்சம் சங்கரநாராயணனோட ஊர் சுத்திட்
டாளே. நாலு பேருக்குத் தெரிஞ்சுடுத்தே.''

''அப்ப கேட்கவே கேட்காதே.''

''கேட்டா அவமானம்னு தானே பயப்படறேள். நான்
அவமானப்படறேன். புவனேஸ்வரிக்காக அவமானப் பட
றேன். கேட்டிருந்தா நான் சரின்னு சொல்லிருப்பேனேன்னு
அவன் சொல்லிடக்கூடாது. ஒரு சான்ஸ் கேட்டுப் பார்ப்
போம்.''

''வேண்டாம். அவ கேட்கட்டும்''

''அவ கேட்டா நல்லா இருக்காது.''

''இல்லை. அவதான் கேட்கணும்.''

தோழிகள் அவள் தலையை உருட்டினார்கள்.

மூன்று நாள் கழித்து வரதராஜன் அவளுக்கு போன்
செய்தான்.

''உன் கல்யாணத்துக்கு ஏன் கண்ட சனியனை அனுப்
றே. அவளுக்கு என்ன ரைட் இருக்கு உன் கல்யாணம்
பத்திப் பேச. நான் சொல்றதை புரிஞ்சுக்கோ. உன் பேர்
கெட்டுப் போயிடுத்து. சங்கரநாராயணனோட சுத்தி எல்லார்
வாயிலயும் விழுந்து எழுந்தாச்சு. உன்னைப் பத்தி உயர்

வான அபிப்ராயம் இந்த ஆபீஸ்ல யாருக்கும் இல்லை. ரெண்டு மூணு வருஷம் அமைதியா இரு. எல்லாரும் எல்லாத்தையும் மறக்கட்டும். அப்புறம் உன் கல்யாணத்தைப் பத்திப் பேச ஆரம்பிக்கலாம்.

என்ன பண்றது. நீ பண்ண தப்புக்கு இதுதான் தண்டனை."

காதல்ங்கறது இந்த ஊர்ல லக்ஸரி. கேளிக்கை. கேளிக்கைக்கு நிச்சயமா வரி உண்டு: காதலுக்கு வரி கல்யாணம். அப்படி வரி கட்டலையா பெனால்ட்டி கட்ட வேண்டியிருக்கும். நீ இப்போது பெனால்ட்டி கட்டறே. காதல்ல தோல்வி அடைஞ்சா தண்டனை தனிமை. உன்னுடைய தோழிகள் உன்னைக் குழப்பறா. உன்னை முட்டாளாக்கறா.

உனக்கு ஏண்டி கல்யாணம் ஆகலை... உனக்கு ஏண்டி கல்யாணம் ஆகலைன்னு நாள் தவறாம நச்சரிக்கறா. உன் கல்யாணம் பத்தி இவாளுக்கு என்ன அக்கறை. உன் கல்யாணம் உன் விஷயம். இவாளுக்கு என்ன பேச்சு. உன் கல்யாணத்துல பல நூறு சிக்கல் இருக்கும். இவாளுக்கு என்ன போச்சு.

உலகத்துல மனுஷாளுக்குக் கல்யாணம்தான் பெரிய குவாலிஃபிகேஷனா, கல்யாணம் பண்ணாதவனெல்லாம் மனுஷா இல்லையா. அவா வாழ்க்கை மூடிஞ்சு போன ஒன்னா. படிப்பு இல்லாத, பண்பாடு இல்லாத பொம்மனாட்டிகள் போல சில பேர் இந்த ஆபீஸ்ல நடந்துக்கறா. அவாகிட்டேருந்து தள்ளி நில்லு.

நீ மிஸ்ஸா. மிஸஸ்ஸா... அப்படி கேட்கக்கூடாதுன்னு தானே வெறும் எம்எஸ்னு போட்டு இப்ப கூப்பிடச் சொல்றா. மிஸஸ் ஒரு குவாலிஃபிகேஷன் இல்லை. கம்பீரமா இரு.

உன் கல்யாணத்தை நீ கவனிச்சுக்கோ. வேற எவளையும் பேச விடாதே. அப்படி பேசறேன்னு வரவாளை அவாய்ட் பண்ணு.

உன்னை ஏமாத்தி அந்த அவரைக்காய் மண்டை பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணினா. புள்ளை அடிபட்டு செத்துப்போயிட்டான். அப்படி செத்துப்போனதுக்குக் காரணம், தான் பண்ணின தப்புதான்னு உட்கார்ந்து அழுதுண்டு இருக்கா.

இதுதான் கர்ம வினை.

நீ ஒரு கர்மா பண்றே. அதாவது ஒரு காரியம் செய்



றே. நீ என்ன விதமா செய்யறயோ அந்தத் தாக்கம் உன் மனசுல நன்னாப் பதிஞ்சுடறது. தப்பா ஏமாத்தவா பண்ணினா உனக்கு பயம் வர்றது. சரியா தெளிவாப் பண்ணினா உனக்கு தைரியம் வர்றது.

உன்னுடைய பயம் உனக்கு வர்ற துன்பத்தோட இதை முடிச்சுப் போடறது. உன்னுடைய தைரியம் உனக்கு வர்ற துன்பத்தை ஏத்துக்கத் தயாராயிடறது. இந்தத் துன்பம் சீக்கிரம் சரியாயிடும்னு நம்பிக்கை தர்றது."

"அதனால உன் மனசுதான் உன் வாழ்க்கைய தூக்கு து.

அவ பிள்ளை செத்ததுக்கு நீ காரணமில்லை. உன்னை ஏமாத்தினது காரணமில்லை. ஆனா அந்த அவரைக்கா மண்டை மூடிச்சு போட்டுண்டு அழறா.

அதே தப்பை நீயும் பண்ணாதே. உனக்குன்னு யாராவது இருப்பா. கூனிக்கேத்த கூனன். கூனனுக்கேத்த கூனி. உலகத்துல நிச்சயம் உண்டு.

உன்னை விட மோசமான நிலையில இருந்த பொண்ணுங்களுக்கெல்லாம் கல்யாணம் ஆகியிருக்கு. உனக்கு ஆகறது கஷ்டமேயில்லை. தைரியமா இரு. சந்தோஷமா இரு. கடவுள் மீது நம்பிக்கையோட இரு.

மூணு தங்கைகளுக்கு கல்யாணமாகிக் கொடுத்து, அந்த மூணு கல்யாணத்து அனுபவங்கள் என்கிட்டே இருக்கு. அந்த தைரியத்துல சொல்றேன்.

உன் வாழ்க்கையை ஆபீஸ் ஃப்ரெண்ட்ஸ் கிட்ட கொடுக்காதே. ஆபீஸ் வேலை செய்யற இடம். கல்யாணத்துக்கு கூடம் இல்லை. இது மேட்ரிமோனியல் ஆபீஸ் இல்லை. எப்பவும் சாப்பாடு பத்திப் பேசற அடுப்படி இல்லை. உண்மையில்லாத, உழைப்பு இல்லாத, ஆசாமிகள் தானாவது பேசிண்டிருப்பா. அந்த க்ரூப்ல சேராதே

நிறைய வேலை இருக்கற செக்ஷனா மாத்திக்கோ. சுறுசுறுப்பா இரு. நிறைய வேலை செய்தா நன்னா தூக்கம் வரும். ராத்திரி நன்னா தூங்கினா மறுநாள் சந்தோஷமா இருக்கும். நாலாவது எக்ஸாமும் எழுதிடு.

கடைசியா ஒரு விஷயம் சொல்லட்டுமா. எனக்கு தெரிஞ்ச பொண்ணுக்குக் கல்யாணம். என் சொந்தக்காரப் பொண்ணு ஒருத்தி சின்ன வயசுல விதவையாயிட்டா. வயத்துல குழந்தையோட இருக்கும் போது, புருஷன் ரெண்டு நாள் ஜுரத்துல செத்துப் போயிட்டான். இப்போ அந்தப் பொண் குழந்

தைக்கு அஞ்சு வயசு. அந்த அஞ்சு வயசுக் குழந்தை என்னை அப்பான்னு கூப்பிட ஆரம்பிச்சுடுத்து. நாளை லேர்ந்து நான் பதினைஞ்சு நாள் லீவு. இங்கே யாருக்கும் இது தெரியாது. இதுல என்ன ஒரு தமாஷ் தெரியுமா. அவ பேரும் புவனேஸ்வரிதான்.

முடிஞ்சா நாளைக்கு நானும் என் குடும்பமும் நல்லாயி ருக்க, ப்ரேயர் பண்ணு. நான் வரட்டுமா.''

போன் துண்டிக்கப்பட்டது.

''என்னடி... என்னடி...'' சிநேகிதிகள் துளைத்துக் கேட்டார்கள்.

''வரதராஜன்தானே... என்ன சொன்னான்'' தூண்டித் துருவினார்கள்.

அவள் பர்மிஷன் போட்டு விட்டு ஆஞ்சநேயர் கோயில் போனாள். ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயரையே வெறிக்கப் பார்த்தாள். பார்த்து விட்டு அழுதாள். பிறகு மெல்ல சிரிக்கத் துவங்கினாள். கை கூப்பினாள்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே — என்றாள்.

ஹனுமத்சாலிஸா என்கிற ஸ்லோகத்தை உலக க்ஷேமத்திற்காகத் தரையில் உட்கார்ந்து சொல்லத் துவங்கி னாள்.

அவளுக்கு அமைதியாயிருப்பது என்ன... தனித்திருப் பது என்ன... தெளிவோடு இருப்பது என்ன... என்கிற மூன்றும் முற்றிலுமாய் புரிந்து போயிற்று.

அந்த ஆஞ்சநேயர் சிலையிலுள்ள பூமாலை சரசரவென்று பூக்கள் உதிர அவிழ்ந்து ஊசலாடியது. அருகிலுள்ள யாரோ ஆஹா என்று பரவசப்பட்டார்கள்.

——— முற்றும் ———



# வாசகர் பேரவை

பல்சுவை நாவல் வாசகர் பேரவைக்கு தேர்வு பெற்ற பட்டியல் கீழே பிரசுரிக்கப் படுகிறது. பட்டியல் தொடர்ந்து வெளியிடப்படும். மேலும் வாசகர் பேர வைக்கு புதிய உறுப்பினர்கள் வரவேற்கப் படுகிறார்கள். இந்தப் பேரவையில் இணைய விரும்பும் வாசகர்க ளுக்கு தனியே கூப்பன் பிரசுரிக்கப் பட்டுள்ளது. தங்க ளுடைய சிறு அறிமுகப் படலத்துடன் வயது மற்றும் முழு விலாசத்தையும் தபால் கார்டில் எழுதி கூப்பனை யும் ஒட்டி அனுப்பினால் பேரவையின் உறுப்பினராக லாம்.

76. வி.தமிழ்மணி,
மணலூர்,
மருதூர் - 609804.

77. அ.துரைபதி,
தாம்பரம்,
சென்னை - 45.

78. எஸ்.தாமோதரன், பி.காம்.,
பொள்ளாச்சி,
கோவை - 64209.

79. கோ.செல்வராஜ்,
மூத்தூர் - 638105
பெரியார்.

80. பூ.கிருஷ்ணமூர்த்தி,
மன்னார்குடி - 614001.

1481. த.அருணகிரி,
திருமழிசை - 602107.

1482. வி.செல்வ வினாயகம்
மூர்த்தி,
பெரிய அகரம்
-604202.

1483. எம்.செந்தில்,
அன்னசாகரம்,
தருமபுரி - 636 704.

1484. பொன்.தமிழ்செல்வி,
கொடுங்கையூர்,
சென்னை - 600118.

1485. எ.கே.வெங்கடராஜ்,
சென்னை - 21.